


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 ஜூலை 01, 2010 புரட்சி 9 முழக்கம் 25 விலை: ரூ.2.50


## 11 நாட்கள் : 80 பரப்புரைக் கூட்டங்கள்

# 2 ஆம் கட்ட சாதி ஒழிப்புப் பயண எழுச்சி



சாதி - தீண்டாமை ஒழிப்பின் முதல் கட்டமாக பெரியார் திராவிடர் கழகத்தின் பரப்புரைக் குழு ஏப்.14 ஆம் தேதி போடியில் தொடங்கி, 28 நாள் பயணம் நடத்தி, புதுவையில் நிறைவடைந்தது. தொடர்ந்து இரண்டாவது கட்டமாக சாதி - தீண்டாமைக்கு எதிரான பரப்புரைப் பயணம், சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகத் தோழர்களால், கடந்த ஜூன் 12 ஆம் தேதி கூடுவாஞ்சேரியில் தொடங்கி, 22 ஆம் தேதி காஞ்சியில் நிறைவடைந்தது. 11 நாட்களில் 80 பரப்புரை நிகழ்ச்சிகளை தோழர்கள் செய்துள்ளனர். சாதி - தீண்டாமை எனும் சமூகக் கொடுமைக்கு எதிராக கழகம் நடத்திய பரப்புரைக்கு கட்சிகளைக் கடந்து, ஒடுக்கப்பட்ட மக்களும், சாதி எதிர்ப்பாளர்களும் வரவேற்று உற்சாகப்படுத்தினர். கழக சார்பில் வெளியிடப்பட்ட தமிழகத்தில் சாதி-தீண்டாமைகளை புள்ளி விவரங்களோடு விளக்கும் கள ஆய்வு நூல்கள் ஏராளமாக மக்களிடம் பரப்பப்பட்டன. நாடு முழுதும் நிலவும் இரட்டைக்குவளை, இரட்டை சுடுகாடு, இழி தொழில்களை செய்யுமாறு கட்டாயப்படுத்துதல் போன்ற தீண்டாமைக் கொடுமைகளுக்கு சாதி ஆதிக்கத்தின் செல்வாக்குக்கு காவல்துறை அடி பணிந்து கிடப்பதை தோழர்கள் எடுத்துக்காட்டினர். பரப்புரைப் பயணத்தின் மூன்றாவது கட்டப் பிரச்சாரம் அடுத்த நாளே ஜூன் 23 இல் குடந்தையில் தொடங்கிவிட்டது. ஜூலை 6 ஆம் தேதி வரை தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் பரப்புரை தொடர்கிறது.

வடமாவட்டங்களில் சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் நடத்திய இரண்டாவது கட்டப் பயணம் பற்றிய செய்தித் தொகுப்பு:

12.6.2010 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் தமிழின உரிமைகளை மீட்டெடுப்போம் பொதுக் கூட்டமும், சாதி-தீண்டாமைக்கு எதிரான பெரியார் கொள்கை பரப்புரை பயணத்தின் 2 ஆம் கட்ட துவக்க நிகழ்ச்சியும் செங்கை மாவட்டம் கூடுவாஞ்சேரி (சென்னை) பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. தோழர் மு. தினேஷ்குமார் தலைமையில் ஆ.முருகன், வி.பாபு, ரா.சசி ஆகியோர் முன்னிலை வகிக்க பொன். விஜயகுமார் வரவேற்புரையாற்றினார். பெரியார் சமூக நீதிப் பேரவை ஒருங்கிணைப்பாளர் மா.சமத்துவமணி, விடுதலை சிறுத்தைக் கட்சி மாவட்ட துணைச் செயலாளர் தே.தென்னவன், கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினர். சிற்பி இராசன் ‘மந்திரமல்ல! தந்திரமே!’ அறிவியல் விளக்க கலை நிகழ்ச்சியை நிகழ்த்தினார். அன்பு தனசேகரன், ரா. உமாபதி, தபசி குமரன், ரா. சுகுமார் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இறுதியில் டேவிட் பெரியார் நன்றி கூறினார்.

சாதி-தீண்டாமைக்கு எதிரான பெரியார் கொள்கை பரப்புரை பயணத்தில் பங்கேற்கும் தோழர்கள் அன்று இரவு தங்குவதற்கு புஞ்சை

(4 ஆம் பக்கம்)

### 1957 இல் ஜூன் 22 இல் சாதி ஒழிப்புப் படை புறப்பட்ட அதே நாளில்...

## குடந்தையில் தொடங்கியது 3வது கட்டப் பரப்புரை

குடந்தையில் 1957 ஆம் ஆண்டு இதே ஜூன் 23 ஆம் தேதி சுயமரியாதை வீரர் நீடாமங்கலம் அ. ஆறுமுகம் தலைமையில் ஆனைமலை நரசிம்மன் அவர்களை தளபதியாகக் கொண்டு, சாதி ஒழிப்புப் பிரச்சாரப் படை புறப்பட்டு சென்னைக்கு நடந்தே சென்றது. ஜூன் 23 ஆம் தேதி புறப்பட்ட அந்தப் பிரச்சாரப் படை, ஜூலை 30 ஆம் தேதி சென்னை வந்தடைந்தபோது கடற்கரையில் மாபெரும் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. அப்போது சென்னையில் பார்ப்பன ஆதிக்கச் சின்னமான ‘பிராமணாள் காபி ஓட்டல்’ என்ற பெயர் பலகையில் இடம் பெற்ற ‘பிராமணாள்’ பெயரை அகற்றக் கோரி, திராவிடர் கழகம் - சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள ‘முரளிஸ் கபே’ என்ற உணவு விடுதி முன் தொடர் மறியல் நடத்தி வந்தது. ஒவ்வொரு நாளும் தோழர்கள் கைதானார்கள். தொடர் போராட்டத்தில் பங்கேற்ற தோழர்களுக்கும் பரப்புரை நடைப்பயணத்தில் பங்கேற்ற தோழர்களுக்கும் தேவையான உணவுக்கான அரிசி, பருப்பு போன்ற பொருட்களை பிரச்சாரப் படை வழி நெடுக பொது மக்களிடமிருந்தே திரட்டிச் சென்றது. பிரச்சாரப் படையின் பின் வந்த மாட்டு வண்டி ஒன்றில், அந்த உணவுப் பொருட்கள் ஏற்றப்பட்டு, சென்னை வந்து சேர்ந்தன. சென்னை வந்து சேர்ந்த அடுத்த சில நாட்களிலேயே ஆகஸ்ட் 2 ஆம் தேதி படைத் தலைவர் அ.ஆறுமுகம், தளபதி ஆனைமலை நரசிம்மன் ஆகியோர் கைது செய்யப்பட்டு, 5 வாரம் சிறைத் தண்டனைக்குள்ளானார்கள்.

அதே ஆண்டில் ஆகஸ்ட் 18 ஆம் தேதி வடாற்காடு மாவட்டத்திலிருந்து சென்னை நோக்கி கருஞ்சட்டைத் தோழர்களின் சாதி ஒழிப்புப் பிரச்சாரப்படை புறப்பட்டது.

1954 ஆம் ஆண்டு பார்ப்பன ராஜகோபாலாச்சாரி, குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தபோது, நாகையிலிருந்து குலக்கல்வித் திட்ட எதிர்ப்புப் பிரச்சாரப் படை ஒன்று, சுயமரியாதை வீரர் நீடாமங்கலம் அ.ஆறுமுகம் தலைமையில் புறப்பட்டது. முன்னதாக நாகையில் மார்ச் 27, 28 தேதிகளில் ஆச்சாரியார் கல்வித் திட்ட எதிர்ப்பு மாநாடு நடந்தது. மாநாட்டில் அடுத்த நாளே எதிர்ப்புப் பிரச்சாரப் படைப் புறப்படுவது என நாள் குறிக்கப்பட்டது. ஆரிய பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்கும் எத்தகைய போராட்டத்துக்கும் தயார் என்று நாடு முழுதுமிருந்தும் ரத்தக் கையெழுத்திட்டு பெரியாருக்கு தோழர்கள் கடிதங்களை அனுப்பினர்.

குலக்கல்வித் திட்ட எதிர்ப்புப் படை புறப்பட்ட அடுத்த இரு நாட்களிலே மார்ச் 30 ஆம் தேதி ஆச்சாரியாரின் முதல்வர் பதவி ஆட்டம் கண்டது. ஆச்சாரியார் உடல் நலமில்லை என்று கூறி அஞ்சி ஓடினார். காமராசர் முதல்வரானார். குலக் கல்வித் திட்ட எதிர்ப்புப் படை வெற்றி பெருமிதத்தோடு சென்னை வந்து சேர்ந்தபோது கடற்கரையில் 14.4.1954 அன்று பெரியார் மிகப் பெரும் வரவேற்புக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். மேடைகளில் படைவீரர்களை நிறுத்தி, கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்திய பெரியார், “இவர்கள் படையாக வந்து, இங்கு போராடி சிறை செல்ல எண்ணினார்கள். பாவம்! ஏமாந்தார்கள். காமராசர் இவர்களை ஏமாற்றி ஆச்சாரியார் திட்டத்தை ஒழித்துவிட்டார் என்று பெரியார் கூறியபோது, கூட்டமே கரவொலியால் அதிர்ந்தது.

பெரியார் பரம்பரையின் தொடர்ச்சியாக பெரியார் திராவிடர் கழகத்தின் இளைய தலைமுறை சாதி-தீண்டாமை ஒழிப்பு எனும் லட்சியச் சுடரை ஏந்தி, கிராமம் கிராமமாக மக்களிடம் பரப்புரை செய்து வருகிறது.

ஜூன் 22 ஆம் தேதி சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் நடத்திய இரண்டாவது கட்டப் பரப்புரைப் பயணம் முடிவடைந்த அடுத்த நாளே ஜூன் 23 ஆம் தேதி குடந்தையில் கழகத்தின் மூன்றாவது கட்டப் பரப்புரைப் பயணத்தை கழகத்தின் மற்றொரு அணி தொடங்கியது. குடந்தை - மாமாங்கக் கரை அருகே நடந்த தொடக்க விழா பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், திருச்சி புதியவன் உரையாற்றினர். சிற்பிராசன் ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சிகளை நடத்தினார்.

மாவட்ட தலைவர் சோலை மாரியப்பன் வரவேற்புரையாற்றினார்.

பயணத்தில் 12 தோழர்கள் பங்கேற்றுள்ளனர். சூலூர் வீரமணி, திருச்சி புதியவன், கோகுல கண்ணன் ஆகியோர் பரப்புரையாற்றி வருகிறார்கள். நாத்திகன் கழகப் பாடல்களைப் பாடி வருகிறார். பெரம்பலூர், பெருந்துறை, திருப்பூர், நாகை பகுதி தோழர்கள் பயணத்தில் பங்கேற்றுள்ளனர். 7 ஆவது நாள் பயணக்குழு மயிலாடுதுறையில் வந்து சேர்ந்தது. 3 நாள்கள் மயிலாடுதுறை சுற்றுப் பகுதிகளில் பரப்புரை செய்து வருகிறது. (விரிவான செய்திகள் பின்னர்)

**தலையங்கம்**

## பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்....

உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடந்து முடிந்துவிட்டது. வெளிநாடுகளில் வந்திருந்த ஆய்வறிஞர்களும் விதிவிலக்காக தமிழகத்தைச் சார்ந்த ஒரு சிலரையும் தவிர, வழக்கம்போல் முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு புகழாரம் சூட்டுவதில்தான் கடும் போட்டி நடந்து முடிந்திருக்கிறது. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். கூட்டிக் கழித்துப் பார்த்தால் – இந்த மாநாடு, என்ன விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது என்பதுதான் கேள்வி?

இனப் படுகொலையை சந்தித்த ஈழத் தமிழினம், அந்தத் துயரம் நிறைந்த அவல வாழ்க்கையிலிருந்து மீளவில்லை. அவர்கள் மறுவாழ்வுக்காக எந்த உறுதியையும் வழங்கிட சிங்களப் பேரினவாத ஆட்சியும் தயாராக இல்லை. அங்கே இந்தியத் தொழிலதிபர்களும் வடநாட்டு திரையுலகமும் இணைந்து திரைப்பட விருது வழங்கும் விழாவை நடத்தியது. இங்கே உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடந்து முடிந்துள்ளது. தமிழ் வழிக் கல்வியில் பயில்வோருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்ற ஒரு நல்ல அறிவிப்பை முதல்வர் வெளியிட்டுள்ளார். இதை வரவேற்க வேண்டியதுதான். அறிவிப்புகளோடு அது முடிந்துவிடக் கூடாது – என்பதே நமது கவலை! (அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் சட்டம் சட்டம், சமூக சீர்திருத்தக் குழு போன்றவற்றைப் போல்)

வடமாநிலங்களில் நீதிமன்ற மொழியாக இந்தி இருக்கும்போது தமிழ்நாட்டில் மட்டும், அதற்கு முட்டுக்கட்டை போடுவதில் என்ன நியாயம் இருக்கிறது என்ற கேள்வியை இனி மேலாவது தமிழக முதல்வர் மத்திய அரசிடம் அழுத்தம் தந்து வலியுறுத்துவாரா?

செம்மொழியான தமிழ் – தமிழ் நாட்டுக் கோயில்களில் கட்டாயமான வழிபாட்டு மொழியாக மாற்றப்படாமல் செத்துப் போன சமஸ்கிருதத்துக்கு மட்டும் முன்னுரிமை தருவதை மாற்றுவதற்கு ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

சங்க இலக்கியம் – பக்தி இலக்கியம் என்று பெருமைப்பட்டுக் கொள்வதைவிட தமிழை அறிவியல் யுகத்துக்கும், கணினி யுகத்துக்கும் ஏற்ப வளர்ச்சிப் பெறச் செய்வதற்காக மாநாட்டில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துகள் செயல் வடிவம் பெறச் செய்வதே உண்மையான தமிழ் வளர்ச்சியாகும்; அதற்கான செயல் திட்டங்கள் வகுக்கப்படுமா?

தமிழை அறிவியல் ரீதியாக வளர்ப்பதற்கும், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவர் கொள்கையை சமுதாயக் கொள்கையாக செயல்படுத்துவதற்கும் ரூ.400 கோடி செலவில் உலகத் தமிழ் மாநாடு ஒன்றைத்தான் நடத்தியாக வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனாலும், எல்லாமும் நடந்து முடிந்த பிறகாவது, மேற்குறிப்பிட்ட இரண்டு தளங்களிலாவது தமிழக அரசு செயல்பட முன் வருமா? முன்வரவேண்டும் என்பதே நமது வேண்டுகோள்!

தமிழ்மொழியைப் பேசிக் கொண்டிருந்த ஒரு தொன்மையான இனம், இராணுவத்தின் பிடிக்குள் சிக்கித் தவிக்கும் போது, கோவையில் திருவிழா ஒன்று மன்னருக்குரிய புகழாரங் களோடு நடந்து முடிந்துள்ள நிலையில், அந்தப் புகழ்ப் போதைக் குள்ளேயே தமிழினத்தை மூழ்கச் செய்து விடாமல் பாதிக்கப்பட்ட தமிழ் இனத்துக்கும், கிராமங்களில் தீண்டப்படாதவர்களாக ஒதுக்கப்பட்ட தமிழர்களுக்கும் கோயில்கள் உட்பட சமூக பண்பாட்டுத் தளங்களில் தீட்டாக்கப்பட்டுக் கிடக்கும் தமிழுக்கும், சமத்துவத்தையும், அங்கீகாரத்தையும் மீட்டுத் தரும் முயற்சிகளில் இறங்கும்போதுதான் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற சொற்றொடர் அர்த்தம் பெறும். இல்லையேல் – இவை எல்லாமுமே சடங்குகள் தான்.

# அது என்ன ‘பிரதான’ வழக்கு?

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுரைகளை மறு வெளியீடு செய்வதற்கு யாரும் பதிப்புரிமை கோர முடியாது என்று சட்டம் தெளிவாகவே கூறுகிறது.

5. நூலை ஆக்கியவர் மறைந்து 25 ஆண்டுகளுக்குப் பிறகு சொந்த வாரிசுகள் உட்பட யாருக்கும் பதிப்புரிமை கோர உரிமையில்லை. அந்த எழுத்துக்கள் பொது மக்களின் உடைமையாகி விடும்.

வழக்கை முதலில் விசாரித்த தனி நீதிபதி மாண்பு மிகு சந்துரு, இடைக்கால தடை கோர வீரமணிக்கு போதுமான ஆதாரம் இல்லை என்றுதான் தீர்ப் பளித்தார். மேல் முறையீடு செய்யாமல், அப்படியே பிரதான வழக்கை கி. வீரமணி நடத்தியிருப்பா ரானால், தன்னிடமுள்ள ‘அசைக்க முடியாத 21’ ஆவணங்களை முன் வைத்து பிரதான வழக்கை நடத்தியிருக்கலாம்.

கீழ்க்கண்ட வாதங்களை எல்லாம் அவர் முன் வைத்திருக்கலாம்:

- “பெரியார் தனது சொத்துக்களை எவருக்கும் எழுதித் தரவில்லையென்பதால் அந்த ஒரு காரணத்தினாலே பதிப்புரிமை எனக்கு வந்து விட்டது.
- கொளத்தூர் மணியும் இராமகிருட்டிணனும் கட்சியை விட்டு விலகி விட்டார்கள் என்பதால் - பதிப்புரிமை எனக்குத்தான்.

பெரியார் குடிஅரசைத் தொடங்கியது 1925 இல்; அறக்கட்டளையை நிறுவியது 1952 இல்; இந்த இரண்டையும் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் -1, 2, 9, 5 ஆகிய எண்கள் மட்டுமே இரண்டிலும் பொதுவாக இருப்பதைப் புரிந்து கொள்ள முடியும். இதிலிருந்தே பதிப்புரிமை எனக்குத்தான் உண்டு என்பது திட்டவட்டமாக உறுதியாகிவிட்டதே.”

- இப்படி அடுக்கடுக்கான ஆதாரங்களை அள்ளி வீசியிருந்திருக்கலாமே? இத்தனைக்கும் மேலாக தஞ்சை ரத்தினகிரியின் வலிமையான மனுவும் சேர்ந்து விட்டதே; இந்த ‘ஆணித்தர வாதங்களால்’ பிரதான வழக்கில் உள்ள ‘வெற்றி வாய்ப்பை’ அவர் தட்டிப் பறித்திருக்க முடியும். இருந்தாலும் இப் போதும் குடிமுழுகிப் போய்விடவில்லை. அதோடு “பிரதான வழக்கு” அப்படியேதான் இருக்கிறது என்பதால், வீரமணி, அச்சப்பட தேவையே இல்லை. வீரமணியும், இரத்தினகிரியும், வழக்கு மனுவில் தங்களை ‘இந்து’ என்று கூறி விட்டதால், இந்துக் கடவுள்கள் எல்லாம், வேலாயுதம், சூலாயுதங் களோடு வீரமணிக்கு, துணைக்கு வந்து நிற்குமே! பிறகு என்ன?

ஆனாலும் நமக்கு, ஒரு சந்தேகம் மட்டும் உறுத்திக் கொண்டே இருக்கிறது.

ரூ.15 லட்சம் வீரமணி இழப்பீடு கேட்டுள்ளாரே, அது எந்த அடிப்படையில் என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது. அது என்ன கணக்கு, 15 லட்சம்? பெரியார் எழுத்துக்களுக்கு விலை மதிப்பீடு கிடையாது என்பது கூடவா இவர்களுக்குப் புரியாது.

இப்போது மேல் முறையீட்டு தீர்ப்பில் நீதிபதிகள் கூறிய தீர்ப்பின் சுருக்கம் இதுதான்.

1. பெரியார் எழுத்துக்களுக்கும் வீரமணிக்கும் எந்த தொடர்பும் கிடையாது.
2. வீரமணியின் பிரதான வழக்கு மனுவில் என்ன கோரிக்கை வைத்துள்ளார்கள் என்பதே தெளிவாக இல்லை. (அதனால் பிரதான மனுவே செல்லாது)
3. பெரியார் எந்த தனி மனிதனுக்கும் சொந்தமானவர் அல்ல. அவர் உலகப் பொது மனிதர்.
4. பெரியார் தன்னுடைய எழுத்துக்களுக்கு உரிமை கோர தனி மனிதருக்கோ அல்லது நிறுவனத் திற்கோ மற்றும் யாருக்கும் அதிகாரம் தரவில்லை. பெரியாரே தன் எழுத்துக்களை எவரும் பயன்படுத்தலாம் என்றுதான் கூறியுள்ளார்.
5. பெரியார் மறைந்து 25 ஆண்டுகள் ஆன பிறகும் சட்டப்படி பெரியாரின் எழுத்துக்கள் மக்கள் உரிமையாகி விட்டன. அதனால் இனிமேல் தனி மனிதர்கள் யாரும் காப்புரிமை கோர முடியாது.

நீதிமன்றம் இப்படி கூறிய பிறகு - இனி எங்கே இருக்கிறது பிரதான வழக்கு? பிரதான வழக்கிற்கே அடிப்படை கிடையாது என்பதால்தான் இடைக் கால தடை கோர வீரமணிக்கு உரிமை இல்லை என்று நீதிமன்றம் கூறிவிட்டது. ஏனென்றால் பெரியார் எழுத்துக்கள் இனி மக்கள் உடைமையாகி விட்டது. எனவே இனி பிரதான வழக்கை பொது மக்களுக்கு எதிராகத்தான் வீரமணி போட வேண்டும்.

அரசே பெரியாரின் எழுத்துக்களை நாட்டுடை மையாக்க நினைத்தால்கூட இனி அது முடியாது. காரணம் நீதிமன்ற தீர்ப்பின்படி பெரியாரின் எழுத்துக்கள் மக்களின் பொது உடமையாக (Public Domain) மாறிவிட்டது. மக்களின் உடமையை நாட்டுடைமையாக்க எந்த நாட்டுச் சட்டத்திலும் இடமில்லை. பெரியார் உலக மக்களுக்குத்தான் சொந்தம். இன்னொன்றும் வீரமணி பகர்ந்துள்ளார். ‘தம்மிடம் அனுமதி பெற்று யார் வேண்டுமானாலும் பெரியார் எழுத்துக்களை பதிப்பிக்கலாம். ஆனால் தன்னிடம் முன் அனுமதி பெறவேண்டும்’ என்று அறிக்கை விடுகிறார். அட விளங்காதவரே, பெரியார் எழுத்துக்கும் உமக்கும் சம்மந்தமே கிடையாது. அது பெரியார் திராவிடர் கழகத்தின் முயற்சியால் பொது மக்களின் உரிமை என்று நீதிமன்றமே கூறிவிட்ட பிறகும், உம்மிடம் எதற்காக எந்த அடிப்படையில் அனுமதி கேட்பது? உமக்கேது உரிமை, அப்படி அனுமதி கொடுப்பதற்கு?

பெரியார் கூறுவார், ‘மொட்டை அடித்துக் கொண்டு சுங்க கேட் வழியாக போனவன், மொட்டை தலைக்கு சுங்கம் உண்டா?’ என கேட்டானாம். அவனும் ‘வைய்யடா காலணாப் பணம்’ என்றானாம். அந்தக் கதைதான் நினைவுக்கு வருகிறது. பெரியார் தன் தத்துவங்கள் உலகெல்லாம் கொண்ட செல்ல வேண்டும். உலக மக்கள் பகுத்தறிவுச் சிந்தனை பெற வேண்டும். சாதி சமய வேற்றுமைகள் ஒழிய அதுவே நன்மருந்து என்றே கருதினார். ஆனால், வீரமணியின் சிறு கும்பல் பெரியார் தத்துவங்களை ஒரு பெட்டிக்குள் கட்டி, அவர் கருத்துக்களை பரவாமல் பார்த்துக் கொண் டது. ஆனால் அந்த சூழ்ச்சி முறியடிக்கப்பட்டு, பெரியார் எழுத்துக்களை பெரியார் திராவிடர் கழகம் வென்றெடுத்துவிட்டது. பெரியார் சொத்துக்கள் இன்னும் அந்த சிறு கும்பலின் சட்டவிரோத ஆதிக்கத்தில்தான் உள்ளது. அதனையும் மீட்டெ டுப்போம். இறுதி வெற்றி நமதே. ●

**வந்த கடிதம்**

## மாபெரும் வரலாற்றுப் பணி!

சாதி ஆதிக்கத்தை மோதி மிதித்த தந்தை பெரியாரின் சிந்தனைகளை, சொல்லணா சிரமங்களுக்கு ஆட்பட்டு, அலைந்து திரிந்து, எங்கெங்கோ தேடிப் பிடித்து தருவதாக சொன்னவர்கள் எல்லாம் தராமல் ஏமாற்றிய பிறகும், எண்பது ஆண்டுகள் கடந்ததால் சிதைந்தும் நொறுக்கியும் இருந்த இதழ்களை சேகரித்து படியெடுத்து ஒவ்வொரு கட்டுரையை தயாரிப்பதற்கும், இரண்டு மூன்று இதழ்களை ஒப்பிட்டு இறுதியாக்கி அவற்றை தட்டச்சு செய்து ஒன்றுக்குப் பல முறை பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அச்சேற்றப்பணி மேற்கொள்ளப்பட்டு அவ்வாறாக பணி மேற்கொண்ட தோழர்களுக்கு தங்களுக்குள் முறை வைத்து ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும் சமைத்து பேருந்துகளிலும் வாகனங்களிலும் கொண்டு வந்து குடும்ப உறுப்பினர்களைக் கொண்டே பரிமாற வைத்து, புத்தகங்களை தூக்கி சுமந்து அவற்றை நீதிமன்ற வழக்கு காரணமாக பத்திரமாக பாதுகாத்து வைத்திருந்து தீர்ப்புக்குப் பின்னர் முன்பதிவு செய்தவர்களுக்கு தேடி வழங்கியது என பட்டியலிடவே மலைப்பாக இருக்கிற பணிகளை ஆற்றிய எத்துணையோ முகம் தெரியாத பெரியாரியல் தொண்டர்களின் உழைப்பை முதலீடாக்கி குடிஅரசு தொகுப்புகள் நம் கைகளில் தவழ்கிறது என்று எண்ணுகையில், இந்த மாபெரும் வரலாற்றுப் பணியில் நம் உழைப்பு இல்லாமல் போய்விட்டதே எனும் ஏக்கம் நெஞ்சை நிறைக்கிறது.

இடையில், முன்வெளியீட்டு திட்டத்துக்காக, ஓயாது பயணித்து நிதி சேகரித்த தோழர்கள், குடிஅரசு ஏடுகளை சேகரிக்கவும், கணினியாக்கவும், அச்சேற்றவும் உதவியாக இருந்த எண்ணற்ற தோழர்களின் அர்ப்பணிப்பு மிக்க தோழர்களின் உழைப்பு என்றென்றும் தமிழர் சமுதாயத்தால் நன்றி பாராட்டத்தக்கதாகும். நெருக்கடியான கழகப் பணிகளுக்கு இடையில் தோழர்களோடு தோழர்களாக சின்ன சின்ன வேலைகளைக்கூட இழுத்துப் போட்டு செய்து, இன்று 1925 முதல் 1938 வரையிலான குடிஅரசு தொகுப்புகளில் முழு செய்திகளையும் அறிந்தவராக உள்ள கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தொகுப்பு முழுவதையும் படித்து ஒவ்வொரு தொகுப்புக்கும் தொகுப்புரை வழங்கியுள்ள பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தொகுப்புப் பணிகளில் முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட தோழர்கள் தமிழ்க்குரிசில் தாமரைக்கண்ணன் உள்ளிட்ட தோழர்களின் உழைப்பு என்றென்றும் வீண் போகாது.

**என்றும் சாதி ஒழிப்புப் பணியில் நீலவேந்தன், ஆதித் தமிழர் பேரவை, கோவை.**

# "அசைக்க முடியாத" 21 ஆவணங்கள்!

## வழக்கறிஞர் துரைசாமி



***பிரதான வழக்கு அப்படியே தான் இருக்கிறது என்று – கி.விரமணி, நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு அறிக்கை விடுத்துள்ளார். பிரதான வழக்கில் என்ன இருக்கிறது? இனி அதில் உயிர் ஏதாவது இருக்கிறதா என்பதை கழகத்தின் மூத்த வழக்கறிஞர் எஸ்.துரைசாமி விளக்குகிறார்.***

"எதிரிகளுக்கு இது இடைக்கால வெற்றிதான். பிரதான வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. அதில் வெற்றி நமக்குத் தான்" - இது வீரமணியின் ஓங்கார அறிக்கை. "குப்புறத்தான் விழுந்தேன், ஆனால் மீசையில் மண் ஒட்டவில்லை" என்கிறார். வழக்கில் தோற்று விட்டோம். தோல்விக்கு என்ன காரணம், என்ன பரிகாரம் காணலாம் என சிந்திப்பதுதான் அறிவார்ந்த செயல். அதை விட்டுவிட்டு, 'பிரதான வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது, அதில் நமக்குதான் வெற்றி' என்று கூக்குரலிடலாமா? அப்படி என்னதான், அந்த பிரதான வழக்கில் உள்ளது? பிரதான வழக்கின் சாராம்சம் இதுதான்.

"பெரியாரின் குடிஅரசு எழுத்துக்கள் மற்றும் அவரது மற்ற எழுத்துக்கள் பேச்சுகள், நூல்கள், கட்டுரைகள், இவை எதையும் பெரியார் திராவிடர் கழகம் பதிப்பிக்கவோ, வெளியிடவோ கூடாது என்று நீதிமன்றம் நிலையான கட்டளை பிறப்பிக்க வேண்டும். வீரமணிக்கு பெரியார் திராவிடர் கழகம் 15 லட்சம் இழப்பீடும் தர வேண்டும்" - இதுதான் பிரதான வழக்கில் அவரது கோரிக்கை.

இப்படிக் கோருவதற்கு என்ன காரணம்? அவர் மனுவில் முன் வைத்திருப்பது இதுதான். ஒன்று - பெரியாரின் எழுத்துக்கள். வீரமணியிடமுள்ள நிறுவனத்திற்குத்தான் சொந்தம். ஏனென்றால் 1952 இல் பெரியார் ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தார். அவர் மறைவிற்கு பிறகு அதனுடைய ஆயுள் செயலாளர் வீரமணிதான். அதனால் தனக்கு மட்டும்தான் பெரியாரின் எழுத்துக்களை பதிப்பிக்க பதிப்புரிமை உள்ளது. எனவே, வேறு யாரும் பெரியாருடைய எழுத்துக்களை பதிப்பிக்கக் கூடாது. இதுதான் அந்த பிரதான வழக்கு. அதனால் பிரதான வழக்கு முடியும் வரை பெரியார் திராவிடர் கழகத்துக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவு வேண்டும். இதுதான் அவர் வைத்த கோரிக்கை. இதற்காகத்தான் கடந்த 20 மாதங்களாக வழக்காடிக் கொண்டிருந்தார்.

தனக்குத்தான் பெரியாரின் எழுத்துக்களுக்கு பதிப்புரிமை உள்ளது என்பதற்கு அவர் முன்னிறுத்திய ஆதார ஆவணங்கள் என்னென்ன தெரியுமா? (அடேயப்பா யாரும் அசைக்க முடியாத, 21 ஆதார ஆவணங்கள்).

1. 1930 ஜனவரி குடிஅரசு இதழில் வெளிவந்த கட்டுரையை யாரோ ஒருவரால் கைப்பட எழுதிய நகல் (சுமார் 32 பக்கம்) ("இதை வீரமணிதான் ஆள் வைத்து 1983 ஆம் ஆண்டு நகல் எடுத்தாராம்; அவர் நகல் எடுத்த காரணத்தால் அந்த பெரியார் எழுத்துக்கள் அவருக்கே சொந்தமாகி விட்டதாம். அதனால் வேறு யாரும் பெரியார் எழுத்தை பதிப்பிக்கக் கூடாது - இதுதான் நீதிமன்றத்தில் வீரமணியின் வாதம்.)
2. 1949 ஆம் ஆண்டு ஸ்டார் பதிப்பகம் என்னும் நிறுவனம் 'வெற்றி கண்ட வீரர்' என்ற தலைப்பில் புத்தகம் வெளியிட, ஒரு மாதிரி ஒப்பந்தத்தை பெரியாருக்கு அனுப்புகின்றனர். ஸ்டார் பதிப்பகம், பெரியாரிடம் ஒப்புதல் கேட்பதிலிருந்தே பெரியாரிடம் பதிப்புரிமை இருந்திருப்பது உறுதியாகிறதே, என்பது வீரமணியின் விவாதம். (உண்மை என்னவென்றால், பெரியார் அந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் தரவில்லை. அப்படியே பெரியார் ஒப்புதல் தந்ததாகவே வைத்துக் கொண்டாலும்கூட, அதனால் வீரமணிக்கு எப்படி காப்புரிமை கிடைக்கும்?)
3. வீரமணி சமர்ப்பித்த மற்றொரு ஆவணம் - 1952 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் சட்டத் திட்டங்கள் அடங்கிய கையேடு. மேற்படி நிறுவனம் சட்டப்படி பதிவாளர் முன் பதிவு செய்ததன் உத்தரவு நகல். மேற்படி நிறுவனம் பதிவு செய்வதற்கான படிவமும், அறிக்கையும், உறுப்பினர் பட்டியலும். (சரி இருக்கட்டும். இவையெல்லாம் அவர் வைத்திருப்பதாலேயே பதிப்புரிமை கோரிவிட முடியுமா? என்னிடம் கூடத்தான் உள்ளன - அதனால் எனக்குத்தான் பதிப்புரிமை உள்ளது என நான்கூட கூறலாமா?
4. 1952 இல் பெரியாரால் 'சுயமரியாதை இயக்கமும், திராவிடர் கழகமும்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட தலையங்கம் - இது வீரமணி சமர்ப்பித்த மற்றொரு ஆவணம்.
5. 4.8.1971 இல் பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தில் கி.வீரமணியும், புலவர் இமயவரம்பனும் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்; அதற்கான அந்நிறுவனத்தின் நடவடிக்கைக் குறிப்பு.(இந்த ஆவணத்தில் எங்கேயாவது பெரியாரின் எழுத்துக்களின் காப்புரிமை அந்த நிறுவனத்திற்கு தான் சொந்தம் என்று உள்ளதா?) (அது மட்டுமல்ல; மற்றொரு முக்கியமான செய்தி இருக்கிறது. பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தைப் பதிவு செய்தாரே, தவிர, அந்த நிறுவனத்திற்கு ஒரு காசைக்கூட நன்கொடையாக தரவில்லை. பெரியார் மரணமடையும்வரை தன் சொந்த சொத்துக்களை யாருக்கும் எழுதி வைக்கவில்லை. பெரியார் பெயரில்தான் அவை இருந்தன. தனது சொந்த சொத்துக்களை பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்திற்கு மாற்றித் தரவே இல்லை. பெரியார் தனது சொத்துக்களை நிறுவனத்துக்கு மாற்றி, பத்திரம் எழுதித் தந்தால் தான் அது நிறுவனத்தின் சொத்தாகும். எனவே, சட்டப்படி பெரியாரின் சொத்துக்களுக்கு அறக்கட்டளை உரிமை கோர முடியாது. அவை அரசுடைமை ஆக்கப்பட்டதாக அரசு அறிவிக்க வேண்டும். மற்றும் அந்த சொத்துக்களை அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் உடனடியாக கையகப்படுத்தி, அரசுடைமையாக்க வேண்டும். இது அரசு செய்ய வேண்டிய கடமை.) வீரமணி நிறுவனத்திடம் பெரியார் சொத்துக்கள் இருப்பதால், அவை பெரியார் கொள்கையைப் பரப்புவதற்குப் பயன்படப் போவதில்லை; பரப்புவதைத் தடை செய்வதற்கு வழக்குகள் போடுவதற்குத்தான் பயன்படும்.
6. 1978 - மத்திய அரசு பெரியார் நூற்றாண்டையொட்டி வெளியிட்ட 'அஞ்சல் தலை'யும், அதற்கு அந்த அஞ்சல் துறையினர் வெளியிட்ட விளக்கமும் வீரமணி சமர்ப்பித்த மற்றொரு ஆவணம். அரசு, பெரியாருக்கு நன்றி கூறி அஞ்சல் தலை வெளியிட்டால் அது எப்படி பெரியார் எழுத்துக்களுக்கு காப்புரிமை கோருவதற்கான ஆவணமாக இருக்க முடியும்? வீரமணி எப்படிப்பட்ட "வலிமையான" ஆவணங்களை முன் வைத்துள்ளார், பாருங்கள்!
7. 1983 ஆம் ஆண்டு 'விடுதலை' வெளியிட்ட பெரியார் பிறந்த நாள் மலரில் வெளியான 'கடந்த ஆண்டு கழக டைரி' - 17.9.1982 முதல் ஆகஸ்ட் 1983 வரை நடந்த கழக நிகழ்ச்சிகளின் தொகுப்பை - மற்றொரு ஆவணமாக வீரமணி காட்டியுள்ளார். அதில் புலவர் இமயவரம்பன் முயற்சியில் சில பெரியார் பற்றாளர்கள் பெரியாரின் எழுத்துக்களை தொகுத்ததாக ஒரு செய்தி இடம் பெற்றுள்ளது. இதுதான் வீரமணிக்கு கிடைத்த பெரிய ஆதாரம். நான் தான் நகல் எடுக்கச் சொன்னேன். அதனால் பெரியாரின் எழுத்துக்களை யார் நகல் எடுத்தாலும் அது தனக்குத்தான் சொந்தம். ஆகவே வேறு யாரும் பெரியாரின் எழுத்துக்களை பதிப்பிக்கக் கூடாது. இது வீரமணியின் அடுத்த வாதம். இதை வைத்துத்தான் இரத்தினகிரி என்பவர் தாம்தான் அந்த தொகுப்புப் பணியை திட்டமிட்டு செயல்படுத்தியவர் என்றார். அதனால் தன்னையும் ஒரு எதிர் மனுதாரராக சேர்க்க வேண்டுமென்றும் நீதிமன்றத்தில் நுழைந்தார். (வீரமணிக்கே உரிமை கிடையாது எனும்போது - இந்த இரத்தினகிரிக்கு ஏது உரிமை என நீதிமன்றம் அவரது மனுவை தள்ளுபடி செய்தது தனிக் கதை)
8. மற்றொரு "வலிமையான" வீரமணி சமர்ப்பித்த ஆவணம் - 1987 ஆம் ஆண்டு கோவை இராமகிருட்டிணனை திராவிடர் கழகத்திலிருந்து வெளியேற்றிவிட்டதாக 'விடுதலை'யில் வெளிவந்த அறிக்கை.
9. 2000 ஆம் ஆண்டில் கொளத்தூர் மணி தி.க.விலிருந்து விலகிக் கொண்டுவிட்டதாக, அவரால் எழுதப்பட்ட கடிதம். கோவை இராமகிருட்டிணனை நீக்கிவிட்டோம்; கொளத்தூர் மணி விலகி விட்டார்; எனவே பெரியார் எழுத்துகளில், பதிப்புரிமை கிடைத்துவிட்டது என்கிறார் வீரமணி. அவர்கள் இரண்டு பேரும் தி.க.விலிருந்து வெளியேறிவிட்டதாலேயே தானாகவே வீரமணிக்கு சொத்துரிமையும் எழுத்துக்களின் பதிப்புரிமையும் வந்துவிடுமா? (கொளத்தூர் மணியும், கோவை இராமகிருட்டிணன் - வெளியேறியபோது அந்த உரிமைகளை வீரமணியிடம் தாரை வார்த்துவிட்டு போனார்களா?)
10. 21.11.2000 - 'விடுதலை' நாளேட்டில் வெளிவந்த வீரமணியின் அறிக்கை. அவர் சமர்ப்பித்த மற்றொரு ஆவணம், திருச்சியில் ஒரு மாநாடு நடந்தபோது அதே தேதியில் "கொளத்தூரில் ஒரு மாநாடு" என்ற தலைப்பில் உள்ளது, அந்த அறிக்கை. பெரியாரின் எழுத்துக்கள் தனக்கே சொந்தம் என்பதற்கு இந்த அறிக்கை ஒன்றே போதும் என்பது வீரமணியின் வாதம்.
11. அரசு நூலக இயக்குநர் அரசு நூலகங்களுக்கு நூல்கள் வழங்குதல் தொடர்பாக எழுதிய கடிதமும் வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட மற்றொரு ஆவணம்.
12. ஆவணங்கள் இவை மட்டுமல்ல! பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன இயக்கத்தின் சார்பில் மேற்படி நூலகத்திற்கு அனுப்பிய நூல்களின் பட்டியல்.
13. அரசு பொது நூலகத்திற்கு நூல்கள் வாங்குவதற்கான மாதிரி ஒப்பந்த படிவம். (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்)
14. புத்தகங்கள் விற்பனைக்காக பணம் பெற்றுக் கொண்டதற்கு இரசீது.
15. அரசு பொது நூலகத்தின் இயக்குனர், பதிப்பகத்தார்களுக்கு எழுதிய கடிதத்தின் நகல்.
16. அரசு பொது நூலகத்திற்கு பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம் அனுப்பிய புத்தக பட்டியல்.
17. 8.7.2008 இல் ரத்தினகிரி என்பவர் தஞ்சையில் கூட்டிய கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள்.
18. குடிஅரசு தொகுப்புகளை பெரியார் திராவிடர் கழகம் வெளியிடும் என்ற அறிவிப்பு வந்த பெரியார் முழக்கம் வார இதழ்.
19. பெரியார் யாருக்கு சொந்தம் என்ற தலைப்பில் 'குமுதம் ரிப்போர்ட்'டரில் வெளியான கட்டுரையின் நகல்.
20. பெரியார் சிந்தனைகள் தொகுப்புக்காக வே. ஆனைமுத்து எழுதியுள்ள பதிப்பாசிரியர் முன்னுரை.
21. பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம் வெளியிட்ட புத்தக பட்டியல், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில். (நல்ல வேளை, தொடர்வண்டி கையேடு புத்தகத்தையும் சேர்க்காமல் விட்டு விட்டார்களே!)

இத்தனை "ஆதாரங்களையும்" முன் வைத்துதான் வீரமணி நீதிமன்றத்தை நாடி பெரியார் திராவிடர் கழகம், பெரியார் எழுத்துக்களை அச்சிட உரிமை கிடையாது; அது தனக்குத்தான் சொந்தம் என வழக்கு தொடர்ந்தார்.

பதிப்புரிமை சட்டப்படி பதிப்புரிமை கோருவதற்கு தேவையான அடிப்படைகள் என்ன?

1. நூலை ஆக்கியவர் தன்னுடைய எழுத்துக்கு பதிப்புரிமை உள்ளது என அறிவித்திருக்க வேண்டும். (பெரியார் மறையும் வரை அப்படியொரு உரிமையை கோரவில்லை)
2. அல்லது அந்த உரிமையை எழுத்து வடிவில் வேறு ஒருவருக்கு மாற்றி எழுதித் தந்திருக்க வேண்டும்.
3. ஒரு நூலின் படைப்பாளி, அந்த நூலை வருவாய் ஈட்டும் நோக்கத்தோடு எழுதியிருக்க வேண்டும். (பெரியார் அப்படித்தான் செய்தாரா?)
4. இதைத் தவிர, பத்திரிகைகளில் வெளிவந்த அரசியல், பொருளாதார, சமூகம் சார்ந்த

(2 ஆம் பக்கம்)

REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# உழைக்கும் மக்களின் உற்சாக வரவேற்பு

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசு, தலைநகர் தமிழ்ச் சங்க கட்டிடத்தில் (வண்டலூர் உயிரியல் பூங்கா) ஏற்பாடு செய்தார். கழகத் தோழர் கல்பாக்கம் முருகேசன் தோழர்களுடன் இணைந்து சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

இரண்டாம் நாள் பரப்புரைப் பயணம், 13.6.2010 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கேளம்பாக்கத்தில் துவங்கியது. தொடர்ந்து காலை 10 மணியளவில் திருப்போரூர் பேருந்து நிலையம் அருகில் பரப்புரை நடைபெற்றது. இப்பிரச்சாரத்தில் கலந்து கொண்ட பொது மக்கள் மூடநம்பிக்கை, சாதி ஒழிப்பு பிரச்சாரங்கள் மீண்டும் இப்பகுதியில் நடத்த விருப்பம் தெரிவித்தனர். சென்னை தோழர்கள் சபரி, பரணி ஆகியோர் பரப்புரை பயணக் குழுவிற்கு தேநீர் வழங்கினர்.

காலை 11.30 மணியளவில் மாமல்லபுரம் பேருந்து நிலையம் அருகிலும், 12 மணியளவில் மாமல்லபுரம் நகராட்சி அலுவலக கட்டிடம் அருகிலும், பரப்புரை நடந்தது. ம.தி.மு.க. தோழர் பரமசிவம் மற்றும் மூர்த்தி, அப்துல்கலாம், எம்.வி.ஜெகநாதன், இளையராஜா, தேசிங்கு, ரவி, புஷ்பலிங்கம், நித்யா போன்றோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். கழகத்தின் பயணம் தமிழகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த உதவும் என்று குழுவினரை வாழ்த்தினர்.

தொடர்ந்து மதியம் 1 மணியளவில் திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையம் அருகில் பரப்புரை நடந்தது. கட்டண கழிப்பிட ஊழியர் கழகத் தோழர்கள் கழிப்பறைக்கு சென்றபோது இவர்கள் பரப்புரை பயணக் குழுவினர் என்பதை அறிந்து வாங்கிய கட்டணத்தை திருப்பித் தந்து, பயணக் குழுவினருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார். திருக்கழுக்குன்றம் குருசாமி மதிய உணவிற்கு ஏற்பாடு செய்தார்.

மாலை 4.30 மணியளவில் மதுராந்தகம் பேருந்து நிலையம் அருகில் பரப்புரை நடைபெற்றது. கருத்துகளை கேட்ட செருப்பு தைக்கும் தொழிலாளி ஒருவர், ரூ.10 நன்கொடை வழங்கி, தனது ஆதரவை வெளிப்படுத்தினார்.

மாலை 5.30 மணியளவில் திண்டிவனம் பேருந்து நிலையம் அருகிலும், மாலை 6 மணியளவில் திண்டிவனம் செஞ்சி பேருந்து நிறுத்தம் அருகிலும் பரப்புரை நடைபெற்றது. ஆதித் தமிழர் பேரவையை சேர்ந்த துரை செந்தில், அசோக் ஆகியோர் குழுவை வரவேற்று ரூ.200 நன்கொடை வழங்கினர்.

செஞ்சி வட்டம் கொங்கரப்பட்டு கிராமத்தில் இரவு 7.30 மணியளவில் பரப்புரை பொதுக் கூட்டம் நடைபெற்றது. பெரியாரின் மூத்த தொண்டர் இராமானுஜர் தலைமை தாங்கினார். பெருமாள் முன்னிலை வகித்தார். தோழர்கள் சாக்ரடீசு, அன்பு தனசேகரன், குமரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர் சிற்பி இராசன், மந்திரமல்ல! தந்திரமே! அறிவியல் விளக்க கலை நிகழ்ச்சி நடத்தி, பொது மக்களிடையே சாமியார்களின் மோசடிகளை அம்பலப்படுத்தினார். சுதாகர் இக்கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சுபாஷ் நன்றி கூறினார். அன்று இரவு குழுவினர் தோழர்கள் தங்குவதற்கும், இரவு உணவு, மறு நாள் காலை உணவு ஆகியவற்றை தோழர் சுதாகர் சிறப்பாக ஏற்பாடுசெய்திருந்தார்.

அனைத்து இடங்களிலும் கனியூர் தமிழ்ச் செல்வன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். அன்பு தனசேகரன், குமரன், சாக்ரடீசு ஆகியோர் சிறப்புரையாற்றினர். திருப்பூர் தியாகு, சென்னை நாத்திகன், சாதி ஒழிப்பு மற்றும் பகுத்தறிவு பாடல்களை பாடினார். பிரச்சாரத்தில் பெண் தோழர்கள் ஜெயந்தி, அம்பிகா, தமிழ்ச் செல்வி, பெரியார் சிந்தனைகளை உள்ளடக்கிய புத்தகங்களை மக்களிடையே விற்பனை செய்தனர். தோழர்கள் லட்சுமணன், சரவணன், சுகுமார், மனோகர் ஆகியோர் மக்களிடத்தில் நிதி திரட்டினர். அனைத்து இடங்களிலும் தோழர் திலீபன் பறை முழக்கம் செய்தார். இரண்டாம் நாள் மொத்தம் 8 இடங்களில் பரப்புரை நடந்தது குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் நாள் 14.6.2010 திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் வல்லத்தில் பரப்புரை நடைபெற்றது. அப்பகுதியை தோழர் தேவராஜ், அறிவுச் சுடர் என்ற கல்வி அமைப்பின் வழியாக பகுத்தறிவு கொள்கைகளை பரப்பி வருகிறார். அந்த அமைப்பைச் சார்ந்த 15 தோழர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இப்பகுதியை சார்ந்த மூத்த பெரியார் தொண்டர் எஸ்.பாலன் அவர்களை சந்தித்தது பயணக் குழுவினர் உரையாடினர்.

காலை 10.30 மணியளவில் நாட்டார்மங்கலத்தில் பரப்புரை நடைபெற்றது. 11.15 மணியளவில் பெரியகரத்திலும், மதியம் 12.45 மணியளவில் செஞ்சி பேருந்து நிலையம் அருகிலும் பரப்புரை நடைபெற்றது. இப்பிரச்சாரத்தில் வீரமணிதாசன், தங்கராசு, அன்பரசு ஆகியோர் கலந்து கொண்டனர். மதிய உணவை பேராசிரியர் அ. பெரியார் ஏற்பாடு செய்தார்.

மாலை 3.40 மணியளவில் நேமூர் கிராமத்தில் பரப்புரை தொடங்கியது. 5 மணியளவில் விழுப்புரம் அரசு பொது மருத்துவமனை அருகிலும், மாலை 6 மணியளவில் பொதுக்கூட்டம், விழுப்புரம் மந்தக்கரையிலும் நடைபெற்றது. கூட்டத்திற்கு ம. கணேசன் தலைமை தாங்கினார். வி.ப. இளங்கோவன் முன்னிலை வகிக்க, ச.க. இளையராஜா வரவேற்புரையாற்றினார். கோ. சாக்ரடீசு, பேராசிரியர் த. பழமலய் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர் சிற்பி இராசன், ‘மந்திரமல்ல! தந்திரமே!’ நிகழ்ச்சியை நடத்தினார். தோழர் ந. அய்யனார் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார்.

தோழர்கள் ஜெயந்தி, அம்பிகா, தமிழ்ச்செல்வி ஆகியோர் பெரியார் சிந்தனைகள் அடங்கிய புத்தகங்களை மக்களிடையே விற்பனை செய்தனர். அனைத்து பரப்புரை நிகழ்ச்சியிலும் தோழர்கள் லட்சுமணன், சுகுமார், சசிகுமார், சுதாகர், மனோகர் ஆகியோர் பொது மக்களிடையே நிதி திரட்டினர். இன்றைய பரப்புரை மொத்தம் 7 இடங்களில் நடைபெற்றது. வழக்கறிஞர் பி.ஆ.லூசியா இரவு தங்குவதற்கு ஏற்பாடு செய்தார்.

**செய்தி : அரசகுரு**

# சாதி–தீண்டாமை: நடிகர் சிவக்குமார் கோவை மாநாட்டில் எழுப்பிய கேள்வி

கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் நடிகர் சிவக்குமார் தமிழகத்தில் நிலவும் சாதி-தீண்டாமைக் கொடுமைகளை உணர்ச்சியுடன் எடுத்துக் கூறி, மொழிப் பெருமைகளில் மூழ்கிக் கிடந்த கூட்டத்தினரை சமூக எதார்த்தத்தின் பக்கம் திருப்பினார். ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற மாநாட்டின் நோக்கத்தை அவரது உரை, சமரசத்திற்கு இடமின்றி வலியுறுத்தியது.

“தஞ்சை பெரிய கோயிலை கட்டிய உழைப்பாளிகளான மேஸ்திரிகளும், சித்தாளும்கூட அந்தக் கோயில் கருவறைக்குள் நுழைய அனுமதி இல்லை; கருவறையில் புனிதம் கெட்டுவிடும் என்று சொன்னால், இது என்ன நியாயம்? பணம் இருப்பவன் குளிக்கக்கூட வேண்டியதில்லை; எந்தத் தூய்மையையும் பின்பற்றாமலே, அவனுக்கு உடனே திருப்பதி தரிசனம் கிடைத்துவிடும். ஆனால் பக்திக்குரிய எல்லா ஒழுங்குகளையும் கடைபிடித்து ஒழுகும் அப்பாவி பக்தன், அவன் இல்லாதவன், ஏழை என்பதால் - இரண்டு நாள் கியூவில் காத்திருந்து சாமி கும்பிடுகிறான்; இதற்குப் பெயர் தர்ம தரிசனமாம். நான் கடவுள் நம்பிக்கை உள்ளவன்தான்; இந்த அநியாயங்கள் நடப்பதால், நான் கோயிலுக்குப் போவதில்லை” என்றார் சிவக்குமார்.

“நம்மை இறைவன்தான் படைக்கிறான். ஆனால், சாமி கும்பிடும்போது மனிதனுக்கு மனிதன் இந்த நாட்டில் சமத்துவம் நிலவுகிறதா? தனது 94 ஆவது வயதில் மூத்திரச் சட்டியை சுமந்துக் கொண்டு இந்த மக்களுக்காக உழைத்தாரே, ஒரு தலைவன், அந்தத் தலைவன் பிறந்த ஈரோட்டு மண்ணிலே இன்றைக்கும் என்ன நிலைமை? இன்னும் டீக்கடைகளிலே இரட்டை டம்ளர்; நம்முடைய மலத்தை நாம் கையால் தொடவே கூசுகிறோம்; மருத்துவப் பரிசோதனைக்கு நம்முடைய மலத்தை ஒரு பாட்டிலில் எடுக்கவே நமக்கு அருவருப்பு; ஆனால், மனிதர்கள் மலத்தை எடுப்பதற்காகவே இந்த நாட்டில் ஒரு சாதியை அனுமதித்துக் கொண்டிருக்கிறோமே, இது என்ன நியாயம்? அவர்கள்தான் கடவுளுக்கு சமமானவர்கள்.

இவை எல்லாம் ஒழிக்கப்படாத வரை, ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று கூறுவதில் என்ன அர்த்தமிருக்க முடியும்?” என்று நடிகர் சிவக்குமார் கேட்டார்.

அதேபோல் - இதே கருத்தரங்கில் பேசிய திராவிடர் கழகத்தைச் சார்ந்த வழக்கறிஞர் அருள்மொழி, ‘போரைப் புறந்தள்ளி பொருளை பொதுவாக்கவே’ என்ற தலைப்பில் பேசும்போது, “எந்தப் போரைப் புறந்தள்ள முடியும்? ஈழத்தில் எமது தமிழினம் நடத்திய போரையா? இங்கே நடக்கும் சமூகநீதிப் போரையா? அமெரிக்க ஏகாதிபத்தியம் - ஏழை நாடுகள் மீது தொடுக்கும் போரையா? எந்தப் போரைப் புறந்தள்ள முடியும்? உதையப்பர்கள் இருக்கும் வரை ஓடப்பர்கள் எப்படி போரை நிறுத்துவார்கள்” என்ற கேள்வியை எழுப்பினார்.

திலிபனின் அறவழி உண்ணாவிரதப் போராட்டத்தையும், பெண் புலிகள் தற்கொலைப் படையாக மாறிய போராட்டத்தையும், அரங்கில் உணர்ச்சியுடன் பதிவு செய்தார்.

இதே அரங்கில் பேசிய பேச்சாளர்கள் பலரும், கலைஞர் புகழாரம் - ஆங்கில எதிர்ப்பு என்ற எல்லையோடு தங்களது உரையை பாதுகாப்பாக வரையறுத்துக் கொண்ட நிலையில், நடிகர் சிவக்குமார், வழக்கறிஞர் அருள்மொழி குரல்கள் மட்டும் தனித்துவமாக உண்மைகளை முழங்கியது பாராட்டுக்குரியதாகும்.


## ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பு!

பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டுள்ள ‘குடிஅரசு’ 27 தொகுதிகளும் (11,000 பக்கங்கள்), ‘ரிவோல்ட்’ ஆங்கில தொகுப்பும் (622 பக்கங்கள்) எல்லாவற்றுக்குமான குறுந்தகடும் இணைத்து -

**ரூ.4500/–க்கே கிடைக்கும்.**

**தொடர்புக்கு:** (வரைவோலை/மணியார்டர்)
தி. தாமரைக் கண்ணன், வங்கிக் கணக்கு-எஸ்.பி. 30.455291690, பாரத ஸ்டேட் வங்கி, பாரதிதாசன் பல்கலைகழகக் கிளை. பேசி: 9787313222

**முகவரி:** 1/810, முத்தமிழ் நகர், அடியனூத்து அஞ்சல், திண்டுக்கல்-624003.

குறிப்பு: பார்சலில் பெறுவதற்கு கூடுதலாக ரூ.100 சேர்த்து அனுப்பவும்.




“புரட்சிப் பெரியார் முழக்கம்” **ஆண்டுக்கட்டணம் ரூ.150/–**

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 1st July 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 ஜூலை 08, 2010 புரட்சி 9 முழக்கம் 26 விலை: ரூ.2.50


## மக்கள் பேராதரவுடன் வெற்றி நடை போடுகிறது

## நாகை, தஞ்சை மாவட்டங்களில் பரப்புரைக் குழு

*சாதி - தீண்டாமை ஒழிப்பு பரப்புரைக் குழு மூன்றாம் கட்டமாக மக்களை சந்தித்து - சாதி, தீண்டாமைக்கு எதிரான கருத்துகளைப் பரப்பி வருகிறது.*

சாதி தீண்டாமைக்கு எதிரான பெரியார் கொள்கை பரப்புரை பயணத்தின் மூன்றாம்கட்ட நிகழ்வாக, 1957 ஜூன் 23 ஆம் தேதி நீடாமங்கலம் ஆறுமுகம் தலைமையில் சாதி ஒழிப்புப் பிரச்சாரப் படை துவங்கிய அதே ஜூன் 23 ஆம் தேதி அதே கும்பகோணத்தில் துவக்கவிழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. இப் பொதுக் கூட்டத்திற்கு தோழர் சிற்பி ராசன் தலைமை தாங்கினார். சோலை மாரியப்பன் முன்னிலை வகித்தார். நாத்திகன் கழகப் பாடல் பாடினார். புதியவன், கடந்த இரண்டு கட்ட பயணங்களை விளக்கி உரையாற்றினார். கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், நீடாமங்கலம் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற பயணத்தையும், அதற்கு மக்கள் அளித்த ஆதரவு பற்றியும் உரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமிழகத்தில் நிலவும் சாதி தீண்டாமை கொடுமைகள் பற்றியும், கடந்த காலங்களில் கழகம் நடத்திய போராட்டங்கள் பற்றியும், அடுத்து சாதி தீண்டாமைக்கு எதிரான கழகத்தின் போராட்டம் பற்றியும் எடுத்துரைத்தார். இராவணன் நன்றி கூறினார்.

இந்தப் பொதுக் கூட்டத்தில் மயிலாடுதுறை இரசீத்கான், இளையராசா, மகேசு, சென்னை சுகுமார், சேலம் கோகுலக் கண்ணன், பெருந்துரை, துரை, இன்பத் தமிழன், ஆண்டிமடம் வில்பர்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். சிற்பிராசன் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடத்தினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை வினோத் செய்தார். சிற்பி ராசன் வீட்டில் தோழர்களுக்கு இரவு உணவு ஏற்பாடு செய்தார். பயணக் குழு சிற்பி ராசன் இல்லத்தில் தங்கியது.

இரண்டாம் நாள் ஜூன் 24 - மாலை 6 மணி அளவில் பாபநாசம் பேருந்து நிறுத்தத்தில் பரப்புரை நடந்தது. கடைவீதியில் பயண செலவிற்கு நன்கொடை திரட்டிய தோழர்களிடம் குடிஅரசு தீர்ப்பு வெற்றியை பகிர்ந்து கொண்டு, பொது மக்கள் வாழ்த்து தெரிவித்தனர். மாலை 7 மணி அளவில் அய்யம்பேட்டையில் பரப்புரை கூட்டம் நடைபெற்றது. 8.30 மணியளவில் தஞ்சை பெரியார் சிலை அருகில் பரப்புரை நடந்தது. மூன்று பகுதிகளிலும் மாவட்ட அமைப்பாளர் சோலை மாரியப்பன், நாகை மாவட்ட செயலாளர் மயிலாடுதுறை மகேசு கலந்து கொண்டனர். பசு. கவுதமன் பயணக்குழு தோழர்களை தனது இல்லத்தில் தங்க வைத்து இரவு மற்றும் காலை உணவு வழங்கினார். அனைத்து பரப்புரை நிகழ்ச்சியிலும் நாத்திகன் பாடல்களைப் பாடினார். திருச்சி புதியவன் உரையாற்றினார்.

மூன்றாம் நாள் ஜூன் 25 அன்று மதிய உணவை பாப்பாநாடு தாய்த் தமிழ் பள்ளி தாளாளர் காமராசு ஏற்பாடு செய்தார். 5 மணியளவில் ஒரத்தநாடு அண்ணா சிலை அருகே பரப்புரை நடந்தது. மக்களிடம் தோழர்கள் உண்டியல் ஏந்திச் சென்று நிதி திரட்டும்போது, பெரியார் திராவிடர் கழகத்தினர் என்பதை அறிந்து பொது மக்கள் உற்சாகத்துடன் நிதி வழங்கினர். 6 மணிக்கு பாப்பாநாடு பேருந்து நிறுத்தம் அருகே பரப்புரை நடந்தது. பாப்பாநாடு தாஸ் அனைவருக்கும் தேநீர் வழங்கினார். 7.30 மணி அளவில் பட்டுக்கோட்டை பாரி, இளவரசன், வடசேரி சிவசுப்பிரமணியம் ஆகியோர் வரவேற்றனர். பெரியார் சிலை அருகில் (பேருந்து நிலையம்), பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் சிலை அருகில் (மணிக்கூண்டு), அஞ்சா நெஞ்சன் அழகிரி சிலை அருகில் (தபால் நிலையம்) மூன்று இடங்களில் இரவு 10.15 மணி வரை பரப்புரை நடந்தது. பாரி, இளவரசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இரவு உணவு அண்ணா பல்கலைக்கழக தனி அலுவலர் முருகையன் வழங்கினார். தோழர்கள் அனைவரும் பாரி இல்லத்தில் தங்கினர்.

நான்காம் நாள் 26 ஆம் தேதி அன்று காலை 11 மணி அளவில் ஆத்தூர் பகுதியில் பரப்புரை நடைபெற்றது. 12.30 மணிஅளவில் மதுக்கூர் பேருந்து நிலையத்திலும், 1.15 மணி அளவில் மதுக்கூர் பெரியார் சிலை அருகிலும் பரப்புரை நடந்தது. அனைத்து கூட்டங்களிலும் நாத்திகன் பாடல்களைப் பாடினார். புதியவன் உரையாற்றினார். பாரி இல்லத்தில் அனைவருக்கும் அசைவ உணவு வழங்கப்பட்டது. மாலை 5 மணி அளவில் துவரங்குறிச்சியில் பரப்புரை நடந்தது. சூலூர் வீரமணி உரையாற்றினார். 6 மணி அளவில் அதிராம்பட்டணம் பேருந்து நிலையம் எதிரில் நடந்த பரப்புரையில் புதியவன் உரையாற்றினார். 7.15 மணியளவில் முத்துப்பேட்டை பேருந்து நிறுத்தம் அருகிலும், இரவு 8.15 மணியளவில் திருத்துறைப் பூண்டி அண்ணா சிலை அருகிலும் பரப்புரை நடந்தது. தோழர்கள் சோலை மாரியப்பன், சூலூர் வீரமணி ஆகியோர் உரையாற்றினர். தமிழ்த் தேச பொதுவுடமை கட்சித் தோழர் பழனிக்குமார் வரவேற்றார். இரவு கழக ஆதரவாளர் ஜான் பிரிட்டோ, அவரின் பண்ணை வீட்டில் தங்க ஏற்பாடு செய்தார். இரவு மற்றும் காலை, மதிய உணவுகளை பழனிக்குமார் சிறப்பாக ஏற்பாடு செய்து வரவேற்றார்.

ஐந்தாம் நாள் ஜூன் 27 அன்று திருக்குவளையில் மாலை 5 மணியளவில் பரப்புரை நடைபெற்றது. 6.15 மணிக்கு கீழ்வேளூரிலும், 7.30 மணிக்கு திருவாரூர் வாள வாய்க்கால் ரவுண்டானா மற்றும் தைலா திரையரங்கம் ஆகிய பகுதிகளிலும் இரவு 9.30 மணி வரை பரப்புரை நடைபெற்றது. தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த இரவி மற்றும் நாம் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த பால்ராசு ஆகியோர் தங்குமிடம், இரவு மற்றும் காலை மதிய உணவுகளுக்கு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். சூலூர் வீரமணி, திருச்சி புதியவன் பரப்புரை செய்தனர். நாத்திகன் பாடல்களைப் பாடினார்.

ஆறாம் நாள் ஜூன் 28 அன்று மாலை 5 மணி அளவில் நன்னிலம் பேருந்து நிலையம் எதிரில் சேலம் கோகுலக்கண்ணன் பேசினார். 6.15 மணி அளவில் சன்னாநல்லூர் பகுதியில் பரப்புரை நடந்தது. இப்பகுதியைச் சேர்ந்த கழகத் தோழர்கள் இன்பத் தமிழன், சுந்தர பாண்டியன் ஆகியோர் தேநீர் வழங்கினர். 7 மணிக்கு பேரளம் பகுதியிலும் 8.15 மணிக்கு கொல்லுமாங்குடி பகுதியிலும் பரப்புரை நடந்தது. பரப்புரை கூட்டங்களில் நாத்திகன் சாதி ஒழிப்புப் பாடல் பாட, கோகுல கண்ணன் உரையாற்றினார். பயணம் முடிந்து தோழர்கள் மயிலாடுதுறையில் இரவு தங்கினர். மயிலாடுதுறை கழகத் தோழர்கள் இரசித்கான், இளையராசா, மகேசு, விசயராகவன் ஆகியோர் தங்குமிடம், உணவு ஆகியவற்றை சிறப்பாக ஏற்பாடு செய்தனர்.

ஏழாம் நாள் ஜூன் 29 அன்று மால 6 மணியளவில் ஆக்கூரிலிருந்து பயணம் துவங்கியது. பேருந்து நிலையம் அருகில் நடந்த கூட்டத்தில் நாத்திகன், செந்தில் (ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம்) ஆகியோர் சாதி ஒழிப்புப் பாடல்களைப் பாட கோகுலக் கண்ணன் உரையாற்றினார். சிற்பி இராசன் மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சியை நடத்தினார். 7.15 மணியளவில் செம்பனார் கோயிலில் நடந்த பரப்புரையில் நாத்திகன், செந்தில் சாதி ஒழிப்புப் பாடல்களைப் பாடினர். தனவேந்திரன் (ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம்), கோகுலக் கண்ணன் ஆகியோர் உரையாற்றினர். சிற்பி இராசனின் ‘மந்திரமா தந்திரமா’ நடைபெற்றது. இரவு 8.15 மணியளவில் மயிலாடுதுறை கிட்டப்பா அங்காடியில் நடந்த பரப்புரை நிகழ்ச்சியில் பயணத்தை வாழ்த்தி, சுப்பு. மகேசு (தமிழர் உரிமை இயக்கம்), முரளிதரன் (தமிழர் உரிமை மீட்பு இயக்கம்), பேராசிரியர் செயராமன் ஆகியோர் உரையாற்றினர். கோகுலக்கண்ணன் பயணத்தின் நோக்கத்தையும், கழகம் சாதி ஒழிப்பிற்கு நடத்திய போராட்டங்களையும் விளக்கி உரையாற்றினார். சிற்பி இராசன், ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சியை நடத்தினார்.

எட்டாம் நாள் ஜூன் 30 அன்று மாலை 5.35 மணியளவில் தேரழந்தூர் பகுதியில் பரப்புரை தொடங்கியது. 6.15 மணியளவில் குத்தாலம் பேருந்து நிறுத்தம் அருகில் நடந்த பரப்புரையில் தோழர்கள் இரசீத்கான், தனவேந்திரன், கோகுலக்கண்ணன் ஆகியோர் உரையாற்றினர். சிற்பி இராசன், ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சியை நடத்தினார். 7.30 மணியளவில் அஞ்சலாற்றங்கரை பகுதியில் நடைபெற்ற பரப்புரை நிகழ்வில் சுப்பு மகேசு, கோகுலக்கண்ணன் ஆகியோர் உரையாற்றினர். 8.35 மணிக்கு மயிலாடுதுறை ரயிலடியில் பரப்புரை நடந்தது. கோகுலக் கண்ணன், வேலு, குணவேந்தன் (விடுதலை சிறுத்தைகள் மாவட்ட செயலாளர்) ஆகியோர் உரையாற்றினர். சிற்பி இரா சனின், ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சி நடைபெற்றது.

பயணக் குழு சாதி தீண்டாமை எதிர்ப்புப் பரப்புரையை தொடர்ந்து ஜூலை 6 ஆம் தேதி மன்னார்குடியில் பயணம் நிறைவு செய்தது.

***(பயணச் செய்திகள் தொடரும்.)***

**செய்தி: இராவணன்**

### கழக நிர்வாகக் குழு திருச்சியில் கூடுகிறது

பெரியார் திராவிடர் கழக மாநில நிர்வாகக் குழு ஜூலை 18 ஆம் தேதி காலை 10 மணிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் திருச்சியில் கூடுகிறது.

இடம்: ராஜா கார்டன் ஓட்டல், திருச்சி (திருச்சி ரயில்வே நிலையம் எதிரில்)

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தவறாது வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– தலைமைக் கழகம்,**
**பெரியார் திராவிடர் கழகம்**

## 22000 மக்கள் மரணம்: 5 லட்சம் மக்கள் ஊனத்துக்கு நீதிக் கிடைக்கவில்லை

# போபால் நச்சு வாயுவைவிட ஆபத்தான காங்கிரசு

- இரண்டாம் உலகப்போரில் ஹிரோஷிமாவில் குண்டுவீசப்பட்டதுபோல் போபால் நகரம் காட்சியளித்தபோது, செத்து பிணங்களாக வீழ்ந்துக் கொண்டிருந்த மக்களைக் காப்பாற்றுவதற்கு, நச்சுவை முறியடிக்கக்கூடிய சிகிச்சை அவசரமாக அளிக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்காக மருத்துவர்கள் போபாலில் வெளியேறிய நச்சு வாயுவில் அடங்கியுள்ள பொருள்கள் என்ன என்பதை போபால் நிறுவனத்திடம் கேட்டபோது, அதை வெளிப்படுத்த நிர்வாகம் மறுத்துவிட்டது. அதன் அமெரிக்க தலைமையகம், இந்த வாயுவில் (எம்.அய்.சி.) அடங்கியுள்ள மூலப் பொருள்களையும், ஆபத்து நேர்ந்தால் முறியடிப்பதற்கான மாற்று வேதிப் பொருள் என்ன என்பதையும் ரகசியமாகவே வைத்திருந்தது.
- சம்பவம் நடந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு நச்சு வாயுவில் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை தந்த 'இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழு', இந்த நச்சை முறியடிக்கக்கூடிய மருந்து 'சோடியம் தையோ சல்பேட்' என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. இந்த முறிப்பு மருந்தை, அப்போதே பாதிக்கப்பட்டோருக்கு தந்திருந்தால் ஏராளமான உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும் என்றும் அந்த அறிக்கை கூறியது.
- இந்திய மருத்துவத் துறையிடம் இந்த முக்கியமான உண்மையை கார்பைடு திட்டமிட்டு மறைத்தது மிகப் பெரும் கிரிமினல் குற்றம். ஆனால், கார்பைடு நிறுவனத்துக்கு எதிராக வழக்கை நடத்திய சி.பி.அய். புலனாய்வு நிறுவனம், இந்த முக்கியமான குற்றச்சாட்டை நீதிமன்றத்தில் வலியுறுத்தவே இல்லை.
- குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் முன் வைக்கப்பட்ட வாதம் தான் விசித்திரமானது. வெளியேறிய வாயு மிகவும் நச்சுத் தன்மை கொண்டவை என்பதும் உயிருக்கு ஆபத்தானது என்பதும் உண்மைதான். ஆனால், இப்போது நடந்த விபத்துக்கு, நாங்கள் எப்படி பொறுப்பாக முடியும்? இது கடவுளின் செயல். எந்த மனிதரையும் கடவுளின் செயலுக்கு பொறுப்பாக்க முடியாது (It was an act of god for which no human being was responsible) என்று நீதிமன்றத்தில் கடவுளை துணைக்கழைத்தார்கள், குற்றம் சாட்டப்பட்டவர்கள்.
- 1985 ஆம் ஆண்டு நாடாளுமன்றம் போபால் நச்சு வாயு பேரழிவுச் சட்டம் என்ற சட்டம் ஒன்றை இயற்றியது. இச் சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு இழப்பீடு கோரி நேரடியாக நீதிமன்றம் போவதை அரசு தடுத்து நிறுத்தி, பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக, இழப்பீடு கோரும் உரிமையை அரசு எடுத்துக் கொண்டது.
- முதலில் ரூ.3900 கோடி இழப்பீடாகத் தரவேண்டும் என்று இந்திய அரசு அமெரிக்காவிலுள்ள யூனியன் கார்பைடு நிறுவனத்தின்மீது வழக்கு தொடர்ந்தது. வழக்கு அமெரிக்காவில் நடத்தப்பட்டிருந்தால், இழப்பீட்டுத் தொகை அதிகமாக தரவேண்டி இருக்கும் என்பதால், வாக்கு இந்தியாவுக்கே போபால் மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. வழக்கு நடந்து கொண்டிருக்கும்போதே இந்தியப் பார்ப்பன ஆட்சி, யூனியன் கார்பைடு நிறுவனத்துடன் ரகசியமாக பேச்சு நடத்தி வந்தது.
- போபால் மாவட்ட நீதிபதி இடைக்கால நிவாரணமாக, ரூ.350 கோடி தருவதற்கு உத்தரவிட்டார். யூனியன் கார்பைடு நிறுவனம் இந்தத் தொகையை ஏற்க மறுத்து, ம.பி. உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தபோது, உச்சநீதிமன்றமோ, நீதிமன்றத்துக்கு வெளியே இரு தரப்பினரும் பேசித் தீர்த்துக் கொள்ளுமாறு உத்தரவிட்டு, எல்லா மனுக்களையும் தள்ளுபடி செய்துவிட்டது. அமெரிக்காவிலிருந்து வரும் அன்னிய முதலீடுகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக, சொந்த நாட்டு குடிமக்களின் 'பிணங்களை' பணயமாக வைத்தது, இந்திய அரசு.
- 330 கோடி டாலருக்கு பதிலாக ரூ.173 கோடி இழப்பீட்டுத் தொகைக்கு இந்திய அரசு ஒப்புக் கொண்டது. இதைவிடக் கொடுமை பாதிக்கப்பட்ட மக்களிடம் இது பற்றி எந்தக் கருத்தையும் இந்திய அரசு கேட்கவில்லை என்பதுதான்!
- பாதிக்கப்பட்டவர்கள் - இறந்தவர்கள் - இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கு கடுமையான சான்றுகளைக் கேட்டது, இந்திய அரசு. இறந்து போனவர் என்பதை நிரூபிப்பதற்கு இறுதி ஊர்வலத்தில் போனவர்கள் சான்று தர வேண்டும் என்றார்கள். நியாயமான பல விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பட்டன. யூனியன் கார்பைடு நிறுவனத்தின் செலவை குறைக்க அரசு அவ்வளவு கவலை எடுத்துக் கொண்டது.

> **22,000**
> **சொந்த நாட்டு மக்களின் மரணத்தை புறந்தள்ளி, அமெரிக்க முதலாளியை காப்பாற்றத் துடித்த ராஜீவ்காந்தி, தேச பக்தரா?**

இறந்தவர், பாதிக்கப்பட்டவர் பற்றி துல்லியமான கணக்கெடுப்பு நடத்துவதில், மத்திய பிரதேச அரசோ, இந்திய அரசோ, எந்த அக்கறையும் காட்டவில்லை. இறந்தவர்கள் 3000 பேர் என்றும், இறந்தவர்கள் உட்பட பாதிக்கப்பட்டவர்கள் ஒரு லட்சத்து 5 ஆயிரம் பேர் என்றும், அவர்களே கணக்கிட்டுக் கொண்டார்கள். இழப்பீடு கோரி விண்ணப்பித்த 10 லட்சம் பேரில் 5,74,367 பேர் மட்டுமே பாதிக்கப்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. உண்மையாக பாதிப்புக்குள்ளானவர்களின் 5,74,367 பேர் என்று இந்திய அரசு ஏற்றுக் கொண்டாலும், 1 லட்சத்து 5 ஆயிரத்து 500 பேர் மட்டுமே பாதிப்புக்குரியவர்கள் என்ற அடிப்படையில், கார்பைடு நிறுவனம் வழங்க முன்வந்த ரூ.173 கோடியை மட்டும், இந்தியா பெற்றுக் கொண்டது.

- இதனால் சராசரியாக பாதிக்கப்பட்ட ஒருவருக்குக் கிடைத்தது ரூ.1500க்கும் குறைவாகத்தான். பாதிக்கப்பட்ட மக்கள் மருத்துவ செலவுக்குக்கூட பணமின்றி மரணமடைந்தனர். நச்சு வாயுவின் தாக்கம் மறையாமல், மக்களைத் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாக்கியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான அமைப்புகள் நீதி கேட்டு, இடைவிடாமல் போராடின. 1989 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி உருவான உடன்பாட்டை எதிர்த்து, பாதிக்கப்பட்டோருக்கான அமைப்புகள் மீண்டும் உச்சநீதிமன்றத்தின் கதவைத் தட்டின. உச்சநீதிமன்றத்தின் உத்தரவின்படி மீண்டும் போரால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில்தான் கடந்த 7.6.2010 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.
- மத்திய பிரதேச மாநிலம் போபாலில் அமெரிக்க நிறுவனமான யூனியன்கார்பைடு தொழிற்சாலையிலிருந்து விஷ வாயு வெளியேறிய நாள்.1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 ஆம் தேதி நள்ளிரவு 12 மணி முதல் 12.45 வரை அந்த கொடூரமான சம்பவம் நடந்தது.
- கார்பைடு ஆலையின் தொட்டி எண்.607-லிருந்து 47 டன் விஷ வாயு வெளியேறி காற்றில் கலந்தது. போபால் நகரில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை 8 லட்சம். பாதிப்புக்கு உள்ளானோர் 5 லட்சம் . உறக்கத்தில் இருந்த நிலையிலேயே பலர் மாண்டனர். இறந்தவர்கள் சுமார் 22000 பேர்.
- செவின், டெமிக் எனும் பூச்சிக்கொல்லி மருந்து களைத் தயாரிப்பது இந்த தொழிற்சாலை. இந்த பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரிப்பதற்கு தேவையான மூலப் பொருள்களில் ஒன்று 'மெத்தில் அய்சோ சைனைட்'. இந்த வேதிப் பொருளையும், இந்தத் தொழிற்சாலை தயாரித்தது. உயிருக்கு ஆபத்துகள் நிறைந்த இந்தத் தயாரிப்புக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி யூனியன் கார்பைடு நிறுவனம் கவலைப்படவே இல்லை. இந்த ஆபத்தான வாயு வெளியேறும் நிலை வந்து விட்டால், எடுக்கப்பட வேண்டிய முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள் பற்றி இந்தத் தொழிற் சாலையில் எவ்வித அறிவிப்பும் காணப்பட வில்லை. மக்களிடமும் இது பற்றி முன்னெச் சரிக்கையான தகவல்கள் எதுவும் தெரிவிக்கப் பட்டதில்லை.
- இப்படி ஒரு பெரும் விபத்து நடப்பதற்கான வாய்ப்புகள் இருப்பது யூனியன் கார்பைடு நிறு வனத்துக்கு முன்கூட்டியே தெரியும். தொழிற் சாலையை மேற்பார்வையிட வந்தது விஞ்ஞானம் மற்றும் தொழில்துறை ஆய்வுக்குழு; (Scientific and Industrial Research Council) குழுவின் தலைவராக இருந்தவர் - அதன் இயக்குனர் எஸ். வரதராஜன் என்ற விஞ்ஞானி. பூமிக்கு கீழே அமைக்கப் பட்டிருந்த சோதனைக் கூடத்தை சோதனை யிட்டபோதே - 610 ஆவது எண் தொட்டிக்குள் அடைக்கப்பட்டிருந்த வாயுவின் அளவு மிக மிக அதிகமாக இருந்தது; தொட்டியைக் கழுவும் போது தண்ணீர் புகும் வாய்ப்புகள் உள்ளன என்று எச்சரித்திருந்தது; குழு எச்சரித்தது போலவே தான் நடந்தது. யூனியன் கார்பைடு நிறுவனம், இந்த எச்சரிக்கையை பொருட் படுத்தவே இல்லை.
- யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைமையகம் அமெரிக்காவில் உள்ளது. உலகம் முழுதும் இது தொழிற்சாலைகளையும் தனது நிறுவனத்தோடு இணைக்கப்பட்ட ஆலைகளையும் தன்னிட மிருந்து மூலப் பொருட்களை வாங்கி செயல்படும் தொழிற்சாலைகளையும் இந்நிறுவனம் நடத்தியது. யூனியன் கார்பைடு நிறுவனத்தின் கிளைகளாக இந்தியாவில் 14 தொழிற்சாலைகள் நடந்தன. போபாலில் உள்ள இந்தத் தொழிற் சாலையின் நிர்வாகப் பொறுப்புகள். இந்தியாவில் அதன் கிளை நிறுவனங்களைக் கண்காணிக்கும் அதிகாரிகள் பொறுப்பில் விடப்பட்டன. போபாலில் இந்தத் தொழிற்சாலை முதலில் தொடங்கியபோது, பூச்சிக்கொல்லி மருந்தான 'செவின்' இங்கு தயாரிக்கப்படவில்லை. அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. பிறகு, போபாலிலேயே அதை உற்பத்தி செய்யவும், அதற்கு தேவையான மெத்தில் அய்சோசைனட் (எம்.அய்.சி.) என்ற உயிருக்கு ஆபத்தான வாயுவையும் போபாலிலேயே தயாரிக்கும் முடிவையும் யூனியன் கார்பைடு நிறுவனத்தின் இந்திய அதிகாரிகள் எடுத்தனர்.
- இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் 12 பேர். அமெரிக்காவிலுள்ள யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைவர் வாரன் ஆண்டர்சன் - அதில் ஒருவர். அவர் தலைமறைவாகிவிட்டார் என்று அறிவிக்கப்பட்டு, வழக்கிலிருந்து தனியே பிரிக்கப்பட்டார். 26 ஆண்டுகாலமாக எந்த ஒரு விசாரணைக்கும் அவர் வரவில்லை. அதேபோல் குற்றம்சாட்டப்பட்டிருந்த யூனியன் கார்பைடு

(4 ஆம் பக்கம்)

### புதுவை இல்லத் திறப்பு விழாவில் கொளத்தூர் மணி உரை

# வாஸ்தும் பார்ப்பனர்களும் வாழ்விற்கு முட்டுக் கட்டைகள்

*4.4.2010 ஞாயிறு அன்று மாலை 6 மணிக்கு புதுவை மாநிலம் வீராம்பட்டிணத்தில், தி.மு.க. புதுச்சேரி மாமன்ற உறுப்பினர் பா. சக்திவேல் சகோதரரும், கழக ஆதரவாளருமான பா. உதயராஜ் – உ. சுயசந்திரா ஆகியோரது "ஈன்றோர் இல்லத்தையும்" பெரியார் படத்தையும் திறந்து வைத்து கழக தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்.*

அருமை தோழர்களே! ஒரு காலத்தில் பண்பாட்டில், தலைநிமிர்ந்த சமுதாயமாக, சமத்துவம் பேணிய சமுதாயமாக அனைத்து தொழில் செய்கிறவர்களும், சாதி, பேதம் ஏதும் பாராமல், சமத்துவமாய் சுதந்திரமான வாழ்க்கையை வாழ்ந்து வந்த தமிழ் சமுதாயத்தில் இடையில் வந்து புகுந்து கொண்ட சமத்துவமின்மை, பெண் அடிமைத் தனத்தை, சாதிய கொடுமைகளை, இவை அனைத்தையும் ஏற்படுத்தி வைத்திருக்கின்ற அந்த ஆரிய கொடுமையிலிருந்து மீண்டு புத்தெழுச்சியை நம் தமிழ்ச் சமுதாயம் பெற வேண்டும். ஒரு பண்பாட்டுப் புரட்சியை உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான். பெரியார் பண்பாட்டு புரட்சி இயக்கமாம் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார்.

தன்னோடு உறுப்பினர்களாக இணைத்து கொண்ட மக்கள் மட்டுமல்லாமல் அவருடைய கருத்தை, அடிப்படையாக கடவுள் மறுப்பை ஏற்றுக் கொள்ளாதவர்கள்கூட அவருடைய பெரும் பணியை பார்த்து வியந்ததோடு மட்டுமல்லாமல் துணை நின்றார்கள். பழுத்த சைவ பழம் மறைமலை அடிகள் திரு.வி.க., குன்றக்குடி அடிகளார் போன்றவர்கள் எல்லாம் துணை நின்றார்கள். ஒரு நாத்திகனோடு கடவுள் நம்பிக்கை உள்ள, கடவுள் நம்பிக்கையை பரப்புகின்ற ஆன்மீகவாதிகள் ஏன், அவரோடு இணைந்து பணியாற்றினர் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு நாட்டில் பண்பாட்டு படையெடுப்புதான், ஒரு போர்ப் படையெடுப்பைவிட கொடுமையானது, கொடூரமானது. அதுவே மக்களை நிரந்தர அடிமைகளாக ஆக்கக் கூடியது. ஒரு ஆயுதம் தாங்கிய ஒரு போர்ப்படை பெறுகின்ற வெற்றியை ஒரு காலத்தில் மீண்டும் இழந்தவர்கள் பெற முடியும், ஆட்சியை நிறுவிக் கொள்ளவும் முடியும். ஆனால் பண்பாட்டு படையெடுப்பின் போது, ஏற்படுகின்ற கொடுமையிலிருந்து மீள்வது அவ்வளவு எளிதான தல்ல.

நம் நாட்டில் ஆரியர்கள் 3500 ஆண்டுகளுக்கு முன்பு வடநாட்டில் புகுந்தார்கள். ஆடு, மாடு மேய்த்து கொண்டு நுழைந்த ஆரியர்கள் ஒரு ஆயிரம் ஆண்டுகள் கழித்து கி.மு.6 ஆம் நூற்றாண்டு வாக்கில் தான், தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள். அவர்கள் படையெடுத்து வரவில்லை. பண்பாட்டு படையெடுத்து நுழைந்தார்கள். பண்பாட்டு படையெடுப்பு எவ்வளவு அழுத்தம் உள்ளது என்பதற்கு ஒரு செய்தியை சொல்ல விரும்புகிறேன்.

ஆப்பிரிக்க நாடு இனக் குழுக்களாக இருந்து இயற்கையோடு இணைந்த வாழ்க்கை வாழ்ந்து வந்தபோது பல்வேறு காலக்கட்டங்களில் ஐரோப்பியர்கள் மெல்ல, மெல்ல ஆக்கிரமித்து அடிமைப் படுத்தினர். அதில் முக்கியமாக கென்ய நாட்டில் விடுதலை போர் நடந்தபோது அந்த நாட்டின் விடுதலை வீரன், டாக்டர் கென்யாடா, அந்த நாடு எப்படி அடிமையானது என்பதை பற்றி சொன்னான். "எங்கள் நாட்டிற்கு ஐரோப்பாவிலிருந்து பாதிரிமார்கள் வந்தார்கள். அப்போது நாடு எங்கள் கையில் இருந்தது. வந்த பாதிரிமார்கள் கையில் பைபிள் மட்டும் இருந்தது. எங்களுக்கு ஜபிக்க கற்றுக் கொடுத்தார்கள். கண்களை மூடிக் கொண்டு ஜபம் செய்த நாங்கள் ஜபத்தை முடித்து கண்களை விழித்து பார்த்தோம். பைபிள் எங்கள் கையில் இருந்தது. நாடு அவர்கள் கையில் இருந்தது" என்று.

ஒரு பண்பாட்டு படையெடுப்பால் அவர்கள் மெல்ல, மெல்ல அந்த மக்களின் கருத்தை மாற்றி விடுகிறார்கள். அதைத் தான் இப்போது ஐயப்பன் பக்தியில் பார்க்கிறோம். ஒரு ஒற்றை மலையாளி ஒரு ஊரில் ஒரு 25 பேரின் ஆதரவு பெற்று மாலை போடும் குருசாமியாக மாறி அடுத்த ஆண்டு மீண்டும் ஒரு 25 பேரின் ஆதரவு பெற்று ஒரு 50 பேரின் ஆதரவு பெற்றவனாக மாறி விடுகிறான்.

இந்த பண்பாட்டு படையெடுப்பு எந்தவித ஓசையுமில்லால் எந்தவித சலசலப்பும், பரபரப்பும் இல்லாமல் மெல்ல, மெல்ல நுழைந்து கடைசியில் சொந்த நாட்டு பண்பாட்டை இழந்து வந்தவன் பண்பாட்டிற்கு அடிமையாகிற கொடுமை குறிப்பாக ஆரிய படையெடுப்பின்போது நடந்தது. அவர்கள் ஒவ்வொரு நிகழ்விலும் கொண்டு வந்து நுழைத்தவை நம் வீட்டு வாழ்வியல் நிகழ்வுகள். எல்லாவற்றிலும் அவர்கள் கொண்டு வந்து நுழைத்த கொடுமைகள் தான். அதிலிருந்து நாம் மீள்வதற்கு இன்னும் எத்தனை ஆண்டு காலம் ஆகும் என்று தெரியாது. இதனால்தான் மிகப் பெரும் சமுதாயம் இழிவில் அமுக்கப்பட்டது. இதிலிருந்து விடுபட தான் பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் போராடிக் கொண்டிருந்தார்.

அதில் ஒரு கூறாகத்தான் வாழ்வியல் நிகழ்வுகளில் ஆரியர்களை ஒதுக்கிவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் ஒவ்வொரு வாழ்வியல் நிகழ்ச்சியிலும் குழந்தைகளுக்கு பிறந்த நாள் எடுப்பதில் இருந்து, குழந்தைகளை பல பேர் பார்த்தால் கண்ணேறு பட்டுவிடும் என்று சொல்லிக் கொண்டிருந்த காலம் மாறி, குழந்தைக்கு பிறந்த நாள் விழா எடுத்து, அதை பல பேருக்கு காட்டி புகைப்படம் எடுத்து, அந்த மூட நம்பிக்கையை, அச்சத்தை மாற்றி காட்டுகிறோம். அடுத்து பெயர் சூட்டு விழாவை எடுத்துக் கொண்டால் இந்த நாளில் பிறந்தவர்கள் ஒரு குறிப்பிட்ட எழுத்துக்களில் தான் பெயர் வைக்க வேண்டும் என்று பெயர்களைத் தேடி, பொருளற்ற பெயர்களையும், கேவலமான பொருள் கொண்ட பெயர்களையும் வைத்துக் கொண்டனர். ஆரியர்களுடைய மேலாண்மையை நிறுவிக் கொள்வது மட்டுமல்ல, நம்மை அடிமையாகவும் வைத்திருக்கிற பண்பாட்டிலிருந்து மீள தரம் தாழ்ந்த பெயர்களை வைத்துக்கொள்ளாமல் பெயர் சூட்டு விழாவின் வழியாக சமுதாய புரட்சியாளர்களின் பெயர்களையும் தமிழ்ப் பெயர்களையும் வைத்துக் கொள்கிறோம்.

எல்லாவற்றிலும் புகுந்து கொண்ட மூட நம்பிக்கை வீடுகட்டுவதில் இன்னும் கூடுதலாக இருக்கின்றது. வாஸ்து சாஸ்திரம் என்று ஒன்று வந்து இந்த மக்களை ஆட்டுகிறது. எல்லா ஊர்களிலும் ஒன்றிரண்டு வீடுகளையாவது இடித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். கட்டும்போது வாஸ்து பார்த்து வீடுகட்டி தொலைந்தால்கூட பரவாயில்லை என்று மன்னிக்கலாம். ஆனால், கட்டிய வீட்டை வாஸ்து சரியில்லை என்று இடிக்கிறார்கள். இந்த வாஸ்து என்பது ஆந்திராவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. இதை அண்மைக் காலத்தில் மிக அதிகமாக எடுத்து கொள்கிறார்கள். பொதுவாக ஒரு நம்பிக்கை என்பது அறிவியல் சார்ந்ததாக இருக்குமேயானால், ஒரே விதமாக இருக்கும். ஆனால் வாஸ்து அவனவன் விருப்பத்திற்கு ஏற்றவாறு ஆளுக்கொன்றாய் சொல்கின்றான். இந்த வாஸ்து சாஸ்திரத்தில் கழிவறை பற்றியெல்லாம் எழுதி வைத்திருக்கின்றான். ஆனால், ஒரு காலத்தில் வீட்டில் கழிவறை என்பதே கிடையாது. அரசர்களின் அரண்மனைகளில்கூட கழிவறைகள் கிடையாது. அதனால் தான் வெளிக்கு போதல் என்ற சொல்லாடலே உள்ளது. ஆனால், இப்பொழுது அதை தென்மேற்கு பக்கம் வைக்க வேண்டும் என்கிறன். வாஸ்து நிபுணர் பி.என். ரெட்டி தென்மேற்கில் வைக்கக்கூடாது என்கிறார். கவுரி திருப்பதி ரெட்டி, வீட்டுக்கு முன்னாடி மரம் அல்லது கம்பம் இருந்தால் பையன் இறந்து விடுவான் என்று எழுதி வைத்துள்ளான். ஆனால், பெரும்பாலான வீடுகளின் முன்னால் மின் கம்பம், தொலைபேசி கம்பம் இருக்கத்தான் செய்கிறது.

பி.என்.ரெட்டி என்பவர் ஆந்திர முதல்வராக இருந்த என்.டி.ராமாராவுக்கு வாஸ்து சொன்னவர். அலுவலகத்திற்கு தெற்கே கதவிருப்பது ஆட்சிக்கு ஆபத்து, வடக்கே கதவு வைக்க வேண்டும் என்று கூறினார். வடதிசையில் குடியிருப்புகளாக இருந்தது. வாஸ்து மூடநம்பிக்கையால், அரசு பணம் பல கோடிகளை செலவு செய்து சாலை போட ஆரம்பித்தனர். சாலை போட்டு முடிப்பதற்குள் என்.டி.ராமராவ் ஆட்சி போய்விட்டது.

அடுத்து தேவகௌடா பிரதமராக வந்தபோது, 2 படிக்கட்டு இருப்பது சரியல்ல, மூன்று படிக்கட்டுகள் இருக்க வேண்டும் என்று வாஸ்து சொன்னான். அது பொதுப் பணித் துறைக்கு சென்று கட்டி முடிப்பற்குள் அவர் ஆட்சி போய்விட்டது. இதுதான் வாஸ்து சாஸ்திரம். இது மக்கள் மனதில் அவ்வளவு ஆழமாக புகுந்து, நேரத்தையும், பணத்தையும், அறிவையும் இழக்கச் செய்கிறது.

வீட்டை கட்டி முடித்த பின்பு திறப்பதற்கு செய்யும் முயற்சி இருக்கிறது பாருங்கள். முதலில் பார்ப்பானை அழைப்பது. இப்பொழுது பார்ப்பானை தவிர்ப்பது என்பதே பெரும் புரட்சியாக ஆகிவிட்டது. பெரியவர்கள் சும்மாவா சொன்னார்கள் என்று பழமொழி சொல்வார்கள். ஒற்றை பார்ப்பான் எதிரில் வந்தால், ஆகவே ஆகாது என்பார்கள். ஆனால் ஒற்றை பார்ப்பானை அழைத்து வந்து வீடு திறப்பார்கள்.

மதியாதார் தலைவாசல் மிதியாதே என்றெல்லாம் சொல்வார்கள். பார்ப்பனர்கள், நம் அனைவரையும் கீழ் ஜாதி என்று மதிப்பதில்லை. அப்படி கொஞ்சம் கூட மதிக்காத பார்ப்பானை அழைத்து வந்து நம் வீட்டு நிகழ்ச்சியை ஏன் நடத்த வேண்டும்? அவனை விலக்கி வையுங்கள், இதுதான் முதல் வேண்டுகோள். மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு என்று சொன்ன பெரியார், மக்களிடம் வைத்த முதல் வேண்டுகோள், மான உணர்வுக்கு எதிரான பார்ப்பானை, நம்மை மதிக்காத பார்ப்பானை அழைக்காதே.

அடுத்து, தமிழன் வீட்டு நிகழ்ச்சிகளை தமிழில் நடத்திக் கொள்வது, வடமொழியில் சொல்வதால் நமக்கு ஏதும் புரியாது. எனவே திருமணமாக இருந்தாலும் பெயர் சூட்டு விழாவாக இருந்தாலும் நமது நிகழ்ச்சிகள் அனைத்தையும், தமிழர்களைக் கொண்டு நடத்துங்கள். தமிழில் நடத்துங்கள் என்பதுதான் பெரியார் வைத்த கோரிக்கை. இப்பொழுது நாங்கள் பகுத்தறிவு பற்றியோ, விடுதலைப் புலிகள் ஆதரவு பற்றியோ பேசுகின்றபோது, அதில் உங்களுக்கு கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால், புரியாமல் இருக்காது. எனவே தமிழ் நாட்டில் நடக்கின்ற நிகழ்ச்சிகளில், தமிழர்கள் மத்தியில் நடக்கின்ற நிகழ்ச்சிகளில் தமிழில் நடத்தினால்தான், அதில் இருக்கக்கூடிய தவறையாவது சுட்டிக்காட்ட முடியும்.

நம்முடைய மறுமலர்ச்சிக்கும், தமிழர்களின் முன்னேற்றத்திற்கும் தடையாக இருப்பதோடு, அரசியல் ரீதியான உரிமை பெறவும் பார்ப்பனர்கள் தடையாக இருக்கின்றார்கள். நம்முடைய உரிமைக்கு, உரிமை வாழ்வுக்கு தடையாக இருக்கும் பார்ப்பனர்களை புறக்கணிக்கவேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்து, நம் வீட்டு நிகழ்ச்சிகளை அறிவார்ந்த முறையில் நடத்திக் கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன் வைத்து.

அடுத்து, நம் உரிமை பெற்ற வாழ்வுக்காக, இழந்து போன வரலாற்றை மீண்டும் மீட்டெடுக்க, நாம் போராடியாக வேண்டும். அரசியலில் இந்தியாவிற்கு அடிமையாக இருக்கின்றோம். பொருளாதார சுரண்டலுக்கு நாம் வடவருக்கு அடிமையாய் இருக்கின்றோம். பண்பாட்டில், வடநாட்டான் ஆரியனின் ஆதிக்கத்திற்கு நாம் உட்பட்டிருக்கின்றோம். இதிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும் என்று முயற்சிக்கின்றபோது, ஒரு காலத்தில் 1938 இல் தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கம் பிறந்தது. அதை ஆட்சியைப் பிடித்து நடைமுறைபடுத்துவோம் என்றவர்கள், அதன்பிறகு மாநில சுயாட்சி இப்போது இந்திய ஒருமைப்பாட்டைப் பற்றி பேசி வருகின்றார்கள்.

அரசியல் உரிமைகளை மீட்டு எடுப்பது, தமிழர்களுக்கான அரசியல், சமூக, பொருளாதார அரசியல் உரிமைகளை தமிழர்களே எடுத்துக் கொண்டால் தான், தமிழர்கள் விடுதலை பெற்ற மனிதர்களாக வாழ முடியும். விடுதலைப் பெற்ற நாடாக வாழ வேண்டும். அதைப் போராட்டமாக முன்வைக்கத் தயங்கினாலும், அதை நோக்கி குரலாவது எழுப்பவேண்டும்.

பக்கத்து ஈழ நாட்டில் ஒரு மானமுள்ள தமிழன்

(4 ஆம் பக்கம்)

# காவல்துறையின் “நடுநிலை” இதுதானா?

பெரியார் இயக்கத்தில் நீண்ட காலம் தொண்டாற்றி, தமிழகம் முழுதும் பெரியார் கருத்துகளைப் பரப்பி வந்த மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த கார், அவர், ‘குடிஅரசு’ தொகுப்பு வெளியீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அடுத்த நாளே தாக்கப்பட்டது. காவல்துறையில் புகார் தந்தும், எந்த நடவடிக்கையும் 15 நாட்களாக எடுக்கப்படவில்லை. ஆனால், வீரமணியின் கார் சேதப்படுத்தப்பட்டவுடன், காவல்துறை சுறுசுறுப்பாக செயல்பட்டு, கழகத் தோழர்கள் 4 பேர்மீது வழக்குப் போட்டு, ‘ரிமாண்ட்’ செய்து விட்டது. கழகத் தோழர்கள் திருவல்லிக்கேணி தமிழ்ச்செல்வன், இராயப்பேட்டை தோழர்கள் கணேஷ், ஜெயக்குமார், மயிலைத் தோழர் சசிகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டு, புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். திருவாரூர் தங்கராசு காரை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை என்ற கேள்வி எழும் என்பதால், ஏற்கனவே பல வழக்குகளில் தேடப்பட்டு வந்த சீராளன் என்பவர் மீது திருவாரூர் தங்கராசு காரை உடைத்ததாக ஒரு வழக்கைப் போட்டு உண்மை குற்றவாளிகளை தப்பிக்க விட்டுள்ளது காவல் துறை! வீரமணி வீட்டில் கார் சேதப்படுத்தப்பட்ட அன்றுதான், அவசர அவசரமாக சீராளன் கைதும் நடந்துள்ளது.

## ‘தொண்டருக்கும் தொண்டன்’ வீரமணி பயன்படுத்தும் காரின் விலை ரூ.27 லட்சம்

**தகவல்: வீரமணியின் மேனேஜர் சீதாராமன் என்பவர் கூறியதாக ‘தினத்தந்தி’ நாளேடு (8.7.2010) செய்தி.**

# தீண்டாமை வழக்கு: காவல்துறை அலட்சியத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரம் ஒன்றியத்திலுள்ள கொ. கீரனூர் கிராமத்தில் கடந்த 20.5.2010 அன்று அருந்ததியர் மக்கள் வாழும் பகுதியில் தெரு விளக்கு வசதி செய்துத் தரக் கோரிய இராமலிங்கம் என்ற அருந்ததியரை கொ.கீரனூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஆதிக்கச் சாதியைச் சார்ந்த நாட்டுத்துரை (தி.மு.க.) என்பவர் இராமலிங்கத்தினைத் தாக்கி சாதியைச் சொல்லி இழிவாகத் திட்டி கண்மூடித்தனமாக அடித்தார். அதன் பிறகு ஊராட்சி மன்றத் தலைவரின் மகன் தலைமையில் 10 பேர் கொண்ட கும்பல் வீடு புகுந்து இராமலிங்கத்தைச் சாதியைச் சொல்லி இழிவாகத் திட்டி அவரையும் அவருடைய மகளையும் 8 மாதக் குழந்தையையும் தாக்கியுள்ளனர். அவர் உயிருக்கு பயந்து வெளியூரில் தங்கியுள்ளார்.

இந்தச் சூழலில் அவரைத் தாக்கிய சாதி வெறிக் கும்பல் மீது கள்ளி மந்தயம் காவல் நிலையத்தில் இதச 147, 327 பிரிவுகளிலும் வன் கொடுமைத் தடுப்புச் சட்டத்திலும் வழக்குப் பதிவு செய்து, ஒரு மாத காலமாகியும், நடவடிக்கை எடுக்காத காவல் துறையைக் கண்டித்து 14.6.2010 அன்று மாலை 5 மணிக்கு ஒட்டன் சத்திரம் பேருந்து நிலையம் அருகில் தீண்டாமை ஒழிப்பு முன்னணியும், பெரியார் திராவிடர் கழகமும் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது. அதில் சி.பி.எம். கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் க.பால பாரதி, எம்.எல்.ஏ., சி.பி.எம். மாவட்ட செயலாளர் பாண்டி, வட்டக் குழுச் செயலாளர் வழக்கறிஞர் சின்னக்கருப்பன், கழக மாவட்டத் தலைவர் துரை சம்பத் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக மாவட்ட செயலாளர் இரவனா, திருப்பூர் இராவணன், செம்பட்டி ஆல்பர்ட், ஒட்டன்சத்திரம் அய்யப்பன், பெரியார் நம்பி உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனமும் - ஹாங்கில் இயங்கி வரும் அதன் கிளை நிறுவனமும் தலைமறைவாகிவிட்டதாக அறிவிக்கப்பட்டு, அதன் தலைமை அதிகாரிகள் வழக்கிலிருந்து பிரிக்கப்பட்டனர். (ஹாங்காங்கில் செயல்படும் யூனியன் கார்பைடு துணை நிறுவனத்தின் பெயர் ‘யூனியன் கார்பைடு ஈஸ்ட்டர்ன் கம்பெனி’ என்பதாகும். (போபால் ஆலை இந்நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் தான் செயல்பட்டது.) இந்த மூன்று நிறுவன அதிகாரிகளும் எந்த ஒரு வழக்கு விசாரணைக்கும் வரவில்லை. யூனியன் கார்பைடு நிறுவனத்தின் இந்திய கிளை அதிகாரிகள் 8 பேர் மீது வழக்கு நடந்தது. அவர்களில் பெரும்பான்மை அதி காரிகள் பார்ப்பனர்கள். ஓரிருவர் உயர்சாதியினர். (பெயர் விவரம்: கேசப் மகிந்திரா, கிஷோர் கம்தார், ஜெ.முகுந்த், டாக்டர் ஆர்பி.சவுத்ரி, எஸ்பி.சவுத்ரி, கே.வி.ஷெட்டி, எஸ்,அய். குரேஷி)

- நீதிபதி தீர்ப்பில் கடுமையான குறைகளை சுட்டிக் காட்டி 2 ஆண்டு சிறையும், 5 லட்சம் அபராதமும் விதித்தார். குற்றம்சாட்டப்பட்டவர்களில் இருவரைத் தவிர (ஒருவர் போபால் ஆலையின் மேற்பார்வையாளரான ஷெட்டி; மற்றொருவர் ஆபரேட்டர் வேலை செய்த குரேஷி) குற்றம்சாட்டப்பட்டவர்கள் எவரும் வழக்கு விசாரணைக்கு வர வேண்டிய அவசியமில்லை என்று, மத்திய பிரதேச உயர்நீதிமன்றம் விதிவிலக்கு அளித்து விட்டது.
- போபால் நகர நீதிமன்ற நீதிபதி மோகன் திவாரி வழங்கிய தீர்ப்பில் குற்றம்சாட்டப்பட்டவர் களுக்கு பேராபத்து நிகழக்கூடிய வாய்ப்புகள் நன்றாகவே தெரியும் என்று கூறி, அதற்கான சான்றுகளையும் விளக்கியிருந்தார்.
- இந்த வழக்கை குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக அரசு சார்பில் மத்திய புலனாய்வு நிறுவனம் (சிபிஐ) நடத்தியது. 178 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைக் கேட்ட நீதிபதி, ஒரு கருத்தை உறுதியாக சுட்டிக்காட்டியிருந்தார். யூனியன் கார்பைடு நிறுவனம், அமெரிக்காவிலோ அல்லது உலகம் முழுதும் நடத்தி வந்த நிறு வனங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் போலவோ போபால் நிறுவனத்தையும் நடத்தியது என்ற கருத்தை ஏற்கவே முடியாது என்று நீதிபதி கூறினார்.
- அரசு தரப்பு சாட்சியங்களில் ஒருவரான விஞ்ஞானி வரதராஜன், பாதுகாப்பில் இருந்த பல குறைகளை சுட்டிக் காட்டினார். அவர் சுட்டிக் காட்டிய சில முக்கிய கருத்துகள்:

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] ... இதை யூனியன் கார்பைடு நிறுவனமே ஒப்புக் கொண்டிருக்கிறது. கசிவைத் தடுக்கக் கூடிய தொழில் நுட்பங்கள் எதையும் பயன்படுத்தவில்லை. [illegible] ... தொடங்கிய போதுதான், நம் சமுத்துவ பண்பாட்டை இழந்தோம். சாதி [illegible]

- [illegible] ... முக்கிய கருத்தையும் சுட்டிக்காட்டியது. மிக மிக மோசமான குறைபாடு [illegible] ... அனுமதி தரப் பட்டதை நீதிபதி தீர்ப்பில் சுட்டிக் காட்டினார்.

– செய்தி: அ.கோகுலகண்ணன்

- ஆபத்தை விளைவிக்கக் கூடிய எம்.அய்.சி.யை (மெத்தில் அய்சோசைனேட்) 15 டிகிரிக்குக் கீழான குளிர் நிலையிலேயே வைத்திருக்க வேண்டும். சைபர் டிகிரி குளிர் நிலையில் வைப்பதுதான் மேலும் பாது[illegible] குளிர்நிலை ஏற்பாடுகள் ஏதுமின்றி வெளியிலுள்ள வெப்ப நிலையிலேயே - அக்டோபர் மாதத்திலிருந்து சுமார் 3 மாதங்கள் இந்த ஆபத்தான வாயுவை சேமித்து வைத் துள்ளார்கள். 610-வது எண் கொண்ட தொட்டியில் இந்த அலட்சியத்தின் காரணமாக 500 லிட்டர் அளவு தண்ணீர் தொட்டிக்குள்

## பதட்டம் வேண்டாம்: சாலை மறியல் வேண்டாம்

### கார் கண்ணாடி உடைப்பு பற்றி கி. வீரமணியின் அறிக்கை

கி. வீரமணி வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த அவரது ரூ.27 லட்சம் விலை மதிப்புள்ள காரின் கண்ணாடிகள் சேதப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கி.வீரமணி, ‘விடுதலை’யில் வெளியிட்ட அறிக்கையை அதன் சிறப்பான **‘சுவை’** கருதி வெளியிடுகிறோம்.

“கழகத் தோழர்கள் பதற்றம் அடைய வேண்டாம். சட்டம் அதன் கடமையைச் செய்யும் என்ற முழு நம்பிக்கை நமக்கு உண்டு. ஆர்ப்பாட்டம், சாலை மறியல் என்பது போன்ற எந்த நடவடிக்கையிலும் ஆத்திரப்பட்டு இறங்கி விடக்கூடாது.

பொது வாழ்க்கையில் இப்படிப்பட்ட துரோகங்களைச் சந்தித்துப் பழக்கப்பட்டவர்கள் நாம். அச்சுறுத்தல்கள் நம்மை ஒன்றும் செய்யாது. சாகத் துணிந்த நமக்கு சமுத்திரம் முழங்கால்கூட அல்ல. கணுக்கால் அளவே.

எனவே அமைதி காக்க வேண்டும் என்று அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். கலைஞர் அரசை காக்க வேண்டியதே நம்முடைய முதற்கடமை என்பதை மறவாதீர்!”

## அடுத்த இதழில்

தமிழக கிராமங்களில் தேனீர் கடைகள், கோயில்களில் நிலவும் தீண்டாமை வன் கொடுமைகள் - பற்றிய முழு விவரங்களடங்கிய பட்டியல் -

சென்னை மாவட்டக் கழகத் தோழர்களின் பரப்புரைப் பயணச் செய்திகள்....

## நன்கொடை


சென்னை சேத்துப்பட்டு கழகத் தோழர் இராசேந்திரன் மகள் பொறியாளர் மோ.லட்சுமி - பொறியாளர் க. சரவணன் வாழ்க்கை துணை விழா, துறவிக்காட்டில் (பட்டுக்கோட்டை வட்டம்) நிகழ்ந்தபோது கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் கழக ஏட்டுக்கு ரூ.1000/- நன்கொடை வழங்கப்பட்டது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்.)

“புரட்சிப் பெரியார் முழக்கம்” ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 8th July 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN., PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 ஜூலை 15, 2010 புரட்சி 9 முழக்கம் 27 விலை: ரூ.2.50


## தீண்டாமை ஒழிப்புப் பிரிவின் உறக்கம் கலையுமா?

## இரட்டை டம்ளர், இரட்டை சுடுகாடு பட்டியல், இதோ!

ஒட்டன் சத்திரம், மேட்டூர், கோவை, திருப்பூர் பகுதிகளில் தீண்டாமையைப் பின்பற்றும் தேனீர்க் கடைகள், கோயில்கள், சுடுகாடுகளின் பெயர்களை இங்கு வெளியிடு கிறோம். காவல்துறையின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவு உறக்கம் கலைந்து, நடவடிக்கை எடுக்குமா?

**கோவை திருப்பூர் மாவட்டம்**

1. சதீ தேனீர்கடை
மல்லேகவுண்டம்பாளையம்
பல்லடம் வட்டம்
திருப்பூர் மாவட்டம்.

2. செட்டியார் தேனீர்கடை
சின்னப்புத்தூர்
சுல்தான்பேட்டை ஒன்றியம்
சூலூர் வட்டம்
கோவை மாவட்டம்.

3. 3 கடைகள்
j.கிருஷ்ணாபுரம்
சுல்தான்பேட்டை ஒன்றியம்
சூலூர் வட்டம்
கோவை மாவட்டம்.

4. கவுண்டர் தேனீர்கடை &
உணவகம்
சின்னப்புத்தூர்
சுல்தான்பேட்டை ஒன்றியம்
சூலூர் வட்டம்
கோவை மாவட்டம்.

5. கவுண்டர் தேனீர்கடை
சாலைப்புதூர்
குடிமங்கலம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்.

6. 2 தேனீர்கடைகள்
மூங்கில்தொழுவு பிரிவு
மடத்துக்குளம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்.

7. ஊர் தேனீர்கடை
செஞ்சேரிப்புத்தூர்
சுல்தான்பேட்டை ஒன்றியம்
சூலூர் வட்டம்
கோவை மாவட்டம்.

8. பாலு உணவகம்
கரடி வாவி
பல்லடம் வட்டம்
திருப்பூர் மாவட்டம்.

9. ஊர் தேனீர்கடை
குள்ளம்பாளையம்
பல்லடம் வட்டம்
திருப்பூர் மாவட்டம்.

10. பழனிச்சாமி தேனீர்கடை
வெங்கிட்டாபுரம்
பல்லடம் வட்டம்
திருப்பூர் மாவட்டம்.

11. 3 தேனீர்கடைகள்
மாதப்பூர்
பொங்கலூர் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்.

12. அய்யிறு தேனீர்கடை
தாயம்பாளையம்
பொங்கலூர் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்.

13. பள்ளிக்கூட பக்க தேனீர்கடை
சேமலைகவுண்டம்பாளையம்
பொங்கலூர் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

14. 3 தேனீர்கடைகள்
வலுப்புரம்மன்கோவில்
பொங்கலூர் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

15. தேனீர்கடை
கண்டியன்கோவில்
பொங்கலூர் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்.

16. நாகராஜ் தேனீர்கடை
பள்ளிக்கூடம் அருகில்
நல்லூர்பாளையம்
சுல்தான்பேட்டை ஒன்றியம்
கோவை மாவட்டம்

17. ஊர் தேனீர்கடை
வல்லகுண்டாபுரம்
உடுமலை ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்.

18. மெடிக்கல் அருகே உள்ள
தேனீர்கடை
வா.அய்யம்பாளையம்
பல்லடம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

19. ஊர் தேனீர்கடை
நாகம்மாபுதூர்
அன்னூர் ஒன்றியம்
கோவை மாவட்டம்

20. தேனீர்கடைகள்
தொங்குட்டிபாளையம்
பொங்கலூர் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

21. அம்மன் டீ காபி நிலையம்
நால்ரோடு
பொல்லிகாளிபாளையம்
பொங்கலூர் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

22. ஸ்ரீசக்தி தேனீர்கடை,
டிபன் சென்ட்டர்
கணபதி பாளையம்
பல்லடம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

23. ஜேபிஆர். தேனீர்கடை
மாதே வரா நகர்
கணபதி பாளையம்
பல்லடம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

24. வெள்ளிங்கிரி தேனீர்கடை
காளிவேலம்பட்டி
பல்லடம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

25. ப டாப் தேனீர்கடை
கரடிவாவிபுதூர்
பல்லடம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

26. வஞ்சியம்மன் உணவகம்
செம்மிபாளையம்
பல்லடம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

27. கோவில் தேனீர்கடை,
உணவகம்
செம்மிபாளையம்
பல்லடம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

28. ப டாப் தேனீர்கடை
காடாம்பட்டி
சூலூர் வட்டம்
கோவை மாவட்டம்

29. தேனீர்கடைகள்
செங்கத்துறை
சூலூர் வட்டம்
கோவை மாவட்டம்

30. ஊர் தேனீர்கடை
அப்பநாயக்கன்பட்டிபுதூர்
சூலூர் வட்டம்
கோவை மாவட்டம்

31. ப டாப் தேனீர்கடை
சித்தநாயக்கன்பாளையம்
சுல்தான்பேட்டை ஒன்றியம்
கோவை மாவட்டம்

32. ஊர் தேனீர்கடை, உணவுவிடுதி
நல்லகட்டிபாளையம்
புதுவம்பள்ளி பஞ்சாயத்து
சூலூர் வட்டம்
கோவை மாவட்டம்

33. ஊர் தேனீர்கடை
நல்லூர்பாளையம்
பல்லடம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

34. ஊர் தேனீர்கடை
மலையப்பாளையம்
பல்லடம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

35. ஊர் தேனீர்கடை
கேத்தனூர்
பொங்கலூர் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

36. மாணிக்கராஜ் தேனீர்கடை
இச்சிபட்டி
பல்லடம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

37. கலைவாணி தேனீர்கடை
இச்சிபட்டி, பல்லடம்
ஒன்றியம், திருப்பூர் மாவட்டம்

38. ப டாப் தேனீர்கடை
பெத்தாம்பூச்சிபாளையம்
பல்லடம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

39. ஊர் தேனீர்கடை
அனுப்பட்டி
பல்லடம் ஒன்றியம்
திருப்பூர் மாவட்டம்

40. கவுண்டர் தேனீர்கடை
கல்லம்பாளையம்
பல்லடம் நகராட்சி
திருப்பூர் மாவட்டம்

**மேட்டூர் நகரம் (சேலம் மாவட்டம்)**

பொன்னுசாமி தேனீர்கடை
பெரும்பள்ளம்.

கீதா தேனீர்கடை
அம்மாபேட்டை.

மோகன் தேனீர்கடை
அம்மாபேட்டை

அம்மன் பேக்கர்ஸ்
அஞ்சலக பேருந்து நிறுத்தம்
அம்மாபேட்டை.

மோகன் தேனீர் நிலையம்
சிங்கம்பேட்டை கேட்.

பிரகாசு டிபன் சென்டர்
சிங்கம்பேட்டை பள்ளி அருகில்.

தம்பிபேக்கரி
கோனேரிப்பட்டி.

தம்பி பேக்கரி
பூவாம்பட்டி ரேசன் கடை அருகில்.

தம்பி பேக்கரி
பூவாம்பட்டி காவல்நிலையம் அருகில்.

தேனீர்கடை
நால்ரோடு பேருந்து நிறுத்தம்
அருகில்.

தேனீர் கடை
யூனியன் ஆபீஸ் எதிர்புறம்
அம்மாபேட்டை.

**ஒட்டன்சத்திரம் ஒன்றியம்**

லெக்கையன் கோட்டை - தலித்துகள் தெருக்களில் நடக்க அனுமதி இல்லை

அரங்கநாதபுரம் - இரட்டை சுடுகாடு

புது அந்திக்கோம்பை சவடமுத்து தேனீர்கடை, கருணாகரன் தேனீர்கடை - இரட்டைக் குவளை, இருக்கையில் அமர அனுமதி மறுப்பு, ஒரு குறிப்பிட்ட தெருவில் செருப்புஅணிந்து நடக்க அனுமதி மறுப்பு, இங்குள்ள காளியம்மன் கோவிலில் தலித்துகள் வழிபட அனுமதி மறுப்பு, இரட்டைச் சுடுகாடுகள்.

சாலைப்புதூர் - இங்குள்ள காளியம்மன் கோவில்களில் நுழைய அனுமதி மறுப்பு

கே. அந்திக்கோம்பை - இங்குள்ள காளியம்மன் கோவில்களில் உள் நுழைவு இல்லை. இரட்டை சுடுகாடு.

காளாஞ்சிபட்டி - தலித்துகள் ஒரு பகுதியில் செருப்பு அணிந்து நடக்க அனுமதி இல்லை. ஒரு பகுதியில் தெருவில் நுழைய அனுமதி இல்லை.

வெரியப்பூர் (மாநில காவல் இணை இயக்குநர் ரவி ஐபிஎஸ். சொந்த ஊர்) - இங்குள்ள கலையரங்கத்தில் தலித்துகள் அமர அனுமதி இல்லை பிள்ளையார், காளியம்மன்

(4 ஆம் பக்கம்)

# ஆண்டர்சனை தப்பச் செய்தவர் ராஜிவ்காந்தி

- இரண்டாம் உலகப்போரில் ஹிரோஷிமாவில் குண்டுவீசப்பட்டதுபோல் போபால் நகரம் காட்சியளித்தபோது, செத்து பிணங்களாக வீழ்ந்துக் கொண்டிருந்த மக்களைக் காப்பாற்று வதற்கு, நச்சுவை முறியடிக்கக்கூடிய சிகிச்சை அவசரமாக அளிக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்காக மருத்துவர்கள் போபாலில் வெளி யேறிய நச்சு வாயுவில் அடங்கியுள்ள பொருள்கள் என்ன என்பதை போபால் நிறுவனத்திடம் கேட்டபோது, அதை வெளிப்படுத்த நிர்வாகம் மறுத்துவிட்டது. அதன் அமெரிக்க தலைமை யகம், இந்த வாயுவில் (எம்.அய்.சி.) அடங்கியுள்ள மூலப் பொருள் களையும், ஆபத்து நேர்ந்தால் முறியடிப் பதற்கான மாற்று வேதிப் பொருள் என்ன என்பதையும் ரகசியமாகவே வைத் திருந்தது.
- சம்பவம் நடந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு நச்சு வாயுவில் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை தந்த 'இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழு', இந்த நச்சை முறியடிக்கக் கூடிய மருந்து 'சோடியம் தையோ சல்பேட்' என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. இந்த முறிப்பு மருந்தை, அப்போதே பாதிக்கப் பட்டோருக்கு தந்திருந்தால் ஏராளமான உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும் என்றும் அந்த அறிக்கை கூறியது.
- இந்திய மருத்துவத் துறையிடம் இந்த முக்கியமான உண்மையை கார்பைடு நிர்வாகம் திட்டமிட்டு மறைத்தது மிகப் பெரும் கிரிமினல் குற்றம். ஆனால், கார்பைடு நிறுவனத்துக்கு எதிராக வழக்கை நடத்திய சி.பி.அய். புலனாய்வு நிறுவனம், இந்த முக்கியமான குற்றச்சாட்டை நீதிமன்றத்தில் வலியுறுத்தவே இல்லை.
- குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் நீதிமன்றத் தில் முன் வைக்கப்பட்ட வாதம் தான் விசித்திர மானது. வெளியேறிய வாயு மிகவும் நச்சுத் தன்மை கொண்டவை என்பதும் உயிருக்கு ஆபத்தானது என்பதும் உண்மைதான். ஆனால், இப்போது நடந்த விபத்துக்கு, நாங்கள் எப்படி பொறுப்பாக முடியும்? இது கடவுளின் செயல். எந்த மனிதரை யும் கடவுளின் செயலுக்கு பொறுப்பாக்க முடியாது (It was an act of god for which no human being was responsible) என்று நீதிமன்றத் தில் கடவுளை துணைக் கழைத்தார்கள், குற்றம் சாட்டப்பட்டவர்கள்.
- 1985 ஆம் ஆண்டு நாடாளுமன்றம் போபால் நச்சு வாயு பேரழிவுச் சட்டம் என்ற சட்டம் ஒன்றை இயற்றியது. இச் சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட் டவர்கள் தங்களுக்கு இழப்பீடு கோரி நேரடியாக நீதிமன்றம் போவதை அரசு தடுத்து நிறுத்தி, பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக, இழப்பீடு கோரும் உரிமையை அரசு எடுத்துக் கொண்டது.
- முதலில் ரூ.3900 கோடி இழப்பீடாகத் தர வேண்டும் என்று இந்திய அரசு அமெரிக்கா விலுள்ள யூனியன் கார்பைடு நிறுவனத்தின்மீது வழக்கு தொடர்ந்தது. வழக்கு அமெரிக்காவில் நடத்தப்பட்டிருந்தால், இழப்பீட்டுத் தொகை அதிகமாக தரவேண்டி இருக்கும் என்பதால், வழக்கு சூழ்ச்சியாக இந்தியாவுக்கே போபால் மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. வழக்கு நடந்து கொண்டிருக்கும்போதே இந்தியப் பார்ப்பன ஆட்சி, யூனியனடன் கார்பைடு நிறுவனத் துடன் ரகசியமாக பேச்சு நடத்தி வந்தது.
- போபால் மாவட்ட நீதிபதி இடைக்கால நிவாரணமாக, ரூ.350 கோடி தருவதற்கு உத்தர விட்டார். யூனியன் கார்பைடு நிறுவனம் இந்தத் தொகையை ஏற்க மறுத்து, ம.பி. உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தபோது, உச்சநீதிமன்றமோ, நீதிமன்றத்துக்கு வெளியே இரு தரப்பினரும் பேசித் தீர்த்துக் கொள்ளு மாறு உத்தரவிட்டு, எல்லா மனுக்களையும் தள்ளுபடி செய்துவிட்டது. அமெரிக்காவி லிருந்து வரும் அன்னிய முதலீடுகள் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காக, சொந்த நாட்டு குடி மக்களின் 'பிணங்களை' பணயமாக வைத்தது, இந்திய அரசு.
- 330 கோடி டாலருக்கு பதிலாக ரூ.173 கோடி இழப்பீட்டுத் தொகைக்கு இந்திய அரசு ஒப்புக் கொண்டது. இதைவிடக் கொடுமை பாதிக்கப்பட்ட மக்களிடம் இது பற்றி எந்தக் கருத்தையும் இந்திய அரசு கேட்கவில்லை என்பதுதான்!
- பாதிக்கப்பட்டவர்கள் - இறந்தவர்கள் -இழப் பீட்டுத் தொகையைப் பெறுவதற்கு கடுமையான சான்றுகளைக் கேட்டது, இந்திய அரசு. இறந்து போனவர் என்பதை நிரூபிப்பதற்கு இறுதி ஊர்வலத்தில் போனவர்கள் சான்று தர வேண்டும் என்றார்கள். நியாயமான பல விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பட்டன. யூனியன் கார்பைடு நிறுவனத்தின் செலவை குறைக்க அரசு அவ்வளவு கவலை எடுத்துக் கொண்டது. இறந்தவர், பாதிக்கப்பட்டவர் பற்றி துல்லியமான கணக்கெடுப்பு நடத்துவதில், மத்திய பிரதேச அரசோ, இந்திய அரசோ, எந்த அக்கறையும் காட்டவில்லை. இறந்தவர்கள் 3000 பேர் என்றும், இறந்தவர்கள் உட்பட பாதிக்கப்பட்டவர்கள் ஒரு லட்சத்து 5 ஆயிரம் பேர் என்றும், அவர்களே கணக்கிட்டுக் கொண் டார்கள். இழப்பீடு கோரி விண்ணப்பித்த 10 லட்சம் பேரில் 5,74,367 பேர் மட்டுமே பாதிக்கப்பட்டதாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. உண்மையாக பாதிப்புக்குள்ளான வர்களாக 5,74,367 பேர் என்று இந்திய அரசு ஏற்றுக் கொண்டாலும், 1 லட்சத்து 5 ஆயிரத்து 500 பேர் மட்டுமே பாதிப்புக்குரியவர்கள் என்ற அடிப்படையில், கார்பைடு நிறுவனம் வழங்க முன்வந்த ரூ.173 கோடியை மட்டும், இந்தியா பெற்றுக் கொண்டது.

**22,000**
**சொந்த நாட்டு மக்களின் மரணத்தை புறந்தள்ளி, அமெரிக்க முதலாளியை காப்பாற்றத் துடித்த ராஜீவ்காந்தி, தேச பக்தரா?**
**(2)**

- இதனால் சராசரியாக பாதிக்கப்பட்ட ஒருவருக்குக் கிடைத்தது ரூ.1500க்கும் குறைவு! பாதிக்கப்பட்ட மக்கள் மருத்துவ செலவுக்குக் கூட பணமின்றி மரண மடைந்தனர். நச்சு வாயு வின் தாக்கம் மறையாமல், மக்களைத் தொடர்ந்து பாதிப்புக் குள்ளாக்கியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான அமைப்புகள் நீதி கேட்டு, இடை விடாமல் போராடின. 1989 ஆம் ஆண்டு உச்சநீதி மன்றத் தீர்ப்பின்படி உருவான உடன்பாட்டை எதிர்த்து, பாதிக்கப்பட்டோருக்கான அமைப்புகள் மீண்டும் உச்சநீதி மன்றத்தின் கதவைத் தட்டின. உச்சநீதிமன்றத்தின் உத்தரவின்படி மீண்டும் போபால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில்தான் கடந்த 7.6.2010 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.
- இந்தியாவின் நீதித்துறை, மத்திய புலனாய்வு நிறுவனம், இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தில் இருந்த ராஜீவ் தலைமையிலான காங்கிரஸ் அதிகார சக்திகள் அத்தனையுமே அமெரிக்கக் குற்றவாளியைத் தபிக்க வைப்பதில் ஆர்வம் காட்டி செயல்பட்டதற்கான ஏராளமான அதிர்ச்சியூட்டும் சான்றுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.
- 1989 இல் நீதித் துறையும் இந்திய அரசும் இணைந்து அமெரிக்க நிறுவனத்துக்கு எதிரான அத்தனை வழக்குகளையும் கைவிட்டு, குற்றவாளிகள் தப்பிக்கச் செய்த பிறகும் மக்கள் எழுச்சியால் மீண்டும் 1991 இல் வழக்கு, தோண்டி எடுக்கப்படும் நிலை வந்தது. ஆனாலும் என்ன பயன்? 1991 இல் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான கடுமையான குற்றப் பிரிவுகள் மாற்றப்பட்டன. தண்டனைச் சட்டப் பிரிவு 304-II என்பதிலிருந்து 304-ஏ பிரிவுக்கு மாற்றி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை கிடைக்காமல் பாதுகாப்பை ஏற்படுத்தித் தந்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஏ.எம்.அகமத், எஸ்.பி. மஜீம்தார் ஆகியோர் ஆவர். அப்போது மத்திய புலனாய்வுத் துறையும், இந்த துரோகத்துக்கு உடந்தையாக செயல்பட்டதை ஏற்கனவே சுட்டிக் காட்டி யிருந்தோம். இந்த உத்தரவை எதிர்த்து மறு ஆய்வுசெய்யக் கோரும் மனுவை தாக்கல் செய்யாதது மட்டுமல்ல; மற்றொரு துரோகத்தை யும் சி.பி.அய். செய்தது. சி.பி.அய். தாக்கல் செய்த குற்றப் பத்திரிகையை மட்டுமே உச்சநீதி மன்றத்தின் பார்வைக்கு வைத்ததேதவிர, தற்போது போபால் விசாரணை நீதிமன்றத்தில் முன் வைக்கப்பட்ட விரிவான சாட்சி ஆதாரங்களை உச்சநீதிமன்றத்தில் சி.பி.அய். தாக்கல் செய்யவில்லை. இப்போது வெளிவந்துள்ள நீதிமன்றத் தீர்ப்பு குறித்து பரிசீலிக்க - ம.பி. மாநில அரசு நியமித்துள்ள நான்கு உறுப்பினர்கள் அடங்கிய குழுவின் தலைவர் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் விவேக் டென்ககா இந்த அதிர்ச்சியான தகவலைத் தெரிவித்துள்ளார்.
- அமெரிக்க நிறுவனத்தைக் காப்பாற்ற மற்றொரு பேருதவியையும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அகமதியா எஸ்.பி.மஜிம்தார் அடங்கிய அமர்வும் செய்தது. அமெரிக்காவில் உள்ள யூனியன் கார்பைடு நிறுவனம், இந்தியாவிலுள்ள அதன் கிளையான யூனியன் கார்பைடு இந்தியா நிறுவனத்தில் நேரடியாக முதலீடு செய்திருந்த 51 சதவீத பங்குகளை பறிமுதல் செய்ய போபால் நீதிபதி உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்புகள் தாக்கல் செய்த மனு மீது நீதி மன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது. உடனடியாக யூனியன் கார்பைடு நிறுவனம் ஒரு அறக்கட்டளையைத் தொடங்கி, அந்த அறக் கட்டளைக்கு பங்குகளை மாற்றித் தருமாறு மனு போட்டது. உச்சநீதிமன்ற நீதிமன்ற நீதிபதிகள் ஏ.எம்.அகமதி, எஸ்.எம். மஜீம்தார் அமர்வு, இதற்கு ஒப்புதல் அளித்து விட்டது. (1994, பிப்.14). வழக்குதொடர்ந்த பாதுகாக்கப் பட்ட மக்களுக்கான அமைப்பின் கருத்து களைக் கேட்கவும் உச்சநீதிமன்றம் மறுத்து விட்டது.
- இப்படி - அமெரிக்க நிறுவனத்துக்காக நீதித் துறையை வளைத்து அதற்காக பதவி ஓய்வுக்குப் பிறகு அந்நிறுவனத்தில் பல கோடி மதிப்புள்ள அறக்கட்டளைக்கான தலைவர் பதவியையும் ஏற்றுக் கொண்ட நீதிபதி ஏ.எம். அகமதி இப்போது உச்சநீதிமன்றமே அப்பதவியை ஏற்குமாறு தன்னைப் பணித்ததாகக் குறிப்பிடு கிறார்.
- பாதிக்கப்பட்டோருக்காக அமைக்கப்பட்ட மறுவாழ்வு மீட்பு மய்யத்தின் வேண்டுகோளை ஏற்று, "டாட்டா சமூகவியல் ஆய்வு நிறுவனம்", சம்பவம் நடந்த இரு வாரங்களில் 25,259 பாதிக்கப்பட்டோர் இல்லங்களுக்குச் சென்று பாதிப்புகளை நேரடியாக பதிவு செய்தது. பாதிப்புகள் குறித்த ஒரே நேரடியான பதிவு இது மட்டும்தான். கடுமையான பாதிப்புகளை வெளிக்கொண்டு வந்த இந்தக் கள ஆய்வுக்கான விவரங்களை ஒரு லாரி நிறைய ஏற்றி, மாநில அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அத்தனையும் திட்டமிட்டு, அழிக்கப்பட்டன. இந்த ஆவணங் களின் கதி என்னவாயிற்று என்றே தெரியவில்லை.
- 1997 இல் யூனியன் கார்பைடு நிறுவனத்தை அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவனமான 'டொவ் கெமிக்கல்ஸ்' (Dow Chemicals) விலைக்கு வாங்கியது. போபால் ஆலையில் உள்ள நச்சுக் கழிவுகளை அகற்றாமல் அப்படியே விட்டுவிட்டுப் போனது யூனியன் கார்பைடு; விலைக்கு வாங்கிய புதிய நிறுவனம், அதை சரி செய்ய வேண்டும் என்று பாதிக்கப்பட்டோர் நல அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன. அதற்காக ரூ.100 கோடியை 'டவ் கெமிக்கல்' அரசிடம் வைப்பு நிதியாக வழங்க

(3 ஆம் பக்கம்)

# காங்கிரசாரின் 'தேசபக்தி' இதுதானா?

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று உச்சநீதிமன்றமும் கோரியது. ஆனால் 'டவ் கெமிக்கல்' நிறு வனத்துக்காக வாதாட காங்கிரசுக்குள்ளேயே புதிய 'தேச பக்தர்கள்' புறப்பட்டார்கள்.

- மன்மோகன் அமைச்சரவையில் 2006-07 இல் வர்த்தக அமைச்சராக இருந்த கமல்நாத் அந்த நிறுவனத்தின் மீது எந்தக் கடுமையான கட்டுப்பாடுகளையும் திணிக்கக் கூடாது என்றார். இப்போது காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ பேச்சாளராக உள்ள அபிஷேக்சிங் கிங்வி - டவ் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் சட்ட ஆலோசகராக இருந்து கொழுத்த ஊதியம் பெற்றவர். நச்சு வாயுவால் ஏற்பட்ட பாதிப்புக்கு இந்நிறு வனத்தைப் பொறுப்பாக்கக் கூடாது என்று மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதினார். டாட்டா போன்ற தொழிலதிபர்கள், டவ் நிறுவனத்திடம் ரூ.100 கோடி வைப்புத் தொகையாகக் கேட்பதை கைவிட வேண்டும் என்றும், இப்படிக் கேட்டால், அன்னிய முதலீடு குறைந்துவிடும் என்றும், நச்சத் தன்மைகளை அகற்ற தனியே ஒரு நிதியம் அமைக்கலாம் என்றும் யோசனை தெரிவித்ததை, அப்போதைய நிதியமைச்சர் ப. சிதம்பரம் ஏற்றுக் கொண்டு, அதையே தமது அலுவலகக் கோப்பிலும் குறிப்பு எழுதி வைத்தார். மாண்டேக் அலுவாலியா அமைச்சரவை செயலாளர் பி.கே. சதுர்வேதி, அமெரிக் காவுக்கான இந்திய தூதர் ரோனன்சென், பிரதமரின் முதன்மை செயலாளர் டி.கே.நாயர், இப்படி அதிகார செல்வாக்கு மிக்க ஒரு பெரும் குழு, 'டவ்' நிறுவனம் ரூ.100 கோடி செலுத்த வேண்டாம் என்று அரசிடம் வற்புறுத்தி வெற்றி பெற்றது. பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றி இவர்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. படுகொலைக்குக் காரணமான 'யூனியன் கார்பைடு' 'டவ் கெமிக்கல்' என்று பெயர் மாற்றம் செய்து கொண்டுவந்த போது, அதற்கு பட்டுக் கம்பளம் விரித்த மக்கள் துரோகிகளாகவே இவர்கள் செயல் பட்டனர். இதே ப.சிதம்பரம்தான் இப் போதும் மன்மோகன் நியமித்த குழுவில் இடம் பெற்று போபால் மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகள் வழங்குவது பற்றி அறிக்கை தந்திருக்கிறார்.

- யூனியன் கார்பைடு நிறுவனத்தை வாங்கிய டவ் கெமிக்கல் நிறுவனம், மீண்டும் இந்தியாவில் ஆபத்தை விளைவிக்கக் கூடிய 'தர்ஸ்பான்' என்ற பூச்சிக் கொல்லி மருந்தை தயாரித்தது. இதற்காக இந்தியா வில் உள்ள அதிகாரிகளுக்கு அந் நிறுவனம் ரூ.80 லட்சம் லஞ்சம் கொடுத்தற்காக இந்நிறுவனத்தின் மீது நீதிமன்றத்தில் இரு வழக்குகள் பதிவாயின. இப்படி லஞ்சம் கொடுத்த குற்றத்திற்காக அமெரிக்காவின் சட்டப்படி அந்த நிறுவனம், அந்நாட்டுக்கு அபராதம் செலுத்த வேண்டி யிருந்தது. இதுபற்றி சி.பி.அய். விசாரணைக்கு ஏற்பாடு செய்வதாக மார்க்சிஸ்ட் உறுப்பினர் பிருந்தாகாரத் எழுப்பிய கேள்விக்கு மத்திய அரசு சார்பில் மாநிலங்களவையில் பதிலளிக்கப் பட்டது. ஆனால், இதுவரை எந்த நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை.

- யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைவரான வாரன் ஆண்டர்சன், விபத்து நடந்த அடுத்த சில நாட்களில் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 7 ஆம் தேதி இந்தியா வந்தார். அவர் பத்திரமாக வந்து திரும்புவதற்கான உறுதியை இந்திய அரசு வழங்கியது. அப்போது பிரதமராகவும் அயல் துறை அமைச்சராகவும் இருந்தவர் ராஜிவ் காந்தி. ஆண்டர்சன் போபால் வருகை, ம.பி. மாநில முதல்வராக இருந்த அர்ஜுன் சிங்கிற்கும் தெரியாது; மாநில காவல் துறை, ஆண்டர்சனை சட்டப்படி கைது செய்து நடவடிக்கை எடுத்தது. அதற்குப் பிறகு டெல்லியிலிருந்து அர்ஜுன் சிங்கிற்கு, ஒரு தொலைபேசி வந்தது. ஆண்டர்சனை பத்திரமாக திருப்பி அனுப்ப வேண்டும் என்று தொலைபேசியில் பேசியவர் உத்தரவிடுகிறார். மாநில அரசுக்குச் சொந்தமான தனி விமானத்தில் பத்திரமாக ஆண்டர்சன் டெல்லிக்கு அனுப்பி வைக்கப் பட்டார். விமானத்தை ஓட்டிச் சென்ற கேப்டன் எஸ்.ஹசன், விமானத்தில் பயணித்த நபர் யார் என்பதே தமக்குத் தெரியாது என்று கூறுகிறார்.

- இப்போது 'இந்துஸ்தான் டைம்ஸ்' நாளேட் டுக்கு அளித்த பேட்டியில் மூத்த காங்கிரஸ் தலைவரான அர்ஜுன் சிங் இது பற்றி தனக்கென்று எந்த நிலைப்பாடும் இல்லை என்றும், அப்போது மத்தியில் இருந்த ராஜிவ் தலைமையிலான காங்கிரஸ் அரசு தான், இதற்குக் காரணம் என்றும் கூறிவிட்டார். "It was the Central Government decision to provide safe passage to Anderson" (Sunday Express, June 20, 2011) ராஜிவ் காந்தியின் முதன்மைச் செயலாளராக அப்போது இருந்த பி.சி. அலெக்சாண்டர் "பிரதமர் ராஜிவும் முதலவர் அர்ஜுன் சிங்கும் தொடர்பில் இருந் தனர். போபால் நச்சுவாயுக் கசிவுக்குப் பின்னர் யூனியன் கார்பைடு நிறுவனத் தலைவர் வாரன் ஆண்டர்சன் இந்தியாவை விட்டு தப்பித்துச் செல்ல அப்போதைய பிரதமர் ராஜிவ் காந்தி அனுமதி அளித்திருக்கலாம்" என்று கூறியுள்ளார்.



- ஆண்டர்சன், இந்தியாவை விட்டு வெளியேறிய பிறகுதான், அன்றைய பிரதமர் ராஜீவ் காந்திக்கு தெரிவிக்கப்பட்டது என்று காங்கிரசார் செய்து வரும் பொய்ப் பிரச்சாரம், இப்போது ஆதாரங் களுடன் அம்பலமாகி வருகிறது. 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 7 ஆம் தேதி 'இந்து' ஏட்டின் டெல்லி செய்தியாளர் ஜி.கே.ரெட்டி, அந்த ஏட்டின் முதல் பக்கத்தில் எழுதியுள்ள செய்திக் கட்டுரையில் இவ்வாறு குறிப்பிடப்பட் டிருந்தது: "பிரதமரின் முதன்மை செயலாளர் பி.சி. அலெக்சாண்டர், பிரதமர் ராஜீவ்காந்தி யின் கவனத்துக்கு இன்று (டிசம். 7, 1984) இத் தகவல்களைக் கொண்டு வந்தார். ஆண்டர்சனை விடுதலை செய்து, தனி விமானத்தில் பத்திரமாக திருப்பி அனுப்புவதற்கு முன்பே, ராஜீவ் காந்தியிடம், இவை தெரிவிக்கப் பட்டன."

- அடுத்த நாள் டிசம்பர் 8 ஆம் தேதி 'இந்து'வில் ஜி.கே. ரெட்டி இதுபற்றி எழுதியுள்ள மற்றொரு செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட் டுள்ளது.

- "நேற்று (டிசம்பர் 7 ஆம் தேதி) ராஜீவ் காந்தி, ம.பி. மாநிலத்திலுள்ள சாகர் எனும் இடத்தில் தான் இருந்தார். எனவே அர்ஜுன்சிங், ஆண்டர்சனை பிணையில் விடுதலைசெய்து பத்திரமாக அனுப்பிய செய்தியை பிரதமர் ராஜீவிடம் கலந்து பேச வில்லை என்று நம்புவதற்கு வாய்ப்பே இல்லை. ராஜீவ் வேறு மாநிலங்களில் இருந் திருந்தால்கூட அவர்கள் கலந்து பேச முடியாமல் போவதற்கு வாய்ப்புகள் இருந்திருக்கலாம். ம.பி. மாநிலத் திலேயே ராஜீவ் இருந்திருக்கும்போது எப்படி கலந்து பேசாமல், அர்ஜுன் சிங் முடிவெடுத்திருக்க முடியும்?" என்று அந்த செய்தி கூறுகிறது. ('இந்து' ஏடே இப்போது அதை வெளியிட்டு, ராஜிவுக்கு தெரிந்தே நடந்த சம்பவம்தான் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.) ஆண்டர்சனின் இந்திய வருகையை வெளி நாட்டுத் துறை அமைச்சகப் பதிவில் திட்டமிட்டு மறைக்கப்பட்டது.

- அமெரிக்காவின் உளவுத் துறையான 'சி.அய்.ஏ.' இது பற்றி அப்போது தனது ரகசிய அறிக்கை யில், "இந்தியாவின் ராஜீவ்காந்தி அரசாங்கத்தின் தலையீடு காரணமாகவே ம.பி. மாநில ஆட்சி, ஆண்டர்சனை பத்திரமாக திருப்பி அனுப்பியது" என்று குறிப்பிட்டிருப்பதை 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு எடுத்துக் காட்டியுள்ளது. (ஜுன் 12, 2010)

- ஆண்டர்சன் அமெரிக்காவில் நியூயார்க் நகரின் அருகில் தமது பண்ணை வீட்டில் சொகுசாக இருப்பது இந்திய அரசுக்கு தெரியும். ஆனாலும் அவர் தேடப்படுகிற குற்றவாளியாக அறிவிக்கப் பட்டுவிட்டார். அவரை, இந்தியாவுக்குக் கொண்டு வரும் எந்த முயற்சியையும் இந்தியா வில் பா.ஜ.க. ஆட்சியானாலும், காங்கிரஸ் ஆட்சியானா லும் எடுக்கவே இல்லை. 1995 பிப். 9 ஆம் தேதி இந்திய அரசின் செயலாளர்கள் கூட்டத்தில் இது பற்றி விவாதிக்கப் பட்டது. ஆண்டர்சனை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு கோரினால், அமெரிக்கா இந்தியாவுடனான நட்புறவு பாதிக்கும். எனவே அதை வலியுறுத்த வேண்டாம்" என்று முடிவு செய்யப் பட்டது. அந்தக் கூட்டத்தில் உள்துறை செயலாளர் கே.பத்மநாபய்யா, நிதித் துறை செயலாளர் கே.கே.மாத்தூர், ரசாயனம் மற்றும் பெட்ரோலியத் துறை செயலாளர் ஏ.என்.வர்மா உள்ளிட்ட உயர் பார்ப்பன அதிகார வர்க்கம் கலந்து கொண்டது. 2001 இல் வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர் சோலி சோப் ராஜி, ஆண்டர்சனை இந்தி யாவுக்கு கொண்டு வரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம்" என்று அரசுக்கு பரிந் துரைத்தார். ஆனாலும், மக்கள் தந்த அழுத்தத்தின் காரண மாக, 2003 ஆம் ஆண்டு இந்திய அரசு உரிய ஆதாரங்களை, ஆவணங்களை முன் வைக்காமல், அமெரிக்காவிடம், இந்தக் கோரிக்கையை கண்துடைப்புக்காக வைத்தது. அமெரிக்கா உறுதி யாக ஆண்டர்சனை அனுப்ப மறுத்துவிட்டது.

- அணு உலைகள் விபத்து தொடர்பாக நாடாளு மன்றத்தில் சட்டம் ஒன்றைக் கொண்டு வரும் முயற்சிகளில் மன்மோகன்சிங் ஆட்சி தீவிரம் காட்டி வருகிறது. அணுவிபத்து ஏற்பட்டால், அணு உலைகளை வழங்கும் அமெரிக்க நிறுவனங்கள் ரூ.500 கோடி டாலர்களை இழப்பீடாக அளித்தால் போதும் என்று அந்த சட்டம் கூறுகிறது; இதை நிறைவேற்றும் நிலை யில் போபால் வழக்கின் தீர்ப்பு வந்துவிட்டதால், இப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்ற இயலாத நெருக்கடிக்கு மன்மோகன்சிங் ஆட்சி தள்ளப் பட்டுள்ளது. எனவேதான் பாதிக்கப்பட் டோருக்கு இழப்பீடு தருவதில் தீவிரம் காட்டுவது போன்ற நடவடிக்கைகளில் மன்மோகன்சிங் ஆட்சி இறங்கியுள்ளது.

(4 ஆம் பக்கம்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776


## ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பு!

பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டுள்ள ‘குடிஅரசு’ 27 தொகுதிகளும் (11,000 பக்கங்கள்), ‘ரிவோல்ட்’ ஆங்கில தொகுப்பும் (622 பக்கங்கள்) எல்லாவற்றுக்குமான குறுந்தகடும் இணைத்து -

**ரூ.4500/-க்கே கிடைக்கும்.**

*தொடர்புக்கு:* (வரைவோலை/மணியார்டர்)
தி. தாமரைக் கண்ணன், வங்கிக் கணக்கு-எஸ்.பி. 30.455291690, பாரத ஸ்டேட் வங்கி, பாரதிதாசன் பல்கலைகழகக் கிளை. பேசி: 9787313222

*முகவரி:* 1/810, முத்தமிழ் நகர், அடியனூத்து அஞ்சல், திண்டுக்கல்-624003.

குறிப்பு: பார்சலில் பெறுவதற்கு கூடுதலாக ரூ.100 சேர்த்து அனுப்பவும்.


## அன்னூர் பெரியார் இளைஞர் நற்பணி மன்றத்தின் சீரிய பணி

கோவை மாவட்டம், நல்லி செட்டிப் பாளையத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அன்னூர் பெரியார் இளைஞர் நற்பணி மன்றம் சார்பில் இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. மன்றத்தின் தலைவர் என்.ஜோதிராம் தலைமையில் காரே கவுண்டன்பாளையம் ஊராட்சித் தலைவர் திருமதி நவமணி குணசேகரன் நோட்டு புத்தகங்களை வழங்கி சிறப்புரையாற்றினார். தொழி லதிபர் கிருட்டிணமூர்த்தி, குருந்தாசலம், வீராசாமி, துரை வீரன் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். மன்ற தோழர்களும், பொது மக்களும் பெருமளவில் பங்கேற்றனர்.

## வந்த கடிதம்

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ 17.6.2010 இதழ் கண்டேன். பெரியார் சொத்துக்கள்; வழக்கறிஞர் துரைசாமி எழுப்பும் கேள்வி என்னும் தலைப்பிலான செய்தியைப் படித்தேன். அதில் “பெரியார் சொத்துக்கள் அறக்கட்டளைக்குச் சட்டப்படி உரிமை யாவதற்கு அந்தச் சொத்துக்களை பெரியார் அறக்கட்டளைக்கு ஒப்படைப்பதாக (endowed) பத்திரம் எழுதித் தந்திருக்க வேண்டும். அப்படி பெரியார் எதையும் எழுதித் தராத நிலையில் பெரியாரின் சொத்துக்களை அறக்கட்டளைக்கு உரிமை கோர முடியாது. அதை அரசு எடுக்க வேண்டும்” என்று கழகத்தின் மூத்த வழக்கறிஞர் திரு. துரைசாமி அதி அற்புதமாய் அறிவித்துள்ளார். அவருக்கு இலட்சோப இலட்சம் பெரியார் தொண்டர்களின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பெரியார் சொத்துக்களை அரசே ஏற்க வேண்டுமென அடுத்த இதழில் விரிவாக தலையங்கம் எழுத வேண்டுகிறேன்.

**– தங்க சங்கரபாண்டியன், சென்னை–103.**

பெரியார் துண்டு அறிக்கைகள், குடிஅரசு, விடுதலை மற்றும் தன் இடையறா ஓய்வில்லா பயணங்கள் மூலம் தமிழனின் நலத்திற்காய் சிறுக சிறுக சேர்த்த சொத்துக்களை வைத்து சொகுசாய் வாழ்ந்து கொண்டிருக்கிற கூட்டம் எங்கே அவை பறிபோய்விடுமோ என்ற பயத்தின் வெளிப்பாடுதான் அய்யா தங்கராசு அவர்களின் வீட்டில் நடத்திய தாக்குதல்.

**– சி. கோடிநாதன், கோவை.**

## சேலம் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம்

11.4.2010 ஞாயிறு அன்று காலை 10 மணிக்கு மேட்டூர் தாய்த்தமிழ் தொடக்கப்பள்ளியில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், சேலம் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்து கிளைகளிலும், சாதி தீண்டாமைக்கு எதிரான பரப்புரைக் கூட்டங்கள் நடத்துவது எனவும், மே மாதம் இறுதியில் சேலம் மாவட்டத்தில் இரண்டு நாள் பயிற்சி முகாம் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

கோவில்களில் உள் நுழைய அனுமதி மறுப்பு. அஞ்சகலத்தின் அஞ்சற்காரராக பணிபுரிபவர். தலித் என்பதால் கீழே கோணி பையை விரித்து அமர்ந்து பணி புரிகிறார். அஞ்சல் அலுவலகராகப் பணி புரியும் உயர்சாதி இந்து, அவரை அலவலகத்தில் நாற்காலியில் அமர அனுமதிப்பது இல்லை. இங்கு சுடுகாடுகளும் இரண்டு. அவை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கட்டப்பட்டது.

சவ்வாதுபட்டி - காளியம்மன், மாரியம்மன் கோவில் வழிபட மறுப்பு

தண்டபாணி தேனீர்கடை - இரட்டை இருக்கை - இரட்டை சுடுகாடு - முடித்திருத்தகத்தில் முடிவெட்டுவதில்லை. கலையரங்கத்தில் உட்கார அனுமதி இல்லை.

இடையகோட்டை கல்லுப்பட்டி நாயக்கர் தெருவில் தலித்துகள் செருப்பு அணிந்து நடக்கத் தடை

கெரல்லபட்டி - சண்முகம் தேனீர்கடை, ரங்கசாமி தேனீர்கடை, நாயக்கர் (மாட்டு வியாபாரி) தேனீர்கடை - இரட்டைக் குவளை, இரட்டை இருக்கை, இரட்டைச் சுடுகாடு, காளியம்மன் கோவிலில் நுழைய அனுமதி இல்லை.

சிரங்க கவுண்டன்புதூர் - குப்புசாமி தேனீர்கடை, இராசு தேனீர்கடை - இரட்டைக் குவளை, இரட்டை இருக்கை, இரட்டைச் சுடுகாடு, தலித்துகளுக்கு சுடுகாடு இல்லை. காளியம்மன், குப்பணசாமி கோவிலில் நுழைய அனுமதி இல்லை.

தங்கச்சியம்மாபட்டி - துக்கையம்மன் கோவிலில் நுழைய அனுமதி இல்லை.

நீலமலைக்கோட்டை - முத்தாலம்மன் கோவில், காளியம்மன் கோவில் நுழைய அனுமதி இல்லை.

குப்பாயிவலசு - கள்ளிமந்தயம் - செல்லமுத்து தேனீர்கடை, கோழிக்காரர் தேனீர்கடை - இரட்டைக் குவளை, காளியம்மன் கோவிலில் அனுமதி இல்லை. மிதிவண்டியில் செல்ல அனுமதி இல்லை.

பொருளூர் - கள்ளிமந்தயம் - மகாலட்சுமி தேனீர்கடை, ஆண்டவர்தேனீர்கடை, தெண்டனை தேனீர்கடை வையம்பட்டி தேனீர்கடை, கொத்தயத்துக்காரர் தேனீர்கடை, ஆறுமுகம் தேனீர்கடை, முத்துக் கல்யாணி தேனீர்கடை, புளியம்பட்டிக்காரர் தேனீர்கடை, வஞ்சத்தாள் தேனீர்கடை, கணேஷ் ஓட்டல் - இரட்டைக் குவளை, உணவகங்களில் கீழே அமர்ந்து உண்ண வேண்டும். காளியம்மன் கோவில், மங்கையம்மன் கோவில், பெருமாள் கோவில் - அனுமதி இல்லை. இரட்டைச் சுடுகாடு.

கள்ளிமந்தயம் - காளியம்மன், விநாயகர், கன்னிமார், மாயமான், கோவில்களில் நுழைய அனுமதி இல்லை. - சுடுகாடு மூன்று - தலித்துகள் - செட்டியார் - கவுண்டர் என்று தனித்தனியாக.

ஐ.வாடிப்பட்டி - கள்ளிமந்தயம் - சுப்பிரமணி தேனீர்கடை, முத்துச்சாமி தேனீர்கடை, செல்லக்குமார் தேனீர்கடை - இரட்டைக் குவளை, காளியம்மன், மாரியம்மன், விநாயகர் கோவில்களில் நுழைய அனுமதி இல்லை. - இரட்டைச்சுடுகாடு.

ஈகோம்பட்டி - கள்ளிமந்தயம் - பாஸ்கரன் தேனீர்கடை, காளிதாஸ் தேனீர்கடை, சுவாமிநாதன் மைத்துனர் தேனீர்கடை (செட்டியார்). காளியம்மன், துர்க்கையம்மன், விநாயகர் கோயிலில் நுழைய அனுமதி இல்லை. - இரட்டைச் சுடுகாடு.

நீலாகவுண்டன்பட்டி - கள்ளிமந்தயம் - அங்காளம்மன், விநாயகர் கோயிலில் நுழைய அனுமதி இல்லை.

புங்கவலசு - கள்ளிமந்தயம் (தமிழக அரசு கொறடா சக்கரபாணி சொந்த ஊர்) விநாயகர் கோயிலில் நுழைய அனுமதி இல்லை.

பருமருத்துப்பட்டி - பெருமாள், தும்மிசியம்மன், முத்தாளம்மன், பாட்டகேஸ்வரர் ஆகிய கோயிலில் நுழைய அனுமதி இல்லை.

**பட்டியல் தயாரிப்பு: கழகத்தின் களப்பணிக் குழுவினர்**

*(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

- *அமெரிக்காவின் மெக்சிக்கோ கடற்கரைப் பகுதியில் பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனத் தின் கிணறு ஒன்றிலிருந்து எண்ணெய் வெடித்து வெளியேறியதால், கடல் தாவரங்கள், கடல் உயிரினங்கள் பெருமளவில் உயிரிழந்தன. மனித உயிரிழப்பு எதுவும் இல்லை. என்றாலும், அமெரிக்க அதிபர் ஒபாமா, கடந்த மே மாதம் 27 ஆம் தேதி சம்பவம் நடந்த இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆத்திரப்பட்டு, பிரிட்டிஷ் பெட்ரோலிய நிறுவனத்தைக் கடுமையாக சாடி 500 கோடி டாலர் இழப்பீட்டுத் தொகையைக் கேட்டுள்ளார். ஆனால், இந்தியாவின் ராஜீவ்காந்தியும் அவரது ஆட்சியும், பல்லாயிரம் மக்கள் பிணமான உலகின் மிக மோசமான “போபால்ஷிமா”வைப் பற்றிக் கவலைப்படாமல், குற்றவாளிகளை தப்பச் செய்வதிலும், நாட்டு மக்கள் மரணத்தைவிட அமெரிக்காவிடம் நேசக்கரம் நீட்டுவதிலேயே துடிப்புடன் செயல்பட்டனா.*
- *இந்திய பார்ப்பன அதிகார பார்ப்பன வர்க்கம், இந்திய பார்ப்பன நீதிமன்றம், இந்திய பார்ப்பனிய உளவுத்துறை, இந்தியப் பார்ப்பன காங்கிரஸ், இந்தியப் பார்ப்பனியத் தலைமை ராஜீவ், இந்திய பார்ப்பன பனியா சுரண்டல் கும்பல், பன்னாட்டு நிறுவனங்கள், இந்துத்துவ பா.ஜ.க. பார்ப்பன ஆட்சி - என்று அனைத்து ஆளும் வர்க்கங்களும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகவே நிற்கின்றன.*
- ***போபாலை போல் ஒரு நிகழ்வு உலகில் எந்த ஒரு நாட்டிலும் நிகழ்ந்திருந்தாலும், அதை மக்கள் மன்றம் இந்த நாட்டு மக்களைப் போல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்குமா?***
- ***ராஜீவ்காந்தி கொலைக்காக கசிந்துருகும் காங்கிரஸ்காரர்களே! ஈழத் தமிழர்களின் தேசியத் தலைவர் பிரபாகரனை ஈழத்திலிருந்து தமிழ்நாடு கொண்டுவர வேண்டும் என்று கூக்குரல் போடும் “தேசபக்தர்களே!”***
- ***22000 மக்களைப் பிணமாக்கிய ஒரு கோரப் படுகொலைக்குக் காரணமான குற்றவாளிகள் மீது நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன? அவர்களை, இந்தியாவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தாதது ஏன்?***
- ***இந்திய ராணுவத்தை ஈழத்துக்கு அனுப்பி, 2000 மக்களைக் கொன்று குவித்த ராஜீவுக்கு, கண்ணீர் வடிக்கும் தேசிய திலகங்களே!***
- ***இதோ, இன்றைக்கும் ஊனத்தை வாழ்வாக்கிக் கொண்டிருக்கும் இந்த போபால் மக்களுக்கு, நீங்கள் வழங்கிய நீதி என்ன?***
- ***குற்றவாளிகளை தப்பிக்க விட்டது தானா?***
- ***பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய இழப்பீட்டை யும் வழங்காமல், அவர்களுக்கு பட்டை நாமம் சாத்துவது தானா?***
- ***சொந்த நாட்டு மக்களின் பிணங்கள் மீது அமெரிக்க பன்னாட்டு நிறுவனத்துக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு தரும் நீங்கள், இந்தியாவின் தேச பக்தர்களா? அமெரிக்காவின் தேச பக்தர்களா? பதில் சொல்லுங்கள்!***


***(புதுவை – ஆத்தூர் கூட்டங்களில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் விரிவாக்கம்)***


“புரட்சிப் பெரியார் முழக்கம்” **ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 15th July 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2041 | ஜூலை 22, 2010 | புரட்சி 9 | முழக்கம் 28 | விலை: ரூ.2.50

# பெரியார் சொத்துகள் வேகமாக விற்பனை?

பெரியாரின் சொத்துகளை அவசர அவசரமாக விற்பனை செய்யும் முயற்சிகளில் தி.க. தலைவர் கி.வீரமணி இறங்கியிருப்பதாகத் தெரிகிறது. இது பற்றி பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி 'குமுதம் ரிப்போர்ட்டர்' (ஜூலை 22) இதழுக்கு பேட்டி அளித்துள்ளார். பேட்டியிலிருந்து:

"குடிஅரசு இதழில் வெளியான பெரியாரின் கருத்துரைகளை 28 தொகுதிகள் கொண்ட தொகுப்பாக வெளியிட நாங்கள் முயற்சி எடுத்துக் கொண்டோம். அதற்கு எதிராக திராவிடர் கழகத் தலைவர் வீரமணி கடந்த ஆகஸ்ட் 2008 இல் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இடைக்காலத் தடை பெற்றார். அது தொடர்பாக நடந்த மேல்முறையீட்டின்போது, 'பெரியாரின் அறிவுசார் சொத்துரிமை தங்களுக்குச் சொந்தமானது!' என்று திராவிடர் கழகத்தின் சார்பில் நீதிமன்றத்தில் வைக்கப்பட்ட வாதத்தை உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் ஏற்கவில்லை.

'உங்களிடம் உரிமையிருப்பதற்கு எந்த ஆவணம் இருக்கிறது? அந்த ஆவணத்தைக் காட்டினால் மட்டுமே நீங்கள் சொல்வதை நீதிமன்றம் ஏற்கும். அப்படி ஆவணங்கள் எதுவும் இல்லாத காரணத்தால் தாமாகவே அது மக்கள் சொத்தாக மாறி விடுகிறது' என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்புதான் பெரியாரின் சொத்துகள் தொடர்பாக ஒரு தெளிவை எங்களுக்கு ஏற்படுத்தியது. திராவிடர் கழகத்தில் நீண்ட காலம் தன்னை இணைத்துக் கொண்டிருந்தவரும், அதற்காக பல வழக்குகளில் வாதிட்டவருமான வழக்குரைஞர் துரைசாமி, பெரியாரின் எந்தச் சொத்துப் பரிமாற்றமும் அறக்கட்டளைக்கு ஆவணங்கள் வழியாகச் செய்யப்படவேயில்லை என்பதை எங்களிடம் உறுதிப் படுத்தினார். கடந்த ஜூன் 11 ஆம் தேதி சென்னை பிரஸ் கிளப்பில் 'பெரியார் கருத்துரைகள்' புத்தக வெளியீட்டின் போது, 'பெரியாரின் அசையாச் சொத்துகளுக்கான உரிமை யாருக்கு என்பதற்கான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் இல்லாததால், அவை தாமாகவே மக்கள் சொத்தாக மாறிவிடுகின்றன என்பது தான் தற்போதுள்ள சட்ட பூர்வமான நிலை' என்று அவர் பேசினார்.

பெரியாரின் மறைவு வரையில் தனது சொத்துக்களை யாருக்கும் அவர் எழுதி வைக்கவில்லை. பெரியாரின் பெயரில்தான் அவை இருந்தன. சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தைப் பெரியார் பதிவு செய்தாரே தவிர, தனது சொத்துகளை சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்துக்காக அவர் எழுதித் தரவில்லை.

எனவே, பெரியாரின் சொத்துகளுக்கு அந்த அறக் கட்டளை உரிமை கோர முடியாது. சட்டப்படி அதுவும் மக்கள் சொத்தாகத்தான் கருதப்படும். அதனை உடனே அரசு அறிவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நாங்கள் போராடுவோம் என்று எங்கள் 'பெரியார் முழக்கம்' இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

இதுபற்றி அவசர அவசரமாக விவாதித்ததாகக் கூறப்படும் தி.க. தலைமை, பெரியார் பெயரிலிருக்கும் சொத்துகளை விரைவில் விற்றுவிடுவதற்காக ஒரு குழுவை கடந்த 7 ஆம் தேதி ஏற்படுத்தியிருப்பதாக உறுதி செய்யப்படாத சில தகவல்கள் எங்களுக்குக் கிடைத்துள்ளன.

சென்ற மாதம் சென்னை செனாய் நகரில் ஒரு சொத்தும், கடந்த 9 ஆம் தேதி திருவிடைமருதூரில் இரு சொத்துகளும் விற்கப்பட்டுள்ளதாக தி.க. தரப்பிலிருந்தே எங்களுக்குச் செய்திகள் வந்துள்ளன. மக்கள் சொத்தைக் கொள்ளையடிக்கும் ஒரு முயற்சியாகவே இதைக் கருத வேண்டியிருக்கிறது. இது உண்மையாக இருக்குமேயானால் அதனைத் தடுப்பதற்காக நடவடிக்கையை நிச்சயம் எடுப்போம்.

பெரியாரின் சொத்துகள் மக்கள் சொத்தாக மாற்றப் பட்டு, அரசின் கண்காணிப்பில் அது நிர்வகிக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசை நாங்கள் வலியுறுத்தும் விதமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறோம்.

சென்னையிலுள்ள பெரியார் திடல், ஈரோட்டிலுள்ள பெரியார் மன்றம், அதனைச் சுற்றியுள்ள வணிக வளாகம், பத்தாயிரம் சதுர அடியிலான ஒரு மஞ்சள் மண்டி, பல வீடுகள், மணியம்மை ஸ்டோர் என்ற பெயரில் ஒரு கடை என பெரியாருக்குச் சொந்தமான பல சொத்துகள் ஈரோட்டில் உள்ளன. திருச்சி நகரத்தில் 3 ஏக்கர் பரப்பில் பெரியார் மாளிகை, திருச்சி கே.கே. நகர் பகுதியில் 17 ஏக்கர் பரப்பளவு கொண்ட பெரியார் கல்வி வளாகம் ஆகியவை உள்ளன. சேலம் ஏற்காட்டில் ஏரிக்கருகே ஒரு வீடு மற்றும் சில கடைகள் பெரியாரின் சொத்துகளாக உள்ளன. தஞ்சையில் பெரியார் இல்லம் உள்ளிட்ட பல சொத்துகள் உள்ளன.

இவை மேம்போக்காக எங்களுக்குத் தெரிந்த பெரியாரது சொத்துகள். அவரது சொத்துகளில் நாங்கள் அக்கறை காட்டாத காரணத்தால் அது பற்றிய முழு விவரங்கள் எங்களிடம் இல்லை.அவற்றைத் திரட்டிக் கொண்டுள்ளோம். அவை மக்கள் சொத்து. மக்களுக்குச் சேர வேண்டும் என்பதால் நாங்கள் அவற்றில் கவனம் செலுத்துகிறோம். அந்தச் சொத்துக்களைக் காப்பாற்ற முறையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். அதை வலியுறுத்தி நாங்கள் நீதிமன்றம் செல்லப் போகிறோம்" என்றார் கொளத்தூர் மணி.

இது பற்றி தி.க. தரப்பு என்ன சொல்கிறது என்பதை அறிய அதன் தலைவர் கி. வீரமணியைத் தொடர்பு கொள்ள முயன்றோம். நம்மிடம் பேசிய வீரமணியின் உதவியாளர் 'விடுதலை' ஸ்ரீதர், "அவர் சிங்கப்பூர் சென்றிருக்கிறார். திரும்பி வர இரண்டு வாரங்கள் ஆகும். இந்த விஷயத்தில் அவர் வந்து தான் கருத்துச் சொல்ல வேண்டும்" என்றார்.

தி.க. பொதுச்செயலாளர் கலி. பூங்குன்றனிடம் கேட்டபோது அவர், "பேட்டி எல்லாம் தர முடியாது. தலைவர் ஊரில் இல்லை. அவர் வந்துதான் கருத்துச் சொல்ல வேண்டும்" என்றார். 'பெரியார் சொத்துகள் குறித்து பெரியார் திராவிடர் கழகம் வழக்குத் தொடுக்க இருக்கிறதாமே?' என்று நாம் கேட்டபோது, "வழக்கு தொடுத்தால் அது நீதிமன்றத்துக்குத்தான் வரும். அங்கே நாங்கள் பார்த்துக் கொள்வோம்!" என முடித்துக் கொண்டார் அவர். ●

## சிங்களர்கள் வெளியேற்றம்

## கோவையில் கழகப் போராட்டம் வெற்றி

இலங்கையில் இனப்படுகொலை செய்து லட்சக் கணக்கான தமிழர்களை கொன்று குவித்த சிங்கள அரசை சர்வதேச போர் குற்றவாளி என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது. அதை விசாரிக்க குழு அனுப்பியது. அந்தக் குழுவுக்கு இலங்கை அரசு எதிர்ப்பு தெரிவிக்கிறது.

தொடர்ந்து தமிழக மீனவர்களை சிங்கள கடற்படை சுட்டுக் கொன்று குவிக்கிறது. இந்த நிலையில் விளையாட்டு என்ற பெயரில் சிங்களவர்கள் தமிழ் நாட்டில் உலா வருவதை தமிழர்களால் சகித்துக் கொள்ள முடியாது.

உலக தமிழ் செம்மொழி மாநாடு நடந்த கோவை கொடிசியா வளாகத்தில் தனியார் நடத்தும் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் சில சிங்களவர்கள் பங்கேற்கிறார்கள் என்ற செய்தியை அறிந்து, அவர்களை அரசு வெளியேற்ற வேண்டும் இல்லாவிட்டால், 10.7.2010 சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடிசியா அரங்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்தும் என்று பெரியார் திராவிடர் கழகம் சார்பில் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் அறிவித்தார்.

பெரியார் திராவிடர் கழகம் போராட்டம் அறிவித்தவுடன் போட்டியில் பங்கேற்க வந்த இலங்கை போட்டியாளர்கள் யுவன் திசநாயக, நிதின் திசநாயக ஆகியோரை காவல்துறை கொடிசியா வளாகத்திலிருந்து வெளியேற்றியது.

கழகத்தின் முயற்சி வெற்றி பெற்றது. பெரியார் திராவிடர் கழகம் போராட்டத்தைத் திரும்பப் பெற்றது.

## 'ஏர்–டெல்' சேவையைப் புறக்கணிப்போம்!

- இலங்கையில் தமிழினப் படுகொலையை சிங்கள அரசு செய்த காலங்களில் - அந்த அரசுக்கு தகவல் தொடர்பு பரிமாற்றங்களுக்கு உதவியது - 'ஏர் டெல்' அலைபேசி நிறுவனம்.
- ராஜபக்சே அரசின் போர்க் குற்றங்களை மறைக்கவும், 'ஏர் டெல்' சேவை செய்கிறது. இந்திய சர்வதேச திரைப்பட விருது வழங்கும் விழாவை இந்திய தொழில் வணிகக் கூட்டமைப்பான ஃபிக்கி (FICCI) கொழும்பில் முன்னின்று நடத்தியது. இலங்கையில் மனித உரிமை மீறல்களோ, இனப் படுகொலைகளோ ஏதும் நிகழ்ந்துவிடவில்லை என்று, உலகை ஏமாற்றுவதற்காக நடத்தப்பட்டது தான் இந்த விழா. இதை நடத்திய ஃபிக்கி அமைப்பின் தலைவர் ராஜன் பார்த்தி என்பவர்தான். 'ஏர் டெல்' நிறுவனத்தின் உரிமையாளர்.
- இலங்கை இப்போது புதிய பூமியாகிவிட்டதாகவும், அந்நிய முதலீட்டுக்கு நல்ல வாய்ப்புகள் உள்ள நாடு என்றும் விளம்பரம் செய்து ராஜபக்சே அரசை காப்பாற்றத் துடிக்கும் நிறுவனம் 'ஏர்-டெல்'.
- இந்த 'ஏர்டெல்' நிறுவனம் தமிழ்நாட்டில் தமிழர்களின் வர்த்தக சந்தையில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டு, ஈழத் தமிழர் இனப் படுகொலை செய்த 'போர்க் குற்ற' அரசை முட்டுக் கொடுத்து காப்பாற்றத் துடிக்கிறது.
- 'ஏர்டெல்' நிறுவனத்துக்கு பாடம் புகட்டுவது உணர்வுள்ள தமிழ் மக்களின் கடமை.

தமிழர்களே! தமிழகத்தில் 'ஏர் டெல்' சேவையைப் புறக்கணிப்போம்; தமிழர் என்ற உணர்வை வெளிப்படுத்துவோம்!

**தலையங்கம்**

# மீண்டும் சீமான் "தேச விரோதி" ஆகிறார்

மீண்டும் நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் மீது, தேசியப் பாதுகாப்பு சட்டம் பாய்ந்துள்ளது. தமிழக மீனவர்களை அடித்துக் கொல்வது; தாக்குவது; துப்பாக்கியால் சுடுவது; மீன் வலைகளை நாசப்படுத்துவது என்று சிங்களக் கப்பல்படையின் அட்டூழியம் தொடர்கதையாகவே இருந்தாலும் 500க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள், உயிரைப் பலி கொடுத்தும், தடுத்து நிறுத்த முடியாத தி.மு.க. ஆட்சி, இதைத் தட்டிக் கேட்பவர்களை 'தேசத்தின் விரோதிகள்' என்று குற்றம்சாட்டுகிறது. ஓராண்டுக்கு வெளியே வர முடியாத தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை கைகளில் தூக்கிக் கொண்டு, கோரத் தாண்டவமாடுகிறது.

கடந்த காலங்களில் பார்ப்பன முதல்வர் ஜெயலலிதா, இதேபோல் 'பொடா' சட்டத்தைப் பயன்படுத்தி, தமிழின உணர்வாளர்களை சிறைப்படுத்தி மகிழ்ந்தார். அப்போதெல்லாம் ஜெயலலிதாவுக்கு எதிராக மனித உரிமையாளர்களைப் போல் வேடம் போட்டுக் கொண்டு ஜெயலலிதாவைக் கடுமையாக தாக்கிப் பேசியது, இதே தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி தான். எதிர்கட்சியாக இருக்கும்போது மனித உரிமையாளர்களாக நடிப்பவர்கள், ஆட்சி அதிகாரத்துக்கு வந்தவுடன், அடக்குமுறைச் சட்டங்களை கரங்களில் தூக்கிக் கொண்டு நிற்பதை நாட்டு மக்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

1976 ஆம் ஆண்டு அன்றைய இந்திராவின் காங்கிரஸ் ஆட்சி, 'மிசா' எனும் அடக்குமுறை சட்டத்தில் தி.மு.க.வினரை சிறையிலடைத்தபோது, 'மிசா' எதிர்ப்பு வீரர்களாக - தி.மு.க. பவனி வந்தது. மிசாவின் கீழ் கைது செய்யப்பட்டு, விடுதலையானவர்களின் பெயர்களோடு 'மிசா' என்ற அடைமொழியை ஒட்ட வைத்துக் கொண்டார்கள். 'மிசா' ஒழிந்து 'தடா' வந்தபோது, தி.மு.க. அதை எதிர்த்தது. அப்போது - தி.மு.க. எதிர்கட்சி. பிறகு தி.மு.க. மீண்டும் ஆளும் கட்சியாக வந்தபோது மத்திய உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி, மாநில அரசுகளே அடக்குமுறை சட்டங்களைக் கொண்டு வரலாம் என்று ஆலோசனை கூறியபோது, உடனே 'பொடோ' என்ற மாநில அளவிலான அடக்குமுறை சட்டத்தை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தியது - இதே கலைஞர் கருணாநிதி தான். (30.5.1998) மசோதா, குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்குப் போனபோது, குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர். நாராயணன், ஒப்புதல் தராமல் விளக்கம் கேட்ட நிலையில், அம்மசோதா சட்டமாகாமல் தடைபட்டுப் போனது. மீண்டும் 2002 ஆம் ஆண்டில் பா.ஜ.க. ஆட்சி நடந்தபோது, 'பொடா' எனும் அடக்குமுறை சட்டத்தைக் கொண்டு வந்தது (மார்ச் 18, 2002). நாடாளுமன்றத்தில் நிறைவேறிய இந்த சட்டம், மாநிலங்களவையில் காங்கிரஸ் எதிர்ப்பின் காரணமாக தோற்கடிக்கப்பட்டது. பிறகு, இரு அவைகளையும் ஒன்றாகக் கூட்டி, சட்டத்தை நிறைவேற்றினார்கள். அப்போது மத்தியில் பா.ஜ.க. கூட்டணியை ஆதரித்த தி.மு.க. 'பொடா'வையும் ஆதரித்தது. பிறகு பார்ப்பன ஜெயலலிதா 'பொடா'வைப் பயன்படுத்தி, பழ. நெடுமாறன், வை.கோ. உள்ளிட்டோரை கைது செய்தபோது எதிர்க்கட்சி வரிசையில் இருந்த தி.மு.க. 'பொடா' எதிர்ப்பாளராக வலம் வந்தது.

மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது 'பொடா' சட்டம் இல்லாமல் போய்விட்டது. எனவே 'பொடா'வுக்கு மாற்றாக விசாரணையின்றி பிணை வழங்க முடியாமல் சிறையில் அடைக்கும், ஆள்தூக்கி சட்டம் ஏதாவது இருக்கிறதா என்று தேடிப் பிடித்து தேசியப் பாதுகாப்பு சட்டத்தைப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டனர்.

ஏற்கனவே கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் இராமகிருட்டிணன், இயக்குனர் சீமான் உள்ளிட்ட பல தோழர்கள் மீது தி.மு.க. ஆட்சியில் முறைகேடாக பாய்ந்த தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை உயர்நீதிமன்றமே நீக்கம் செய்து அறிவித்தது. கோவை நீலாம்பூர் தேசிய நெடுஞ்சாலையில் இராணுவ வாகனங்கள் மறிக்கப்பட்ட வழக்கில் தேசிய பாதுகாப்பு சட்டத்தை தி.மு.க. ஆட்சி 'தேசபக்தி' பீறிட்டு ஏவினாலும்கூட, மத்திய உள்துறை அமைச்சகமே தலையிட்டு ரத்து செய்ததை நினைவுபடுத்துகிறோம்.

ஒரு காலத்தில் திராவிட நாடு பிரிவினை கேட்ட கட்சி தி.மு.க. பிரிவினை கேட்கும் அமைப்புகள், தேர்தலில் போட்டியிட தடை வரலாம் என்ற நிலை வந்தபோது 1962 இல் திராவிட நாடு பிரிவினையைக் கைவிடுவதாக அண்ணா அறிவித்தார். ஆனால், பிரிவினைக்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன என்றார். அடக்குமுறை சட்டங்களையும் அண்ணா எதிர்த்தார். அண்ணாவின் வழி வந்த தி.மு.க.வின் சட்ட அமைச்சர் துரைமுருகனோ, இறையாண்மைக்கு எதிராக பேசுவோருக்கு தனிச்சட்டம் கொண்டுவரப் போவதாகக் கூறி, தனது 'அதீதமான' தேசபக்தியை வெட்கமின்றி வெளிப்படுத்துகிறார்.

அரசியல் சந்தர்ப்பவாதத்துக்காக அதிகார அரசியல் என்ற ஒரே குறிக்கோளுடன், தன்னுடைய கொள்கை அடையாளங்களை படிப்படியாக அழித்துக் கொண்டே வரும் தி.மு.க., இப்போது கொள்கை அழிவின் விளிம்பு நிலைக்கு வந்து சேர்ந்துவிட்டது.

இந்திய ஒருமைப்பாட்டையும், இந்து பார்ப்பனியத்தையும் வெளிப்படையாக ஏற்றுக் கொண்டவர் ஜெயலலிதா. ஆனால், பெரியார், அண்ணா பெயரைக் கூறிக் கொண்டிருக்கும் தி.மு.க.வோ, ஜெயலலிதாவையும், கதர்ச்சட்டைக்காரர்களையும் விஞ்சக்கூடிய தேச பக்தர்களாக மாறி நிற்பது பச்சையான கொள்கை துரோகம்.

நல்லவேளை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மறைந்துவிட்டார். அவர் உயிருடன் இருந்திருந்தால், "கொலை வாளினை எடடா; மிகு கொடியோர் செயல் அறவே" என்ற வரிகளுக்காக, வன்முறையைத் தூண்டுகிறார் என்று அவரையும் தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் பிடித்துப் போட்டு, இவர்கள் மத்திய அரசிடம் நற்சான்றிதழ் வாங்கி வைத்திருப்பார்கள்.

தமிழ்நாடு மீனவர்கள் காப்பாற்றப்படவேண்டும் என்ற நல்ல நோக்கத்துக்காக எதிரிகளை எச்சரிக்கை செய்யக்கூடிய கருத்துகளை வெளியிடுவது கூட தி.மு.க. ஆட்சியில் தேச விரோதமாக்கப்பட்டுவிட்டது. இராஜபக்சே இதற்காக பூரித்து மகிழ்ந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

தோழர் சீமானைப் பொறுத்தவரை இவை எல்லாம் அவருடைய வளர்ச்சிக்கு ஒரு உரமாகவே பயன்படும் என்பதே நமது கருத்து. அடக்குமுறையால் தோழர் சீமானை படம் போட்டு வளர்த்து எடுக்க தி.மு.க.வே முடிவு செய்துவிட்டது என்றே தோன்றுகிறது. அதுவும் நன்மைக்குதான்.

ஆனாலும், ஒட்டுமொத்த தமிழினத்தையே தலைகுனிய வைத்துள்ளது இந்த அடக்குமுறை சட்டம். சீமான் என்ற தனிமனிதருக்கு எதிரான அடக்குமுறையாக இதைப் பார்க்காமல், தமிழினத்தின் உரிமைக்கு குரல் கொடுப்போருக்கு எதிரான அச்சுறுத்தலாகவே இதைக் கருத வேண்டும். இந்த சட்டத்துக்கு எதிரான கண்டனங்கள் - இயக்கங்கள் வெடித்துக் கிளம்ப வேண்டும்.

# 69 சதவீத இடஒதுக்கீடு தொடர உச்சநீதிமன்றம் அனுமதி

தமிழ்நாட்டிலுள்ள 69 சதவீத இடஒதுக்கீடு தொடர்ந்து நீடிக்க உச்சநீதிமன்றம் ஜூலை 13 ஆம் தேதி ஒப்புதல் தந்து விட்டது. அதே நேரத்தில் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் 50 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கிறார்கள் என்பதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளது. இதற்கு ஓராண்டுகால அவகாசத்தை தமிழக அரசுக்கு உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளது. எனவே தமிழக அரசு இதில் விரைந்து செயல்பட வேண்டியது அவசியமாகியுள்ளது. இதுபற்றி அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் ஊழியர்கள் நலச் சங்க பொதுச் செயலாளர் கருணாநிதி 'குமுதம் ரிப்போர்ட்டர்' வார ஏட்டுக்கு அளித்த பேட்டி ஒன்றில், தமிழக அரசுக்கு கீழ்க்கண்ட யோசனைகளை முன் வைத்துள்ளார்.

"சமூக நீதியின் தலைநகரமாக இருக்கக் கூடிய தமிழகத்தின் ஏறத்தாழ 80 ஆண்டு கால வரலாற்றில் இது முக்கியமான தீர்ப்பு.

உச்சநீதிமன்றம் 1950 இல் வழங்கிய தீர்ப்பு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கப்பட்ட போது வந்த தீர்ப்பு. ஆனால் 2010 இல் வந்த இந்த தீர்ப்பு 50 விகிதத்திற்கு மேல் இடஒதுக்கீடு தொடர்வதற்கு ஒரு மாநிலம் வழிவகை செய்யக் கூடிய தீர்ப்பு.

இந்தியாவில் பல மாநிலங்களில் 50 சதவிகிதத்திற்கும் மேல் இடஒதுக்கீடு கிடையாது. இந்தத் தீர்ப்பின் மூலம் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் தங்கள் மாநிலத்தில் உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப கல்வி, வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்க ஒரு வாய்ப்பினை அளித்திருக்கிறது.

தமிழக பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் தலைவர் நீதியரசர் ஜனார்த்தனம் ஏற்கனவே தமிழக அரசுக்கு ஓர் அறிக்கை தந்திருக்கிறார். அதில், "மத்திய அரசு மக்கள் தொகை கணக் கெடுப்பை எடுத்துவரும் நிலையில், தமிழகத்தில் சாதிவாரியான கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு கடிதம் அனுப்ப வேண்டும். மக்கள் தொகை இரண்டாம் கட்ட கணக்கெடுப்பு 2011 ஆம் ஆண்டு நடைபெறும்போது தமிழகத்தில் சாதிவாரியான கணக்கெடுப்பை நடத்த உதவ கேட்டுக் கொள்ள வேண்டும். தமிழக அரசு தனியாக நடத்தினால் கால தாமதம் மற்றும் 500 கோடி ரூபாய் அளவுக்கு செலவாகும். மத்திய அரசு எடுக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்போடு சேர்த்து எடுத்து விட்டால் எல்லாம் மிச்சப்படும்" என்றும் கூறியிருக்கிறார்.

சாதிவாரி கணக்கெடுப்பின் மூலம் தமிழகத்தில் இருக்கும் பிற்படுத்தப்பட்டோரின் எண்ணிக்கையும், அவர்களில் எத்தனை பேர் டாக்டர்கள், இன்ஜினியர்கள், விவசாயிகள், வறுமை கோட்டிற்கு கீழே இருக்கிறார்கள் என்பது தெரிந்துவிடும்.

1931 ஆம் ஆண்டுக்குப் பிறகு சாதிவாரி கணக்கெடுப்பு நடக்க வில்லை என்று சிலர் சொல்வது தவறு. அதேபோல சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தினால் தேவையற்ற கொந்தளிப்பு ஏற்படும் என்று சொல்வதும் தவறு. ஆங்கிலேயர் காலத்தில் பாகிஸ்தான், வங்கதேசம் உள்ளிட்ட பகுதிகள் இந்தியாவில் இருந்த காலகட்டத்திலேயே இது சாத்தியப்பட்டிருக்கிறது. மேலும் டச்சு ஆதிக்கம் இருந்த புதுச்சேரி மற்றும் கோவா போன்ற பகுதிகள்தான் இந்தப் பட்டியலில் இல்லை. வசதிகள் இல்லாத காலகட்டத்திலேயே சாதிவாரி கணக்கெடுப்பு சாத்தியப்பட்டபோது, அனைத்து வசதிகளும் நிறைந்த இந்தியாவில் இது சாத்தியப்படாதா?

ஒரு ஆண்டுக்குள் அறிக்கை சமர்பிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மத்திய அரசின் கணக்கெடுப்பு முடிவுகள் மூன்று மாதத்தில் வந்துவிடும் என்பதால் நாம் அதை வைத்து அறிக்கை தயாரித்து விடலாம். இதன் மூலம் ஆண்டுதோறும் இடைக்கால நிவாரணம் மூலம் 69 சதவிகித இடஒதுக்கீட்டை பெறுவது தடுக்கப்பட்டு, முழுமையான நிவாரணம் கிடைக்கும்" என்று விளக்கி முடித்தார் கருணாநிதி.

இந்திய அளவில் சமூக நீதியை நிலைநாட்டும் பெருமையை தமிழகம் பெற வேண்டுமானால், அதன் பலன்களை இந்தியா முழுமையும் அனுபவிக்க வேண்டுமானால்... தமிழக அரசு ஒரு வருடத்துக்குள் உச்சநீதிமன்றம் கேட்ட அறிக்கையை தாக்கல் செய்வதில் வேகம் காட்ட வேண்டும் என்பதே சமூக நீதி ஆர்வலர்களின் அவா.

# இளையராசா - சரவணக் குமாரி வாழ்க்கைத் துணை ஏற்பு விழா

நாகை மாவட்டம் மயிலாடுதுறை க. நாகராசன் - பட்டுரோசா ஆகியோரின் இளைய மகனும், நாகை மாவட்ட பெரியார் திராவிடர் கழக அமைப்பாளருமான வழக்கறிஞர் நா. இளையராசா, எம்.காம்., பி.எல்., நாகை மாவட்டம் நாகூர் கி.மகிபநாதன் - இராஜேஸ்வரி ஆகியோரின் இளைய மகள் ம. சரவணக்குமாரி, எம்.ஏ., எம்.காம்., டி.சி.எம்., ஆகியோர் வாழ்க்கைத் துணை ஏற்பு விழா, 11.7.2010 ஞாயிறு காலை 9 மணியளவில் மயிலாடுதுறை வி.ஆர்.எஸ். திருமண மண்டபத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்தது. கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் வாழ்த்துரை வழங்க, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வரவேற்புரையாற்றினார். பல்வேறு அரசியல் கட்சி, இயக்கங்களைச் சார்ந்த தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர். கழக ஏட்டுக்கு மணமக்கள் சார்பில் ரூ.2000 நன்கொடை வழங்கப்பட்டது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

## சென்னை மாவட்டக் கழகத்தினர் 2 ஆம் கட்டப் பரப்புரைப் பயணம்

# கட்சி பேதமின்றி எழுச்சி வரவேற்பு

*சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் சாதி தீண்டாமை ஒழிப்பு இரண்டாம் கட்டப் பரப்புரைப் பயணம் ஜூன் 12 ஆம் தேதி கூடுவாஞ்சேரியில் தொடங்கி, 22 ஆம் தேதி காஞ்சியில் நிறைவடைந்தது.*

*முதல் 3 நாள் நிகழ்வுகள் பெரியார் முழக்கம் இதழில் (ஜூலை 1) ஏற்கனவே வெளி வந்துள்ளது. அதன் தொடர்ச்சியான நிகழ்வுகளின் தொகுப்பு:*

நான்காம் நாளாக - 15.6.10 காலை 9.30 மணியளவில் காணை கிராமத்தில் பரப்புரை தொடங்கியது. முகையூர், அரகண்டநல்லூர் கிராமத்தில் பரப்புரை நடந்தது. இங்குள்ள மக்கள் சமுதாயப் பிரச்சினை குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் பிரச்சாரம் அமைந்துள்ளது என பாராட்டினர். தொடர்ந்து திருக்கோவிலூரில் 12.15 மணிக்கு பரப்புரை நடந்தது. இப்பகுதியிலுள்ள பி.அரசன் (அ.தி.மு.க.) பிரச்சார குழுவிற்கு தேநீர் வழங்கினார். மதிய உணவை சிற்பி இராசன் வழங்கினார்.

மாலை 4.30 மணிக்கு வாணாபுரம் கிராமத்தில் பரப்புரை நடந்தது. மாலை 7.30 மணியளவில் பாக்கம் பெரியார் திடலில் செ.விஜயன் தலைமையில், செ.பிரபு, ச.கா. இளையராஜா, விழுப்புரம் கணேசன், மு.வ. செல்வராசு, ம.குமார் முன்னிலையில் பெரியார் சிந்தனைப் பலகை திறப்பும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. கொ. ஏழுமலை வரவேற்புரையாற்றினார். அன்பு தனசேகரன், இரா. உமாபதி, ச. குமரன், கணியூர் தமிழ்ச் செல்வன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சிற்பி இராசனின் 'மந்திரமல்ல தந்திரமே' நிகழ்ச்சி நடைபெற்றது. கொ. அர்ஜூன் நன்றி கூறினார். இரவு தங்கும் வசதி, காலை உணவு அய்யனார் வழங்கினார். அன்று 6 இடங்களில் பரப்புரை நடந்தது.

நிகழ்ச்சி முழுவதும் திலீபன் பறை இசையோடு நாத்திகன், திருப்பூர் தியாகு, சாதி ஒழிப்பு பாடல்களை பாடினர். ச. குமரன், கணியூர் தமிழ்ச்செல்வன் சிறப்புரையாற்றினர்.

சிற்பி இராசன் பெரியார் சிந்தனைப் பலகையை திறந்து வைத்தார். அன்பு தனசேகரன் கழகக் கொடியேற்றினார்.

16.6.10 ஐந்தாம் நாள் பரப்புரை பயணத்தின் துவக்கமாக காலை 9.45 மணிக்கு மேல்சிறுவன் கிராமத்திலும், 11 மணிக்கு பெருங்குளத்தூர் கிராமத்திலும் பரப்புரை நடந்தது. இப்பகுதி தோழர் சி.முருகவேல் பிரச்சாரக் குழுவிற்கு தேநீர் வழங்கினார். இதையடுதது காலை 12.15 மணிக்கு தானிப்பாடி கிராமத்திலும், மதியம் 1.15 மணிக்கு தண்டராம்பட்டு பேருந்து நிலையம் அருகிலும் பரப்புரை நடந்தது.

தோழர்கள் இராமஜெயம், மகேசுவரன், சக்ரவர்த்தி, ஓவியர் விஜய்வர்மா ஆகிய விடுதலைச் சிறுத்தை தோழர்களும், முரளி மோகன் (தே.மு.தி.க.), ராமையா, ஞானசேகரன் (புதிய வெளிச்சம் அறக்கட்டளை) தோழர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பரப்புரை குழுவிற்கு மதிய உணவு வழங்கினர்.

மாலை 3.30 மணியளவில் திருவண்ணாமலை தேரடி வீதியிலும், மாலை 4.30 மணிக்கு திருவண்ணாமலை அவலூர்பேட்டை மெயின்ரோடு பகுதியிலும் பரப்புரை நடந்தது. மாலை 6 மணிக்கு அவலூர்பேட்டை பேருந்து நிலையம் அருகிலும், மாலை 7.15 மணிக்கு சேத்துப்பட்டு பேருந்து நிலையம் அருகிலும், இரவு 8.30 மணிக்கு வந்தவாசி பேருந்து நிலையம் அருகிலும் பரப்புரை நடந்தது. அன்று 9 இடங்களில் பரப்புரை செய்யப்பட்டது.

நிகழ்ச்சி முழுவதும் சென்னை தோழர் திலீபன் பறை இசையில், நாத்திகன், திருப்பூர் தியாகு சாதி ஒழிப்புப் பாடல்களை பாடினர். ச.குமரன், அன்பு தனசேகரன், சாக்ரடீசு ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர் சிற்பி இராசனின் 'மந்திரமல்ல தந்திரமே' நிகழ்ச்சியும் நடைபெற்றது. இரவு தங்கும் வசதி, உணவு வழங்கினார் தோழர் யுவராஜ்.

17.6.10 - 6 ஆம் நாள் பரப்புரை பயணம் காலை 9 மணிக்கு மங்கலம் மாமண்டூரிலிருந்து தொடங்கியது. மாமண்டூர் பேருந்து நிறுத்தம் அருகில் பரப்புரை நடந்தது. காலை 12 மணிக்கு ஆரணி பேருந்து நிலையம் அருகிலும், மதியம் 1.30 மணிக்கு போளூர் பேருந்து நிறுத்தம் அருகிலும், மாலை 5.30 மணிக்கு செங்கம் போளூர் ரோடு பகுதியிலும் பரப்புரை நடந்தது. இப்பகுதியிலுள்ள சஞ்சய், ஆனந்த் (விடுதலை சிறுத்தை) சிறப்பான வரவேற்பளித்தனர். இந்நிகழ்ச்சியை பார்த்த பாலாஜி, அன்பு தனசேகரன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார்.

மாலை 7.30 மணியளவில் செங்கம் அம்பேத்கர் சிலையருகே பொதுக் கூட்டத்திற்கு சஞ்சய், ஆனந்த் ஏற்பாடு செய்திருந்தார். சஞ்சய் தலைமையில் ஆனந்த், சிவா, மோகன்ராஜ், தங்கராசு, சுந்தரி முன்னிலையில் நடைபெற்றது. அன்பு தனசேகரன் வரவேற்றுப் பேசினார். குமரன் சிறப்புரையாற்றினார். சிற்பி இராசனின் 'மந்திரமல்ல தந்திரமே' நிகழ்ச்சி நடைபெற்றது. சுகுமார் நன்றி கூறினார். 6 இடங்களில் பரப்புரை நடந்தது. புதிய தோழர் பாலாஜி இரவு தங்கும் வசதி, உணவு, காலை உணவு வழங்கினார்.

நிகழ்ச்சி முழுவதும் திலீபன், மனோகரன் இசையில் திருப்பூர் தியாகு, நாத்திகன் சாதி ஒழிப்பு பாடல்களை பாடினர். உமாபதி, அன்பு தனசேகரன் சிறப்புரையாற்றினர்.

## அர்ச்சகர் பயிற்சி முடித்த தோழரின் ஆவேசம்

18.6.10 ஏழாம் நாள் பரப்புரைப் பயணம் காலை 12.15 மணிக்கு திருப்பத்தூர் பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கியது. ம.தி.மு.க. நகரச் செயலாளர் டி. ரகுநாத் தலைமையில் அவைத் தலைவர் எஸ்.சுந்தரம் முன்னிலையில் ஏ.கே.மூர்த்தி, எஸ். விஜயன், கே. துரை, முருகன், டி.எஸ்.கல்யாண சுந்தரம் கலந்து கொண்டு பிரச்சார குழுவிற்கு சால்வை அணிவித்து வரவேற்றனர்.

தொடர்ந்து மதியம் 1 மணியளவில் சோலையார் பேட்டை பெரியார் சிலையருகே பரப்புரை நடந்தது. பெரியாரின் மூத்த தொண்டர் குயில் தாசனின் பகுதி என்பதால் அவரது மாணவர்கள் பொன்னாடை அணிவித்து வரவேற்றனர். பெரியார் சிலைக்கு சிற்பி இராசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அன்பு தனசேகரன் டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செத்தினார். இப்பகுதியில் பிரபு, இரா. புரட்சி நம்பி, முனிரத்தினம், முல்லை வேந்தன், முரளி, கருப்பன் சி.தமிழரசு, அப்துல் காதர் ஆகிய விடுதலை சிறுத்தை தோழர்களும், பா.ம.க. ஒன்றிய செயலாளர் குட்டிமணி தலைமையில் அவைத் தலைவர் இரா. சுந்தர் முன்னிலையில் ப.சந்துரு, விஜயன், பார்த்திபன், சிவக்குமார், காளி ஆகிய தோழர்களும் கலந்து கொண்டனர்.

குயில்தாசன் முக்கனிகளோடு மதிய உணவளித்தார். பரப்புரை குழுவினரிடையே தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டு அறிவுரையும் வழங்கினார். சென்னை கழக நூலகத்திற்கு 2 புத்தகங்கள் வழங்கினார்.

மாலை 4.15 மணிக்கு நாட்றாம்பள்ளி பேருந்து நிலையம் அருகிலும், மாலை 5.45 மணிக்கு வாணியம்பாடி பேருந்து நிலையம் அருகிலும் பரப்புரை நடந்தது. ஆ. புருஷோத்தமன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மாலை 6.30 மணிக்கு வாணியம்பாடி, கோணாமேடு அம்பேத்கர் சிலை அருகே பரப்புரை நடந்தது. தொடர்ந்து மாலை 7.15 மணியளவில் வாணியம்பாடி ஜனதாமேடு பகுதியில் நடந்த பரப்புரை நிகழ்வுக்கு மு.வி.ராஜ்குமார் (விடுதலை சிறுத்தை) ஏற்பாடு செய்தார். மார்க்சிய பெரியாரிய கட்சியைச் சார்ந்த பொதுவுடைமை தியாகு கலந்து கொண்டு சிறப்பித்தார். அன்று 6 இடங்களில் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. இரவு தங்கும் வசதி, காலை உணவு ஆகியவற்றை தமிழரசி, ஆசைதம்பி, குமரேசன் சிறப்பாக ஏற்பாடு செய்தனர்.

19.6.10 எட்டாம் நாள் பரப்புரைப் பயணம் காலை 8 மணிக்கு நெக்குந்தி கிராமத்திலும், காலை 10 மணிக்கு ஆலங்காயம் அம்பேத்கர் சிலை அருகிலும், காலை 11.30 மணியளவில் குருவராஜ பாளையம் கிராமத்திலும், காலை 12.30 மணிக்கு அணைக்கட்டு பேருந்து நிறுத்தம் அருகிலும் சிறப்பாக நடந்தது.

மாலை 4.30 மணிக்கு வேலூர் மண்டித் தெரு பகுதியிலும், 5.30 மணியளவில் வேலூர் சத்துவாச்சாரி பகுதியிலும் நடந்தது. இப்பகுதியை சேர்ந்த பெரியாரின் மூத்த தொண்டர் சண்முகம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நெமிலி காமராசு, அறிவு, திலீபன், பணப்பாக்கம் செல்வம், வேலூர் மன்னார் ஆகியோர் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

மாலை 7.30 மணியளவில் ஆற்காடு பேருந்து நிலையம் அருகே பரப்புரை நடந்தது. பரப்புரையை கேட்ட எஸ்.சீனிவாசன் (அர்ச்சகர் பயிற்சி முடித்து ராணிப்பேட்டை விநாயகர் கோவிலில் அர்ச்சகராக பணிபுரிகிறார்.) பேருந்தில் பயணச் சீட்டு வாங்கிய பின் பெரியார் என்ற வார்த்தையை கேட்டு பேருந்திலிருந்து இறங்கி ஏதோ பெரியார் பற்றிய செய்தி கிடைக்குமென்று பரப்புரை வாகனத்தின் அருகில் வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, பார்ப்பனரல்லாதார் அர்ச்சகராக இருப்பதற்கு பெரியார் தான் காரணம் என்றும், என்னைப் போன்றவர்கள் அர்ச்சகர் பயிற்சி பெற காரணமாக இருந்தவர் தந்தை பெரியார் அவருடைய சிந்தனைகளை பரப்புரை செய்ய தனக்கு ஒரு வாய்ப்பு வேண்டுமென கேட்டு சிறப்புரையாற்றினார். அவரது உரையில் பார்ப்பனரல்லாத தன்னைப் போன்றோர் அர்ச்சகர் பயிற்சியை முடித்த பின்னரும் பார்ப்பன கூட்டம் உச்சநீதிமன்றத்தில் தடை வாங்கி பணியமர்த்த விடாமல் சதி செய்துள்ளதைக் குறிப்பிட்டார்.

"தமிழர்களே, பார்ப்பன கூட்டம் இன்னும் நம்மை அடிமைப்படுத்த நினைக்கிறது. ஆகவே பெரியாரின் வழியில் சாதிகளை கடந்து தமிழர்களாய் ஒன்றுபடுவோம். பார்ப்பன ஆதிக்கத்தை முறியடிப்போம்" என்று ஆவேசமாக உரையாற்றினார். இப்பகுதி தி.மு.க.வின் நகர அமைப்பு செயலாளர் செல்வகணேசன் பரப்புரை குழுவிற்கு பொன்னாடை அணிவித்து வரவேற்றார். பாவேந்தர் பாரதிதாசன் முன்னாள் மாணவர் சங்க தோழர்கள் ஆ.சேட்டு, திருமலை, ஆ.க.காந்திராசன், வேணுகோபால், பாலசத்தியன், சரவணன், பாரதிதாசன் முரளி, ஆனந்த், குமரேசன் ஆகியோர் இரவு தங்கும் வசதி, உணவு, மறுநாள் காலை, மதிய உணவு ஏற்பாடு செய்து சிறப்பாக உபசரித்தனர்.

20.6.10 ஒன்பதாம் நாள் பரப்புரைப் பயணம் காலை 9.30 மணியளவில் அம்மூர்களத்துமேடு பகுதியில் மாவட்ட செயலாளர் ப.திலீபன் தலைமையில் பாவை கணேசன் முன்னிலையில் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அன்பு தனசேகர், குமரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சிற்பி இராசனின் 'மந்திரமல்ல தந்திரமே' நிகழ்ச்சியும் நடைபெற்றது.

தொடர்ந்து மாலை 4.15 மணிக்கு பானாவரம் பேருந்து நிறுத்தம் அருகிலும், மாலை 5.30 மணிக்கு பணப்பாக்கம் பகுதியிலும் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. மாலை 7 மணியளவில் திலீபன் தலைமையில் செல்வம் முன்னிலையில் நெமிலியில் சாதி ஒழிப்பு பொதுக் கூட்டம் நடைபெற்றது. பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், அன்பு தனசேகரன், குமரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார். சிற்பி இராசனின் 'மந்திரமல்ல

(4 ஆம் பக்கம்)

REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# வீரமணி கார் கண்ணாடி சேதம்: கழகத் தோழர்கள் பிணையில் விடுதலை

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, வீட்டில் நிறுத்தி வைத்திருந்த காரின் கண்ணாடிகளை சேதப்படுத்தியதாக கழகத் தோழர்கள் திருவல்லிக்கேணி தமிழ்ச்செல்வன், இராயப்பேட்டை தோழர்கள் கணேஷ், ஜெயக்குமார், மயிலைத் தோழர் சசிகுமார் ஆகியோர் மீது அடையாறு காவல்துறை கைது செய்து வழக்குப் பதிவு செய்தது. அனைவரும் புழல் சிறையில் அடைக்கப் பட்டனர். 13 நாள் சிறைவாசத்துக்குப் பிறகு கடந்த 14 ஆம் தேதி தோழர்கள் அனைவரும் பிணையில் விடுதலையானார்கள்.

# கடலூர் சிறையில் அடைக்கப்பட்ட கழகத்தினர் விடுதலை

தமிழக மீனவர்களைத் தொடர்ந்து கொன்று குவிக்கும் சிங்கள அரசுக்கு கண்டனம் தெரிவித்தும், சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை இழுத்து மூடக்கோரியும், இலங்கை தூதரகத்தின் முன் கண்டன ஆர்ப்பாட்டத்தை கடந்த 14 ஆம் தேதி நடத்த இலங்கை தமிழர் பாதுகாப்புக் கழகம் அறிவித்திருந்தது. மயிலை நாகேசுவரராவ் பூங்கா அருகில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பழ.நெடுமாறன், வைகோ, தா. பாண்டியன், விடுதலை இராசேந்திரன், புதிய பார்வை பத்திரிகை ஆசிரியர் நடராசன் உள்ளிட்டோர் பேசினர். தூதரகத்தை நோக்கி 50 பெண்கள் உட்பட 300 தோழர்கள் ஊர்வலமாக புறப்பட்டபோது காவல்துறை கைது செய்து மயிலாப்பூரில் உள்ள திருமண மண்டபத்தில் வைத்திருந்தது. இரவு 10 மணியளவில் திருமண மண்டபத்துக்கே நீதிபதியை அழைத்து வந்து அனைவரையும் ரிமாண்ட் செய்து புழல் சிறைக்குக் கொண்டு போனார்கள். அங்கு சிறையில் இடமில்லை என்று கூறி, சென்னையிலிருந்து காவல்துறை வேன்களில் கடலூர் சிறைக்கு கொண்டு போகப்பட்டு, விடியற்காலை 4 மணியளவில் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்தப் போராட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தோழர்கள் மனோகரன், ஜான்சன், இளையசிம்மன், டேவிட் பெரியார், கழக ஆதரவாளர் பரஞ்சோதி ஆகியோரும் பங்கேற்று கைதானார்கள். 17 ஆம் தேதி விடியற்காலை 6 மணியளவில் அனைவரும் பிணையில் விடுதலையானார்கள்.

## தஞ்சை வடசேரியில் கழகத் தொடக்க விழா பொதுக்கூட்டம்

தஞ்சை மாவட்டம் ஒரத்த நாடு வட்டம் வடசேரியில் 31.5.2010 திங்கள் கிழமை அன்று பெரியார் திராவிடர் கழக தொடக்க விழா பொதுக் கூட்டம் வடசேரி பேருந்து நிலையத்தில் சிறப்புடன் நடைபெற்றது. மாலை 6 மணி அளவில் தென்சென்னை மாவட்ட கழகத் தோழர் மு.ப.மனோகரன் வரவேற்புரையாற்றினார். தஞ்சை மாவட்ட கழக அமைப்பாளர்சோலை - மாரியப்பன், சிலம்ப வேளாங்காடு கு.பாரி முன்னிலை வகித்தனர். வடசேரி கழகத் தோழர் க.சொ. சிவசுப்பிரமணியன் தலைமை தாங்கினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். கழகப் பேச்சாளர் தூத்துக்குடி பால். பிரபாகரன் தனது உரையில் தமிழகத்தில் நிலவும் தீண்டாமைக் கொடுமைகளை விளக்கிப் பேசினார். சிற்பி இராசனின் மந்திரமல்ல தந்திரமே நிகழ்ச்சி நடந்தது.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தந்திரமே' நிகழ்ச்சி நடைபெற்றது. இராவணன் நன்றி கூறினார். பொது மக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இரவு தங்கும் வசதி, காலை உணவு ஆகியவற்றை திலீபன், செல்வம், காமராசு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

21.6.10 - பத்தாம் நாள் காலை 10 மணியளவில் ஒச்சேரி கிராமத்திலும், காலை 11.15 மணிக்கு காவேரிப்பாக்கம் பகுதியிலும், பகல் 12.15 மணிக்கு ஒலி முகமது பேட்டை பேருந்து நிறுத்தம் அருகிலும் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மாலை 5.15 மணிக்கு காஞ்சி தேரடி அருகிலும் மாலை 6.16 மணிக்கு காஞ்சி ரயில்வே ரோடு பகுதியிலும் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது.

இதனை அடுத்து மாலை 7.30 மணியளவில் சங்கரமடம் பகுதியில் பரப்புரை நடந்தது. இங்கு சிற்பி இராசனின் 'மந்திரமல்ல தந்திரமே' நிகழ்ச்சி நடைபெற்றது. இப்பகுதியில் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சியை சார்ந்த காஞ்சி நகர செயலாளர் கா. பொன்னப்பன், ஜெயப்பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். 6 இடங்களில் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய நிகழ்ச்சி அனைத்திலும் உமாபதியின் பறை இசையில் நாத்திகன், திருப்பூர் தியாகு சாதி ஒழிப்பு பாடல்களை பாடினர். குமரன், கனியூர் தமிழ்ச் செல்வன் சிறப்புரையாற்றினர். இரவு தங்கும் வசதி, உணவு ஆகியவற்றை காஞ்சி மக்கள் மன்ற தோழர்கள் ஏற்பாடு செய்தனர்.

22.6.10 பதினொன்றாம் நாள் பரப்புரைப் பயணம். காலை 10.30 மணிக்கு வாலாசாபாத் பேருந்து நிறுத்தம் அருகிலும், காலை 11.30 மணிக்கு கருக்குப்பேட்டை பகுதியிலும் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. பகல் 12.45 மணியளவில் காஞ்சிபுரம் வள்ளல் பச்சையப்பன் தெருவிலும், மாலை 5 மணிக்கு காஞ்சிபுரம் இரயில்வே ரோடு பகுதியிலும் பரப்புரை நடந்தது.

வடமாவட்டங்களில் சாதி, தீண்டாமைக்கு எதிரான பெரியார் கொள்கை பரப்புரை பயணத்தின் நிறைவு விழா பொதுக் கூட்டம் மாலை 6.30 மணியளவில் காஞ்சிபுரம் வணிகர் தெருவில் டேவிட் பெரியார் தலைமையில் அய்யனார் முன்னிலையில் சிறப்புடன் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். மற்றும் குமரன், அன்பு தனசேகரன், பார்வேந்தன் (விடுதலைச் சிறுத்தைகள்), மல்லை சத்யா (துணைப் பொதுச்செயலாளர் ம.தி.மு.க.), மகேசு (காஞ்சி மக்கள் மன்றம்) ஆகியோர் உரையாற்றினர். இவ்விழாவில் காஞ்சி மக்கள் மன்றத்தினரின் பறை இசையும் பாடல்களும் இடம் பெற்றன.

சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் நடத்திய இரண்டாம் கட்டப் பயணம் நிறைவடைந்தது.

# ஈழத் தமிழர்கள் பூர்வீகக் குடிகளே: "ப.சி." வரலாற்றுப் புரட்டுக்கு மறுப்பு

'இலங்கையில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு (தான்) தமிழர்கள் குடியேறினார்கள்' என்று மய்ய அரசின் உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், குன்றக்குடி மகளிர் கல்வியியல் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பேசியதாக 'நக்கீரன்' இதழில் (ஜூன், 16-18, 2010) குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழத்தின் (இலங்கை) தொல்குடியினர் வேறு வேறு பெயர்களில் வழங்கப்பட்ட தமிழர்கள்தான்; சிங்களர்கள்தான் அங்கு சென்று குடியேறியவர்கள் என்பதே உண்மையான வரலாறு. 'பல நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழர்கள் அங்கு சென்று குடியேறினார்கள்' என்று கூறுவதன் மூலம், ஈழத் தமிழர்களின் தொன்மையை மறைக்க ப.சி. தன் பங்குக்கு முயற்சிக்கிறார் என்றே கருத வேண்டியிருக்கிறது.

தமிழர்களின் தொன்மை வரலாற்றின்படி, ஆப்பிரிக்காவின் தென்முனையிலிருந்து ஆஸ்திரேலியா வரையிலான மிக நீண்ட நிலப்பரப்பு எங்கும் கடலால் பிரிக்கப்படாமல் இருந்தது. இதுவே, பழைய குமரிக்கண்டம் என்றும் அழைக்கப்பட்டது. காலப்போக்கில் ஏற்பட்ட இயற்கையின் மாற்றங்கள் மற்றும் சீற்றங்களால், மிக நீண்ட, ஆனால் ஒரே நிலப்பரப்பாக வசித்தத் தொன்மைத் தமிழர்களின் இடையில் கடல் புகுந்து பிரித்தது.

அதாவது, இன்றைய வட இலங்கைக்கும், தமிழ்நாட்டிற்கும் இடையிலான நிலப்பரப்பு தாழ்ந்து கடல்புகுந்து, தனித்தனி நிலப்பரப்புகளாக மாறின. இவ்வாறு பிளவுபட்டதால், தமிழர்கள் தீவுக்குள் இருக்கும் நிலை ஏற்பட்டது. எனவே, இப்பகுதிகளில் வசிக்கும் தமிழர்களின் முன்னோர்கள், தமிழ்நாட்டில் வசிக்கும் தமிழர்களின் முன்னோர்களைப் போலவே சமகால அளவு தொன்மை வாய்ந்தவர்கள். ப.சி. கூறுவதைப்போல பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு குடியேறியவர்கள் அல்ல.

'ஈழத் தமிழர்கள்' என்று பிற்பாடு அழைக்கப்பட்ட இத்தமிழர்கள், இன்று இலங்கை என்றழைக்கப்படுகின்ற தீவின் பூர்வகுடிகள் ஆவர்.

'குடியேறிய தமிழர்கள்' என்பவர்கள் இவர்களில் இருந்து வேறுபட்ட இரண்டு வகைப்பட்டவர்கள். பிரிட்டிஷ் அரசு இந்தியா, இலங்கை என்ற இரண்டையும் ஆண்டுவந்த காலத்தில், இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்ய ஆட்கள் தேவைப்பட்டனர். அப்போது, மதுரைக்குத் தெற்குப் பகுதிகளில் பஞ்சம் ஏற்பட்டது. அதை வாய்ப்பாகப் பயன்படுத்தி, மிகக் குறைந்த கூலிக்கு இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள், இந்திய வம்சாவழியினரான மலையகத் தமிழர்கள். இது 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி நிகழ்வுகளாகும்.

மற்றொரு வகையினர் தமிழ்நாட்டிலிருந்து வணிகத்திற்காக கொழும்புக்குச் சென்ற நாட்டுக்கோட்டை செட்டியார்களும், திருநெல்வேலி சைவப் பிள்ளைகளும் . இவர்கள் கொழும்புத் தமிழர்கள்.

சில நூறு ஆண்டுகளுக்குள் அங்குச் சென்று குடியேறிய கொழும்புத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் ஆகியோரை மனதில் வைத்து ஈழத் தமிழர்களையும், குடியேறியவர்கள் என்று கூறுவது உள்துறை அமைச்சரின் அறியாமையையே காட்டுகிறது.

இன்னும் மிகச் சரியாகக் கூறுவதென்றால், சிங்களர்கள் என்பவர்களும் அங்குச் சென்று குடியேறியவர்கள்தான். ஒரிசா (அன்றைய கலிங்கம்), மேற்கு வங்கம், பீகார் போன்ற பகுதிகளை உள்ளடக்கியது வங்கநாடு என்று முன்னர் அழைக்கப்பட்டது. சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன் அதன் ஒரு பகுதியை ஆண்ட மன்னனின் மகன் (இளவரசன்) விஜயன். மிகவும் ஒழுங்கீனமான நடத்தையையுடைய விஜயன், அப்பகுதி மக்களுக்கு பெரும் தொந்தரவாக இருந்தான். மக்களின் எதிர்ப்பை சமாளிக்கும் பொருட்டு மன்னன் தனது மகனை 750 பேருடன் ஒரு பெரிய படகில் ஏற்றி அனுப்பி வைத்தான். அப்படகு சுக்கான், பாய்மரம் இல்லாதது. எனவே, காற்றின் திசை நோக்கிச் சென்று இலங்கையின் வடபகுதியை அடைந்தது. அப்போது, அங்கே தொன்மைத் தமிழர்கள் வேறு பெயரில் வாழ்ந்தனர். அவர்கள்தான் விஜயன் குழுவை வரவேற்றனர். சிங்களர்களின் வரலாற்று நூலாகக் கருதப்படுகின்ற மகாவம்சத்தில் இந்நிகழ்வு உள்ளது. அதுமட்டுமன்று, இந்நிகழ்வை உறுதி செய்வது போல், 1982 இல்இலங்கை அரசு வெளியிட்ட தபால் தலையிலும், விஜயனை தமிழ்ப் பெண்ணான குய்வெணி வரவேற்பதுபோல் இடம் பெற்றது. எனவே, சிங்களர்கள், மலையகத் தமிழர்கள், கொழும்புத் தமிழர்கள் (வணிகர்கள்) ஆகிய மூவரும்தான் குடியேறியவர்கள். இன்றைய ஈழத் தமிழர்கள் என்பவர்களே இலங்கையின் தொல் குடியினர்.

'ப.சி.'க்கள் வரலாறுகளைத் திரிக்க வேண்டாம்!

**– ஜஸ்டின் ராஜ்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535


## நன்கொடை

எஸ். சதீஷ் - எஸ். லோகேசுவரி வாழ்க்கைத் துணை ஏற்பு நிகழ்வு 17.7.2010 அன்று காலை 10 மணியளவில் கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், ஏ.கேசவன் முன்னிலையில் நடைபெற்றது. கழக ஏட்டுக்கு மணவிழா மகிழ்வாக ரூ.100 நன்கொடை வழங்கப்பட்டது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்.)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 22nd July 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 ஜூலை 29, 2010 புரட்சி 9 முழக்கம் 29 விலை: ரூ.2.50


# தலித் மக்களுக்கு விபூதிக்கு பதிலாக மண்: ஒட்டன்சத்திரம் பகுதியில் தீண்டாமை – பட்டியல்

*ஒட்டன் சத்திரம் பகுதியில் தீண்டாமையை பின்பற்றி இரட்டைக் குவளைகளை வைத்துள்ள தேனீர்க் கடைகள் தீண்டாமை பின்பற்றும் கோயில்கள், சுடுகாடுகளின் முதல் பட்டியலை ஏற்கனவே 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஜூலை 15 இதழில் வெளியிடப்பட்டது. ஒட்டன்சத்திரம் பகுதியில் தீண்டாமையை பின்பற்றும் வணிக நிறுவனங்களின் இரண்டாவது பட்டியல் இங்கு வெளியிடப்படுகிறது.*

**ஒட்டன் சத்திரம் ஒன்றியம்:**

பெருமாள் கோவில் வலசு, கள்ளி மந்தயம்

1. மல்லீசுவரன் தேனீர் கடை
2. காளியப்பன் தேனீர் கடை.

இரட்டைக் குவளை, இரட்டை பெஞ்ச், காளியம்மன் கோவிலில் நுழைய அனுமதி இல்லை. சுடுகாடு இரண்டு.

**அப்பியம்பட்டி நால்ரோடு, கள்ளி மந்தயம்**

1. திருமலைச்சாமி தேனீர் கடை

இரட்டைக் குவளை, முருகன் சலூனில் முடிவெட்டத் தடை, சுடுகாடு இரண்டு.

2. தியாகராசன் தேனீர் கடை

காளியம்மன் கோவிலில் அனுமதி இல்லை. சுடுகாடு இரண்டு.

**பிச்சைக்கல்பட்டி – மார்க்கம் பட்டி**

காளியம்மன் கோவிலில் அனுமதி இல்லை. சுடுகாடு இரண்டு.

**சிந்தலப்பட்டி**

1. சின்னத்தாயி தேனீர் கடை
2. மயில்சாமி தேனீர் கடை

இரட்டைக் குவளை, காளியம்மன், முத்தாலம்மன் கோவிலில் அனுமதி இல்லை. சுடுகாடு இரண்டு. ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நுழைய அனுமதி இல்லை.

**சின்னக்கரட்டுப்பட்டி**

ராமர் கோவிலில் அனுமதி இல்லை, சுடுகாடு இரண்டு.

**பெரியகரட்டுப்பட்டி**

நாயக்கர் தெருவில் செருப்புடன் நடக்க அனுமதி இல்லை. காளியம்மன் கோவிலில் நுழைய அனுமதி இல்லை. சுடுகாடு இரண்டு.

**அரசப்ப பிள்ளைபட்டி**

1. பெரியசாமி தேனீர் கடை
2. மல்லிகா தேனீர் கடை
3. இரவி தேனீர் கடை

காளியம்மன் கோவில் விநாயகர் கோவில்களில் அனுமதி இல்லை. இங்குள்ள கிளை அஞ்சலகத்தில் பணிபுரியும் அஞ்சல்காரர் தலித் என் பதால் அரசு வழங்கியுள்ள மேசை நாற்காலியை அப்புறப்படுத்திவிட் டார்கள். சாதி இந்துவான அஞ்சல கரும், தலித் ஊழியர் நாற்காலியில் அமரக் கூடாது என்பதற்காக தானும் தரையில் உட்கார்ந்து பணிபுரிகிறார்.

**சாமியார்புதூர்**

1. இராமசாமி தேனீர் கடை
2. முருகேசன் தேனீர் கடை
3. சின்னதம்பி தேனீர் கடை
4. நல்லதம்பி தேனீர் கடை
5. கருப்பையா தேனீர் கடை
6. கருப்புச்சாமி தேனீர் கடை

ஆகிய கடைகளில் இரட்டைக் குவளை, இரட்டை பெஞ்ச், சுடுகாடு மூன்று.

**குத்திலிப்பை**

1. சின்னச்சாமி தேனீர் கடை
2. சுப்பிரமணி தேனீர் கடை
3. பெரியசாமி முதலியார் தேனீர் கடை

இரட்டைக் குவளை, இரட்டை பெஞ்ச், சுடுகாடு இரண்டு, தேநீர் கடையில் தண்ணீர் பானை இரண்டு.

துர்க்கையம்மன் கோவிலில் அனுமதி இல்லை. (இது பழனி தேவஸ்தான கோவில்)

கலையரங்கில் அமர அனுமதி இல்லை. பேருந்து நிலையத்தில் அமர அனுமதி இல்லை. இங்குள்ள அஞ்சலகத்தில் அஞ்சல்காரர் தலித் (அருந்ததியர்) என்பதால் நாற்காலி யில் அமர அனுமதி இல்லை. தரையில்தான் கோணிப் பையில் அமரவேண்டும்.

**சின்னக்காம்பட்டி**

காளியம்மன்கோவிலில் நுழைய அனுமதி இல்லை. சுடுகாடு இரண்டு. இங்கும் கிளை அஞ்சலகத்தில் அஞ்சல்காரர் தலித் (அருந்ததியர்) என்பதால் நாற்காலியில் அமர அனுமதி இல்லை. தரையில் கோணிப் பையில்தான் அமரவேண்டும்.

**எல்லப்பட்டி – மார்க்கம்பட்டி**

காளியம்மன் கோவிலில் அனுமதி இல்லை.

**மாம்பாறை – மார்க்கம்பட்டி**

முனியப்பன் கோவில் (இதுதான் இந்தப் பகுதியிலுள்ள கொங்கு இனத்தைச் சார்ந்த கவுண்டர்கள் கந்து வட்டி தொழில் செய்வதற்கு அனுகூலமான கடவுளாகக் கருதப் படுகிறது. தமிழகம் முழுதுமுள்ள (கொங்கு வேளாளக் கவுண்டர்கள்), இந்தியா முழுதும் உள்ள கந்து வட்டிக் கடைக்காரர்கள் இங்கு கிடாய் வெட்டி நேர்த்திக் கடன் செலுத்துகிறார்கள். நாத்திகர்களாக உள்ள கந்துவட்டி கவுண்டர்கள்கூட இங்கு நேர்த்திக் கடன் செலுத்து கிறார்கள்.)

இங்கு தலித்துகளுக்கு தனி மண்டபம். தலித்துகள் கவுண்டர் வெட்டும் கிடாய் விருந்தில் அனுமதி இல்லை. அப்படி வந்தாலும் அவர் களுக்கு உணவு வெறும் தரையில் தான். அதுவும் தனியாகத்தான்.

இங்கு தலித்துகளுக்கு விபூதி கொடுக்கப்படுவதில்லை. அதற்கு மாற்றாக மண்தான் வழங்கப்படு கிறது.

*(4 ஆம் பக்கம்)*

## 'புரட்சிப் பெரியார் முழக்கம்' செய்தி எதிரொலி

# தலித் அஞ்சலக ஊழியருக்கு நாற்காலி மேசை வந்தது

ஒட்டன்சத்திரம், சேலம் மேட்டூர் உள்ளிட்ட பகுதிகளில் தேனீர்க் கடைகள், சுடுகாடுகள், முடிதிருத்தும் நிலையங்கள், கோயில்களில் நிலவும் தீண்டாமைகளை பட்டியலாக 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வெளியிட்ட பிறகு, உறங்கிய காவல்துறை விழித்துக் கொண்டு, செயல்படத் தொடங்கியுள்ளது.

ஒட்டன்சத்திரம் பகுதியிலுள்ள வெரியப்பூர் கிளை அஞ்சலகத்தில் பணிபுரியும் தாழ்த்தப்பட்ட அஞ்சல் ஊழியர், ஆதிக்கசாதி அதிகாரியுடன் சமமாக உட்காரக் கூடாது என்பதால் மேசை நாற்காலி வழங்காமல் தரையில் உட்கார வைத்து வேலை வாங்கி வருவதை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' சுட்டிக்காட்டியது. காவல்துறையின் சென்னை நகர இணை ஆணையாளரான இரவி, அய்.பி.எஸ். அவர்களின் சொந்த கிராமம் இது. செய்தியைப் படித்த அதிகாரி இரவி, வெரியப்பூரில் உள்ள தனது தந்தையார் முத்துச்சாமி அவர்களிடம் உடனே தொடர்பு கொண்டு இது குறித்துப் பேசியுள்ளார். முத்துச்சாமி அவர்கள் தி.மு.க.வைச் சார்ந்தவர். ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவராக பணியாற்றியவர். அவர் வெரியப்பூர் அஞ்சலகம் சென்று, நேரில் பார்வையிட்டு தரையில் தலித் அஞ்சல் ஊழியர் உட்கார வைக்கப்பட்டுள்ள அவலத்தை நிறுத்துமாறு கேட்டதாக தெரிகிறது.

இப்போது தலித் அஞ்சலக ஊழியருக்கு மேசை நாற்காலி வழங்கப்பட்டு, அதில் அமர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்.

'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏடு வெளியிட்ட பட்டியலில் இடம் பெற்ற அனைத்து தேனீர்க்கடைகளுக்கும், காவல்துறையினர் நேரில் சென்று, இரட்டைக் குவளைகளை அகற்றுமாறு எச்சரிக்கை செய்து வருகிறார்கள்.

**– நமது செய்தியாளர்.**

**தலையங்கம்**

# உறக்கம் கலைய வேண்டும்!

தமிழ்நாட்டின் கிராமங்களில் 'தீண்டாமை'க் கொடுமைகள் நிலவி வருவதை பட்டியலோடு 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வெளியிட்டு வருகிறது. இந்தத் தீண்டாமையைத் தடுத்து உரிய நடவடிக்கை எடுப்பதற்காகவே காவல் துறையில் மனித உரிமைப் பிரிவு என்று ஒன்று இருந்தாலும் அது செயல்படுவதாகத் தெரியவில்லை.

கடந்த முறை இதேபோல் பட்டியலை வெளியிட்டு கழகம் இரட்டைக் குவளைகளை உடைக்கும் போராட்டத்தில் இறங்கியபோது காவல்துறை தீண்டாமைக்கு எதிராக 'தேனீர் விருந்து' எனும் நாடகம் ஒன்றை அரங்கேற்றியது. தீண்டாமைக்கு எதிரான நடவடிக்கைகளில் காவல்துறை முனைப்புக் காட்டி செயல்பட்டிருந்தால், இப்படி நீண்ட பட்டியலை வெளியிடநேர்ந்திருக்குமா? இதுவே அத்துறைக்கு தலைகுனிவு தான்.

தீண்டாமைக்கு அடிப்படையாக இருப்பது சாதிதான். எனவே தீண்டாமை ஒழிப்பை சாதி ஒழிப்பிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. சாதி ஒழிப்பின் அவசியத்தை உணர்ந்து, அதற்காகவே வாழ்நாள் முழுதும் போராடினார் பெரியார். சாதியத்தின் இருப்பு பார்ப்பனியம், மதம், கடவுள் ஆகியவற்றில் உறுதியாக தங்கியிருப்பதை பெரியார் துணிவுடன் எடுத்துக் சொல்லியதற்ககாக அவர் கடும் எதிர்ப்புகளை சந்திக்க வேண்டியிருந்தது.

இப்போது இந்தியா முழுதிலுமே தீண்டாமையும், சாதி வெறியும் தலைவிரித்தாடுவது பற்றிய செய்திகள் வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஒரே 'கோத்திரத்தில்' திருமணம் செய்தவர்களுக்கு கிராம பஞ்சாயத்து மரண தண்டனை வழங்கி வருகிறது. அரியானா மாநிலத்தில் இதற்கு சமூக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாம். அம் மாநிலத்திலுள்ள காங்கிரஸ் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும், வெளிப்படையாகவே இதை ஆதரிப்பதுதான் வெட்கக் கேடானது. அரியானா மாநிலத்தின் முதலமைச்சராக உள்ள புபிந்தர்சிங்ஹீடா, ஒரே கோத்திரத்துக்குள் திருமணம் செய்வது அரியானா மக்களின் பண்பாட்டுக்கு எதிரானது என்றும், அப்படி திருமணம் செய்தவர்கள் படுகொலை செய்வதற்கு 'காப் பஞ்சாயத்து' எனும் சாதிப் பஞ்சாயத்துகளை பொறுப்பாக்க முடியாது என்றும் கூறியிருப்பதோடு உள்துறை அமைச்சர் ப. சிதம்பரத்தை சந்தித்து – ஒரே கோத்திரத்துக்குள் நடக்கும் திருமணத்தை தடைசெய்து இந்துக்களுக்கான திருமண சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கோரிக்கையும் வைத்துள்ளார்.

1946 ஆம் ஆண்டு 'இந்து திருமண இடர்ப்பாடுகளை நீக்கும் சட்டம்' (The Hindu Marriage Disabilities Removal Act) கொண்டு வரப்பட்டது. ஒரே கோத்திரத்தில் நடக்கும் திருமணத்தையோ, அல்லது உட்சாதிக் குழுக்களுக்கிடையே நடக்கும் திருமணத்தையோ தடை செய்ய முடியாது என்று சட்டத்தின் பிரிவு கூறுகிறது. அரியானா காங்கிரஸ் முதல்வரின் அரசியல் எதிரியான இந்திய தேசிய லோக்தள கட்சியைச் சார்ந்த ஓம்பிரகாஷ் சவுதாலாவும் – கட்சி வேறுபாடுகளை மறந்து, முதல்வரின் கருத்தையே வலியுறுத்துகிறார். பஞ்சாப், ராஜஸ்தான், உ.பி., பீகார், ஜார்கண்ட் மாநிலங் களில் ஒரே கோத்திரத்துக்குள் திருமணம் செய்தவர்களை மணமக்களின் குடும்பத்தாரே கொலை செய்து விட்டு, அதற்கு 'கவுரவக் கொலை' என்று பெயர் சூட்டிக் கொள்ளும் வெட்கக் கேடான நிலை தொடர்ந்து வருகிறது. நாற்றமெடுத்து கிடக்கும் இந்து பார்ப் பனீயத்தின் கொடூரத்தை இந்த சம்பவங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டி வருகின்றன.

'சக்திவாகினி' என்ற பெண்கள் உரிமைகளுக்காக செயல்பட்டு வரும் தொண்டு நிறுவனம் உச்சநீதிமன்றத்தில் சாதி – கோத்திரம் என்ற பெயரால் சமூகத்தில் பெண்கள் மீது திணிக்கப்படும். சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள், பழிவாங்குதல், தண்டனைக்கு உட்படுத்துதல் போன்ற கொடுமைகளுக்கு எதிராக, அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரும் பொது நலன் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தது. வழக்கை விசாரணைக்கு ஏற்ற உச்சநீதிமன்றம், கோத்திரத்தின் பெயரால் நடக்கும் கொடுமைகளைத் தடுக்க, அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று விளக்கம் கேட்டு, கடந்த ஜூன் 21 ஆம் தேதி எட்டு மாநில அரசுகளுக்கு (அரியானா, பஞ்சாப், பீகார், உ.பி., ஜார்கண்ட், இமாச்சலப் பிரதேசம், ராஜஸ்தான், மத்திய பிரதேசம்) தாக்கீது அனுப்பியுள்ளது.

ஒரே 'கோத்திரத்துக்குள் திருமணம் செய்வதை' தடை செய்யக் கோரி டெல்லி உயர்நீதிமன்றத்தில் சாதி வெறியோடு தொடரப்பட்ட ஒரு வழக்கு மனுவை, கடந்த ஜூன் 19 ஆம் தேதி தள்ளுபடி செய்த நீதிமன்றம், "எந்த இந்து சாஸ்திரத்தில், ஒரே கோத்திரத்தில் திருமணம் செய்யக் கூடாது என்று கூறியிருக்கிறது? இத்தகைய வழக்குகளால் நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கக் கூடாது" என்று மனுதாரரைக் கண்டனம் செய்தது.

தமிழ்நாட்டில் பஞ்சாயத்துகள் வழியாக சாதி, தீண்டாமை அமுல்படுத்தப்படா விட்டாலும், சமூகத்தில் எழுதப்படாத சட்டமாக நீடிக்கவே செய்கின்றன. ஒப்பீட்டளவில் வடமாநிலங்களைவிட தமிழகம் பரவாயில்லை என்று கூறலாமே தவிர, சமூகத்தில், சாதி – தீண்டாமை, ஆழமாக புரையோடிக் கிடக்கிறது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. நாம் வெளியிடும் பட்டியல்களே அதற்குச் சான்று.

இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், சாதி – தீண்டாமை ஒழிப்புக்கான செயல்பாடுகளை மாநில அரசுகளும், அரசு நிர்வாகமும், அரசியல் கட்சிகளுமே மேற்கொள்ள வேண்டிய கடமையிலிருந்து இனியும் விலகி நிற்கக் கூடாது என்பதை வலியுறுத்துவதற்குத்தான். சாதி – தீண்டாமை ஒழிப்பு – பெரியார், அம்பேத்கர் அமைப்புகளுக்கான வேலை என்ற மனப் போக்கிலிருந்து தமிழக அரசியல் கட்சிகள் விடுபட்டு, தங்கள் கட்சியின் வேலைத் திட்டங்களில் ஒன்றாக அதை இணைத்துக் கொள்ள ஏன் முன்வரக்கூடாது? தமிழக அரசே, சாதி தீண்டாமைக்கு எதிரான பரப்புரையை, இயக்கங்களை ஏன் நடத்தக் கூடாது? தேர்தல் வரும்போது சாதி ஓட்டுகளைக் குறி வைத்து செயல்படுவதும் கட்சி அமைப்புக்குள்ளேயே ஆதிக்கசாதிகளை மய்யப்படுத்துவதும் பார்ப்பனியத்தை உறுதிப்படுத்துவது தானே!

சாதி– தீண்டாமையை நிலைப்படுத்தும் கருத்தியல்களின் செல்வாக்கை சமூகத்தில் வீழ்த்துவதற்கான பரப்புரைகளையும் இயக்கங்களையும் தொடர்ந்து நடத்தப்படாத வரை, சாதி – தீண்டாமை தொடரவே செய்யும். சட்டங்களை அமுல்படுத்த வேண்டியவர்களே அதைச் செய்யாமல், குறட்டை விட்டு உறங்குவது குற்றவாளிகளைப் பாதுகாப்பதே ஆகும்.

பெரியார், அண்ணா பிறந்த மண் என்பதற்கான அடையாளம் சாதி – தீண்டாமைக் கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதுதானே தவிர, அவர்கள் சிலைகளுக்கு பிறந்த நாட்களில் மாலை போடுவது மட்டும் அல்ல!

### வந்த கடிதம்

# 'எங்கள் பணியில் குறுக்கிடாதீர்'

"அசைக்க முடியாத 21 ஆவணங்கள்" என்று தலைப்பிட்டு கழகத்தின் மூத்த வழக்கறிஞர் துரைசாமி எழுதியிருந்த செய்தியைப் படித்தபோது சிரிப்பும், வேதனையும், கோபமும் ஒரு சேர எழுந்தது. தீர்ப்பு வெளி வந்தவுடன் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீது சேறு வாரி இறைக்கும் மின்னஞ்சல் செய்தியை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழில் படித்த போது நெஞ்சுக்குள் ஒருவித கனம். ச்சே என்னடா பெரியாருக்கு நேர்ந்த அவலம்! என்கிற சலிப்புடன் கூடிய கவலை எல்லாமுமாய் சிந்தனைகளை அழுத்தியது. இதற்கு அவர்கள் மொழியிலேயே பதில் தர வேண்டும் என்று எழுந்த கோபத்தை மடை மாற்றியபோதுதான் பொள்ளாச்சியில் குடிஅரசு தொகுப்பினை வெளியிடும் வேலைத் திட்டம். தோழர் வெள்ளிங்கிரியோடு பேசி முடிவானது. ஒரு வழியாக வெளியீட்டு விழாவை எழுச்சியோடு முடித்தவுடன், வழக்கறிஞர் துரைசாமியின் அருமையான கட்டுரைக்குப் பாராட்டும் - மகிழ்ச்சியும் தெரிவிக்க வேண்டும். அதே வேளையில் மின்னஞ்சல் போக்கிலிகளுக்கு ஓர் எச்சரிக்கையும் தர வேண்டும் என்ற எண்ணம் எழவே இந்தக் கடிதத்தை எழுத நேர்ந்தது.

தமிழ்நாட்டின் ஈராயிரமாண்டு அடிமைக்காரிருளை தன் கைத்தடியால் அடித்து அடித்தே வெளுக்கச் செய்த அந்த மாமனிதர் பெரியாரைப் பற்றிய ஒரு முழுமையான வரலாறு உண்டா இந்த மண்ணில் இன்றைக்கு வரைக்கும்?

பெரியார் நடத்திய போராட்டங்கள், அவர் ஏற்ற சிறைக் கொடுமைகள், பெரியாரது பேருழைப்பால் இந்த மண்ணில் நிகழ்ந்த மாற்றங்கள், மக்கள் பெற்ற ஏற்றங்கள் இவைகளைப் பற்றிய ஒரு விரிவான பதிவு உண்டா இந்த மண்ணில்?

"சலிப்பு, ஓய்வு இரண்டும் தற்கொலைக்குச் சமம்" என்று அறிவித்து விட்டு சாகும் வரை மூத்திர வாளிச் சட்டியைத் தூக்கிக் கொண்டு, ஏச்சுக்களையும், எதிர்ப்புகளையும், அவமானங்களையும் சுமந்தவாறு தெருத் தெருவாய் சென்று முழங்கிய அந்த மனிதனின் பேச்சுகளை, ஓயாது எழுதிக் குவிக்கப்பட்ட அவரது எழுத்துகளை நேர்மையாய் தொகுத்து, இந்த மண்ணின் கடைக்கோடி மனிதன் வரைக்கும் கொண்டு சேர்க்கிற பணி நடந்ததா இன்று வரைக்கும்?

கல்விக் கடையும், வட்டிக் கடையும் நடத்திக் கொண்டு, அரசியல் தரகு வேலை பார்ப்பதே முழு நேர ஊழியமாய் ஏற்றுக் கொண்டு திரிகிறவர்கள் திடீரென்று "நான்தான் வாரிசு" என்று கூவிக் கொண்டு தெருவுக்கு வந்தால் பெரியாரையே அறியாத அப்பாவிகூட சிரிப்பதற்கு வெட்கப்படத்தான் செய்வான். ஆனால், எந்தக் கவலையும், இலட்சியமும் இல்லாமல், வீரமணி வந்தார் தெருவுக்குக்கூட அல்ல; வழக்கு மன்றத்திற்கு! அதுவும் 15 லட்சம் இழப்பீட்டுக் கோரிக்கையோடு.

ஒருமுறையல்ல இரண்டாவது முறையாகவும் வழக்கு மன்றம் சொல்லிவிட்டது "மானமும் அறிவும் மனிதற்கு அழகு" என்று. என்ன செய்வது? இப்போது புதிய கூக்குரல் "பிரதான வழக்கு" கேவலம்! பெரியாரின் விரல் பிடித்து நடந்தவருக்கு குறைந்தபட்சம் தன் பக்கத்து நியாயத்தை வலுப்படுத்தும் ஆவணங்களைக்கூட ஒழுங்குப்படுத்தத் தெரிந்திருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

அய்யா "தமிழர்களின்" ஒரே ஒரு தலைவரே! நாங்கள் பெரியாரைப் பார்க்காதவர்கள், பெரியாரோடு பேசிப் பழகாதவர்கள், ஏன் எங்களில் பலர் பெரியாரின் மூச்சடங்கிய பிறகே இங்கு சுவாசிக்கத தொடங்கி யவர்கள்தான். ஆனாலும்கூட சக சூத்திர முண்டம் எவ்வளவு கீழ்த்தர மான கேவலமான எண்ணங்களைக் கொண்டிருந்தாலும் பார்ப்பானுக்கு முன்பாகவோ பார்ப்பான் அறியவோ பார்ப்பான் மகிழவோ வசை பாடி விடக் கூடாது. காட்டிக் கொடுத்துவிடக் கூடாது என்கிற எண்ணத்தில் கருத்தில் இதுகாலம் அமைதியாய் இருந்தோம். எங்களை வழி நடத்துகிற தலைவர்கள் கூட எங்களுக்கு இப்படித்தான் வழிகாட்டி வருகிறார்கள்.

நீங்கள்தான் வழக்கு மன்றம் போனீர்கள். மூக்கறுப்பட்டீர்கள். மேல்முறையீடு என்றீர்கள் எல்லோரும் திசை மாறி சிரித்தார்கள். இப்போது பிரதான வழக்கு என்கிறீர்கள். ஏற்கனவே உங்களது அசைக்க முடியாத 21 ஆவணங்களைப் பார்த்து அதிர்ந்து போன வழக்கு மன்றம் இப்போது மிரண்டுபோய் கிடக்கிறது. இதோடு நிறுத்துவீர்கள் என்றால் கார் கண்ணாடியை உடைப்பது, மின்னஞ்சலில் மிரட்டுவது என்கிற உங்கள் செயல் வேகம் உச்சத்தை அடைகிறது. அந்த மின்னஞ்சல் மிரட்டலுக்கு ஒருவரி சொல்லாவிடில் எனக்கு நிம்மதியே இருக்காது.

ஈழத் தமிழர்களுக்காகவும், அவர்களது விடுதலைக்காகவும் குரல் கொடுத்ததற்கு புலிகளிடமிருந்து பணம் வரல. எங்கள் தலைவர்கள் தடா, பொடா சட்டங்களைத்தான் சந்திச்சாங்க. நீங்க அச்சாணியா இருக்கிற ஆட்சி எங்க மேல தேச பாதுகாப்புச் சட்டம் போட்டுச்சு. கர்நாடக தமிழனுக்காகப் பேசிய தலைவர் பெல்லாரி சிறைக்குத்தான் போனாரு. தமிழ் தமிழர் தமிழ்நாடு என்று பேசினா பணம் கிடைக்காது ஜெயில்தான் கிடைக்கும். உங்கள் தலைவர் மாதிரி வர்ற போற ஆட்சிக் கெல்லாம் சப்பரம் தூக்கி, அச்சாணியா நின்று, கூட்டணித் தரகு வேலை பார்த்தாத்தான் லட்சங்கள் கிடைக்கும். வேந்தர் பட்டம் கிடைக்கும் புரிஞ்சுக்குங்க!

பெரியார் சிந்தனைகளைப் பரப்பாமல், வாழ்வியல் சிந்தனைகளை பரப்புகிறவர்கள் - இனி பெரியார் சிந்தனைகளைக் கைகழுவிவிட்டு, 'வாழ்வியல் சிந்தனைகளை' பரப்பக் கிளம்பிடலாம். இந்த 'தமிழர் தலைவர்கள்' உண்மையான பெரியார் சிந்தனைகளைப் பரப்பும் எங்கள் முயற்சிக்கும் தடை போட வேண்டுமா? பேசாமல், 'உலகத் தலைவர்' என்று பட்டம் சூட்டிக் கொண்டு, "பல்துலக்குவது எப்படி? பாத்ரூம் போவது எப்படி?" என்கிற வாழ்வியல் சிந்தனைகளை பரப்பிக் கொண்டு இருங்கள்!

"துரோகிகள்" என்று பட்டம் சூட்டி வெளியேற்றப்பட்டவர்கள் நாங்கள், பெரியார் கொள்கைகளைப் பரப்பும் கடமைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். எங்கள் பெரியார் பணியில் குறுக்கிடாது, ஒதுங்கிக் கொள்ளுங்கள். இதுவே பெரியார் கொள்கைக்கு நீங்கள் செய்கிற தொண்டாக இருக்கட்டும்.

**– கா.சு. நாகராசன், பொள்ளாச்சி.**

# பொள்ளாச்சியில் 'குடிஅரசு' அறிமுகம்



அறிவுசார் சொத்துரிமை ரூ.15 லட்சம் இழப்பீடு தடையாணை மேல் முறையீடு, துரோகப் பட்டம் போன்ற கூக்குரல்களை எல்லாம் ஒட்டு மொத்தமாய் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, புதைப்பட இருந்த பெரியாரின் குடிஅரசை மக்களிடம் கொண்டு சேர்க்கிற பணியை செவ்வனே செய்து வருகிறது பெரியார் திராவிடர் கழகம்.

கடந்த 14.7.10 புதன் கிழமையன்று பொள்ளாச்சி சக்தி மண்டபத்தில் சமர்பா குமரனின் உணர் விசைப் பாடல்களோடு தொடங்கியது, குடிஅரசு வெளியீட்டு விழா. நகர செயலாளர் வே.வெள்ளிங்கிரி தலைமையில், ஆனைமலை நகர செயலாளர் வே.அரிதாசு முன்னிலையில், வட்ட செயலாளர் கா.சு. நாகராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து கழகப் பரப்புரையாளர் சூலூர் வீரமணி, பகுத்தறிவாளர் பேரவை அமைப்பாளர்கள் மடத்துக்குளம் இரா. மோகன், சி.விசயராகவன், திருப்பூர் மாவட்டத் தலைவர் அ.துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோவை வெ. ஆறுசாமி ஆகியோர் உரையாற்றினர். அதன்பிறகு குடிஅரசு நூல்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்டார். ம.தி.மு.க. மாவட்ட பிரதிநிதி எஸ்.கோபால்சாமி, ஒன்றிய செயலர் சி.கோவிந்தராசு, தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற மாநில இளைஞரணி அமைப்பாளர் டெஸ்மா சிவக்குமார், கா.க.புதூர் தி.மு.க.செயலாளர் கோ.சக்திவேல், திம்மங்குத்து ஊராட்சித் தலைவர் ஜி.சக்திவேல் ஆகியோர் குடிஅரசு பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து கழகத்தின் செயல்பாடுகள், குடிஅரசு தொகுப்புப் பணிகள், தஞ்சை இரத்தின கிரியின் துரோகம், வீரமணியின் வாரிசு உரிமை முழக்கம், நீதிமன்றத் தீர்ப்புகள், தொகுப்பு பணியில் கழகம் சந்தித்த சோதனைகள், கழகத்தின் நோக்கம், தோழர்களின் இலட்சிய உறுதி ஆகியவற்றை கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிட்டிணன், மூத்த வழக்கறிஞர் செ.துரைசாமி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் விளக்கமாகவும், விரிவாகவும் எடுத்துரைத்தனர். இரவு 10 மணி வரை தொடர்ந்த நிகழ்ச்சியில் தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க., இ.கம்யூ., மா.கம்யூ., ஆதித் தமிழர் பேரவை, விடுதலை முன்னணி, விடுதலை சிறுத்தைகள், நேதாஜி இளைஞர் பேரவை, தமிழ் இளைஞர் பொதுநல மன்றம் உள்ளிட்ட கட்சிகள் இயக்கங்களின் தோழர்கள், பொறுப்பாளர்கள் ஆகியோர் திரண்டிருந்து கேட்டனர். திராவிடர் கழகத் தோழர்கள்கூட நான்கு பேர் அரங்குக்கு வெளியே நின்று மொத்த நிகழ்ச்சியையும் கவனித்தனர்.

திருப்பூரில் இருந்து முகில் இராசு, அகிலன் உள்ளிட்ட தோழர்களும், கோவை மாநகர செயலாளர் வே.கோபால், அலுவலகப் பொறுப்பாளர் சா.கதிரவன், தமிழ்நாடு மாணவர்கழக அமைப்பாளர் ந. பன்னீர்செல்வம் உள்ளிட்ட தோழர்களும், பல்லடம் விஜய் மற்றும் தோழர்களும் குடிஅரசு தொகுப்பில் முக்கியப் பங்காற்றிய திண்டுக்கல் தாமரைக் கண்ணன், திருப்பூர் இராவணன், காங்கயம் பாண்டியன், சென்னைத் தோழர்கள் நாத்திகன், விழுப்புரம் அய்யனார் ஆகியோரும் நிகழ்ச்சியில் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பொள்ளாச்சி நகரம், சங்கம்பாளையம், சூளேசுவரன்பட்டி, பிகேஎஸ் காலனி, ஆனைமலை நகரம், சேத்துமடை, காகாபுதூர், ஆத்துப் பொள்ளாச்சி பகுதி கழகத் தோழர்களும், பொறுப்பாளர்களும் இணைந்து ஒரு வார கால இடைவெளியில் திட்டமிட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு குடிஅரசு வெளியீட்டு விழாவை கட்சி அரசியல், சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து அனைத்துத் தமிழர்களையும் பெரியாரியலின் கீழ் ஒருங்கிணைத்து எழுச்சியோடு நடத்தி முடித்தனர்.

நிகழ்ச்சியில் குடிஅரசு வெற்றிக்குப் பாடுபட்ட கழகத்தின் மூத்த வழக்கறிஞருக்கு பொள்ளாச்சி நகர, ஒன்றிய கிளைக் கழகங்களின் சார்பாக நன்றி பாராட்டும் வகையில் கழகத் தலைவர் பொன்னாடை அணிவித்து சிறப்பித்தனர். இறுதியாக ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத் நன்றி கூறி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

**செய்தி: கணேசு**

# மாவோயிஸ்ட் தலைவர் பேட்டி

# உழைக்கும் மக்களை ஆட்டிப் படைக்கும் பார்ப்பனியம்

மாவோயிஸ்ட் கட்சியின் செய்தி தொடர்பாளர் கோபால்ஜி, இலண்டன் பல்கலை மானுடவியல் பேராசிரியர் அல்பாஷாஜார்கண்ட்டில் அளித்த பேட்டி

*அல்பாஷா: சீனாவில் நீண்டகால மக்கள் போர் நடந்தபோது இருந்த நிலைமைக்கும் இந்தியாவிலுள்ள நிலைமைக்கும் இடையே உள்ள முதன்மையான வேறுபாடுகள் என்ன?*

கோபால்ஜி : நாங்கள் உதவி பெறுவதற்காக உலக அளவில் ஒரு சோசலிச நாடோ அல்லது தளமோ இல்லாத நிலையில் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இரண்டாம் உலகப் போருக்குப் பின், பல்வேறு நாடுகளில் எழுந்த தேச விடுதலைப் போராட்டங்கள், ஏகாதிபத்தியவாதிகளை, நேரடியாக ஆளுகின்ற பழைய காலனிய ஆதிக்க முறையைக் கைவிட்டு, புதிய காலனிய முறைகளில் புதிய சுரண்டல் வடிவங்களை மேற்கொள்ளச் செய்தன. இந்தியாவைப் பொறுத்த அளவில், அதிகாரங்கள் அனைத்தும், மய்ய அரசில் குவிக்கப்பட்டுள்ளன. இராணுவ வலிமை மிக்க நாடாக இப்போது இந்தியா இருக்கிறது. அதன் அதிகாரமும் படை வலிமையும் இந்தியாவின் எந்தவொரு மூலை முடுக்கையும் சென்றடையக் கூடியதாக உள்ளன. போக்குவரத்தும் தகவல் தொடர்பும் மிகப் பெரிய அளவில் வளர்ந்துள்ளன.

தங்களுக்கென தனியாகப் படை வைத்துக் கொண்டிருந்த இனக் குழுத் தலைவர்கள் சீனாவின்

(4 ஆம் பக்கம்)

## "கீற்று" இணையதளம் 6 ஆம் ஆண்டின் பயணத்தைத் தொடங்குகிறது

கீற்று இணையதளத்தின் ஆறாம் ஆண்டு தொடக்க விழா 24.7.2010 மாலை 5 மணி அளவில் சென்னை தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் நடைபெற்றது. முதல் அமர்வாக இஸ்லாமியர்கள் மீதான சமூக அரசியல் ஒடுக்குமுறைகள் என்ற தலைப்பில் பாதிக்கப்பட்ட இஸ்லாமிய தோழர்கள் தங்களின் நேரடி வாக்குமூலங்களை பதிவு செய்தனர். எந்த ஒரு குற்றச் செயலிலும் ஈடுபடாத அப்பாவி மக்களை முஸ்லீம்கள் என்ற ஒரே காரணத்துக்காக ஆண்டுக் கணக்கில் தமிழக காவல்துறை சிறையி லடைத்த கண்ணீர் கதைகளைக் கேட்டபோது, அவை இறுக்கமடைந்தது. கொழும்பிலிருந்து வந்திருந்த இஸ்லாமிய தோழர் ஒருவரும் தங்கள் நாட்டில் இஸ்லாமியர்களுக்கு நிகழ்ந்த பாதிப்புகளை விளக்கிப் பேசினார்.

இரண்டாம் அமர்வாக 'கீற்று.காம் பயணமும் இலக்கும்' என்ற தலைப்பில் நடந்த நிகழ்வில் மாலதி மைத்ரி, பாரதி கிருஷ்ண குமார், பாஸ்கர் சக்தி, யுகபாரதி, ஜெயபாஸ்கரன், விடுதலை இராசேந்திரன், சுப. வீரபாண்டியன் ஆகியோர் உரையாற்றினர். 30-க்கும் மேற்பட்ட சிற்றிதழ்களை இணையதளத்தில் ஏற்றி, உலகம் முழுதும் கொண்டு செல்லும் சிறப்பான பணியை - கீற்று இணையதளம் செய்து வருகிறது. 'புரட்சிப்பெரியார் முழக்கம்' ஏட்டை உலகம் முழுதும் வாழும் தமிழர்கள் கீற்று இணையதளத்தின் வழியாக படித்து வருகிறார்கள். எந்த ஒரு கட்டணமும் வாங்காமல் சமூகச் சேவையாகவே தோழர்கள் ரமேஷ், பாஸ்கர், பிரபாகர், பிரியா ஆகிய நால்வரும், இந்தப் பணியை சமூக அக்கறையோடு செய்து வருகிறார்கள். இதற்காக ஒவ்வொரு நாளும் தங்கள், அலுவலகப் பணியையும் செய்து கொண்டு, குறைந்தது 6 மணி நேரம், அவர்கள் உழைத்து வருகிறார்கள். பெரியார் திராவிடர் கழகத்தின் மீது உண்மைக்கு மாறான அவதூறுகளைப் பரப்பி வரும் பேராசிரியர் அ. மார்க்ஸ் போன்றவர்களுக்கு உரிய மறுப்புகளை தெரிவிக்கும் கட்டுரைகளையும் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை கொச்சைப் படுத்தி பேசி வருவோருக்கு, உரிய மறுப்புகளையும், கட்டுரைகளாக 'கீற்று' வெளியிட்டு வருகிறது.

அரசியல், பொருளாதாரம், சமூகம் சார்ந்த, நூற்றுக்கணக்கான கட்டுரைகளை 'கீற்று காம்' வெளியிட்டுள்ளது. தன்னலமற்ற எந்தப் பலனும் கருதாது செயல்படும் 'கீற்று காம்' குழுவினரின் தொண்டை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தனது உரையில் பதிவு செய்தார். கீற்று இணையதளம், அவ்வப்போது, கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறது. வி.பி.சிங் நினைவு நாள்; நளினி விடுதலை; சாதிவாரி கணக்கெடுப்பு; குமுதம் இதழில் ஓவியர் பாலா வரைந்த ஈழம் தொடர்பான கார்ட்டூன்களின் நூல் தொகுப்பு வெளியீடு, ஆகிய நிகழ்ச்சிகளை 'கீற்று' நடத்தியது.

ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கக் கோரி, கணினிப் பொறியாளர்கள் சென்னையில் இரண்டு நாள் நடத்திய உண்ணா விரதப் போராட்டத்திலும் 'கீற்று' இணையதளம் குழுவினர் பங்கேற்று இரண்டு நாட்களும் பல்வேறு தலைப்புகளில் கருத்துரைகள் வழங்கும் நிகழ்வுகளை ஒழுங்கு செய்தனர்.

பெரியாரிய இயக்கங்கள், தலித்திய அமைப்புகள், இடதுசாரி இயக்கங்கள், தமிழ்த் தேசிய அமைப்புகள், மற்றும் சிறுபான்மையினர் நடத்தும் இதழ்களை இணையதளத்தின் வழியாக பரப்பி வரும் கீற்று மதச்சார்ப்பின்மையையும் சாதி ஒழிப்பையும் தனது இலக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

கீற்று இணையதளத்தின் சீரிய பணிகள் தொடர 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வாழ்த்துகிறது. (ஆசிரியர்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேச்சு

# பெரியாரும் அம்பேத்கரும் வழிகாட்டிகள்: வழிபாட்டுத் தலைவர்கள் அல்ல

6.6.2010 ஞாயிறு அன்று மாலை 6 மணிக்கு புதுக்கோட்டை மாவட்டம், கைக்குறிச்சி எனும் கிராமத்தில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா, பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கிராமத்தில் 18 ஆண்டுகளுக்கு முன்பு சாதி கலவரம் ஏற்பட்டு, இதுவரை எந்த கட்சியின் கூட்டமும் நடைபெறவில்லை. சென்னையில் பணிபுரியும் தோழர் அமிர்தலிங்கம் சொந்த ஊரான இப்பகுதியில் பெரியார் திராவிடர் கழகத்தை துவக்கும் முயற்சியாக இப் பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்தார். இவருடன் பணிபுரியும் உடுமலை தமிழ்ச்செல்வன், ஒருநாள் முன்னதாக வந்திருந்து நிகழ்ச்சிக்கான பணிகளை செய்தார்.

திருச்சி குமார் பாடல்களோடு துவங்கிய இப்பொதுக்கூட்டத்தில் சிற்பி இராசன் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சிகளை செய்து காட்டி, மூடப் பழக்கங்களையும், சாமியார் மோசடிகளையும் விளக்கிப் பேசினார். கழகத் தலைவருக்கும், கலந்து கொண்ட பேச்சாளர்களுக்கும் கைக்குறிச்சி தோழர்கள் சால்வை அணிவித்து சிறப்பு செய்தனர். காரல் மார்க்ஸ் வரவேற்புரையாற்றினார். அமிர்தலிங்கம், ரகுபதி, வழக்கறிஞர் நாகமுத்து, தமிழ்ச்செல்வன், வழக்கறிஞர் செந்தாமரை, ஓய்வு பெற்ற வங்கி மேலாளர் பாபு ராசேந்திரன் ஆகியோரை அடுத்து மருத்துவர் ஜெயராமன் சிறப்புரை ஆற்றினார்.

அமிர்தலிங்கம், பழனிவேல் ஆகிய தோழர்கள் பெரியார் தி.க.வில் தங்களை கழகத் தலைவர் முன் இணைத்துக் கொண்டனர். கூட்டத்திற்கு உறுதுணையாக இருந்த தோழர்கள் காரல் மார்க்ஸ், நெப்போலியன், கணபதி, சங்கர், ராசன், மணிமாறன், வீரசேகர சோலை, முத்து, மனோகரன், ரகு, சேகரன், பத்மநாபன் ஆகியோருக்கு கழகத் தலைவர் சால்வை அணிவித்து பாராட்டினார்.

தோழர் கொளத்தூர் மணி உரையில் குறிப்பிட்டதாவது:

“ சமுதாய விடுதலைக்கு போராட்டங்களை தொடங்க வேண்டிய அடித்தளத்தில் இருந்து தொடங்கிய இரண்டு புரட்சியாளர்கள் அம்பேத்கர் மற்றும் பெரியார் அப்படிப்பட்ட தலைவர்களுக்குதான் நாம் பிறந்த நாள் எடுக்கிறோம். பிறப்பு இறப்பு இல்லை என்று சொல்லப்படுகிற கடவுளுக்கு பிறந்த நாள் விழா எடுப்பதில் எந்த பயனும் இல்லை. இந்த தலைவர்களுக்கு முன் எத்தனையோ தலைவர்கள் பிறப்பிற்கு முன்பும், இறப்பிற்கு பின்பும் அடைய கூடிய மோட்சம் நரகம் பற்றித் தான் பேசினர். பல தலைவர்களுக்கு சரியான எண்ணம் இருந்தும்கூட அவர்கள் தேர்ந்தெடுத்த பாதை சரியானதாக இல்லை.

அம்பேத்கருக்கும், பெரியாருக்கும் சில கருத்து முரண்பாடுகள் இருந்த போதிலும், சமுதாய சிந்தனையில் நோக்கம் ஒன்றாகத் தான் இருந்தது. அம்பேத்கர், பெரியார் பற்றி நம் மக்களுக்கு முழுமையாக தெரியப்படுத்தாமல் விட்டுவிட்டனர். காந்தியை மகாத்மா என்று சொல்லாத மூன்றே தலைவர்கள்தான் இருந்தனர். அவர்கள்தான் பெரியார், அம்பேத்கர், ஜின்னா. காந்தியடிகள் வர்ணாசிரமத்தை ஆதரித்தவர். வெகுஜன மக்களுக்கு எதிராக இருந்தார். காந்தியும், காங்கிரசும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு செய்தது என்ன? என்ற நூலில், “காந்தியிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்” என்று அம்பேத்கர் குறிப்பிடுகிறார். நடைமுறையில் இல்லாவிட்டால் தத்துவத்தால் அனைத்து மதங்களும் ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்று கூறுகிறது. ஆனால், இந்துமதம் மட்டும் ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் இல்லை என்று எழுதி வைத்திருக்கிறது. பல சாதிகளாக பிரித்து வைப்பதோடு, ஒருவர் மேல் ஒருவர் என அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி கேள்வி கேட்டவர்கள் தான் இந்த இரண்டு தலைவர்களும். இரண்டு பேரும் இந்தியாவின் சுதந்திரத்தில் நாட்டம் இல்லாமல் இருந்தனர். இருவரும் மனுதர்மத்தை எதிர்த்தனர். இந்து என்று ஒப்புக் கொள்ளக் கூடாது என்று தெரிவித்தனர். எனவே இப்படிப்பட்ட தலைவர்களுக்கு பிறந்தநாள் என்பது வழிபாடாக இருக்கக் கூடாது. அவர்கள் நமது வழிகாட்டிகள். எனவே இவர்களை முழுமையாக தெரிந்துகொண்டு, இவர்கள் வழியில் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு, மற்றவர்களுக்கும் கற்பித்து போராடி ஒன்றிணைவதுதான். நமது கடமையாக இருக்க வேண்டும் என்று பேசினார் தோழர் பழனி நன்றி கூறினார்.

## கழக நிர்வாகக் குழு திருச்சியில் கூடுகிறது

பெரியார் திராவிடர் கழக மாநில நிர்வாகக் குழு ஆகஸ்டு 1 ஆம் தேதி காலை 10 மணிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் திருச்சியில் கூடுகிறது.

இடம்: ராஜா கார்டன் ஓட்டல், திருச்சி (திருச்சி ரயில்வே நிலையம் எதிரில்)

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தவறாது வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– தலைமைக் கழகம், பெரியார் திராவிடர் கழகம்**

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிராமப்புறங்களில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இந்தியாவில் அது போன்ற நிலைமை இல்லை. ஆனால் அருவருப்பான, மீற முடியாத பார்ப்பன தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட சாதி அமைப்பு இந்திய நிலப் பிரபுத்துவ சமூகத்தின் முதுகெலும்பாக இருக்கிறது. அதனால் சமூக - பொருளாதார மற்றும் பண்பாட்டுத் தளங்களில் மிகவும் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

‘சனநாயகம்’ என்று சொல்லப்படுகின்ற கட்டமைப்பில், இந்திய ஆளும் வர்க்கங்கள் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்டு கொண்டிருக்கின்றன. இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் நகர்ப்புற குட்டி முதலாளிய வர்க்கத்தினரும், பெரும் எண்ணிக்கையில் உழைக்கும் வர்க்கத்தினரும் உள்ளனர். இந்தியா பல தேசிய இனங்களைக் கொண்ட நாடு. இவற்றின் வளர்ச்சியில் வேறுபாடுகள் இருக்கின்றன. பழமைவாதச் செயல்களைப் போற்றுவதில் இந்தியாவுக்கு நீண்ட வரலாறு இருக்கிறது. இப் பழமைவாதப் போக்குகள் உழைக்கும் மக்கள் மீது இன்றளவும் குறிப்பிடத்தக்க அளவில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இப்பழமைவாதிகள் இந்தப் பிற்போக்கான ஆட்சியை நியாயப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

**– (எக்னாமிக்கல் பொலிடிக்கல் வீக்லி) இதழ்**
**நன்றி: சிந்தனையாளன்**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கோவிலில் மட்டும் எந்தக் காலத்திலும் மதுவிலக்கு கிடையாது.

**மார்க்கம்பட்டி**

காளியம்மன், முத்தாலம்மன், விநாயகர்கோவில்களில் அனுமதி இல்லை. சுடுகாடு இரண்டு. தலித்துகள் இங்குள்ள ஓடையில்தான் அடக்கம் செய்யப்படுகிறார்கள். மழை காலங்களில் ஓடைகளில் தண்ணீர் வந்தாலும் அதில்தான் அடக்கம் செய்யப் படுகிறார்கள்.

**ஓடைப்பட்டி – அம்பிளிக்கை**

இங்குள்ள கிளை அஞ்சலகத்தில் பணிபுரியும் அஞ்சல்காரர் தலித் என்பதால் தரையில்தான் உட்கார்ந்து பணி புரிகிறார்.

1. பொன்னையன் முதலியார் டீ கடை
2. செங்கோடன் டீ கடை
3. செல்லமத்து டீ கடை
4. செல்வி டீ கடை
5. அத்திக்கோம்பைக்காரர் டீ கடை

இரட்டைக் குவளை, இரட்டை பெஞ்ச், சுடுகாடு இரண்டு. காளியம்மன், முத்தாலம்மன், பகவதியம்மன், பெருமாள் கோவில், விநாயகர் கோவில்களில் அனுமதி இல்லை. இங்குள்ள கலையரங்கில் தலித்துகள் அமர அனுமதி இல்லை.

## ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பு!

பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டுள்ள ‘குடிஅரசு’ 27 தொகுதிகளும் (11,000 பக்கங்கள்), ‘ரிவோல்ட்’ ஆங்கில தொகுப்பும் (622 பக்கங்கள்) எல்லாவற்றுக்குமான குறுந்தகடும் இணைத்து -

**ரூ.4500/–க்கே கிடைக்கும்.**

**தொடர்புக்கு:** (வரைவோலை/மணியார்டர்)
தி. தாமரைக் கண்ணன், வங்கிக் கணக்கு-எஸ்.பி. 30.455291690, பாரத ஸ்டேட் வங்கி, பாரதிதாசன் பல்கலைகழகக் கிளை. பேசி: 9787313222

**முகவரி:** 1/810, முத்தமிழ் நகர், அடியனூத்து அஞ்சல், திண்டுக்கல்-624003.

குறிப்பு: பார்சலில் பெறுவதற்கு கூடுதலாக ரூ.100 சேர்த்து அனுப்பவும்.

**நன்கொடை**

கோபி கழகத்தின் இணையர்களான மா.சிதம்பரம் - பூங்கொடி ஆகியோரின் இரண்டாவது குழந்தைக்கு ‘தம்பி’ எனும் பூ.சி. பெரியார் செல்வம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதன் நினைவாக கழக ஏட்டுக்கு ரூ.100 நன்கொடை வழங்கியுள்ளனர். பெற்றுக் கொண்டோம். நன்றி. (ஆர்.)

**வரப்பெற்றோம்**

‘மானமும் அறிவும் பயிற்சிப் பாசறை’ நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர் தோழர் பிரசந்தாவின் கட்டுரையை தமிழாக்கம் செய்து, ‘நேபாளம் - தேச விடுதலையும் - மக்கள் ஜனநாயகமும்’ என்ற தலைப்பில் 39 பக்கத்தில் சிறு நூலாக வெளியிட்டுள்ளது. விலை: ரூ.15. தொடர்புக்கு : ரூ.9942574499

“புரட்சிப் பெரியார் முழக்கம்” **ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 29th July 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.